













Member of National Ethnic Press and Media Council of Canada

Canada's Other Voices

25 வது வெள்ளி விழா 2021

# UTHAYAN
# உதயன்

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit













உதயம் 1326 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 3, 2021


# "இது தேர்தலுக்குரிய நேரமல்ல." பிரன்ச்சு மொழி தேர்தல் விவாதத்தில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவர் எரின் ஒ'டூல் வாதம்




"இது தேர்தலுக்குரிய நேரமல்ல. நாங்கள் கோவிட்-19 நோயின் தாக்கத்தோடு போராட வேண்டிய காலம்" இவ்வாறு, நேற்று வியாழக்கிழமை மொன்றியால் நகரில் இடம்பெற்ற பிரென்ச்சு மொழி மூலமான தேர்தல் விவாதத்தில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவர் எரின் ஓ டூல் கடுமையாக வாதம் செய்தார்

கனடா மொன்றியால் நகரை தலைமைகமாகக் கொண்டு இயங்கும் டிவிஏ என்னும் பிரென்ச்சு மொழி மூலம் நடத்தப்பெற்ற விவாதத்தின் போது லிரல் கட்சியின் தலைவரும் தற்போதைய பிரதமருமான ஜஸ்ரின் ட்ரூடோ விவாதத்தை நடத்தியவரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது கருக்கலைப்பிற்கு தடைவிதிப்பதை தமது கட்சி ஏற்றுக் கொண்டாலும் முன்னைய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் அதனை எதிர்த்ததாகவும் கூறினார்


*(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)*


# யாழ்ப்பாணத்தில் கொரோனோ தொற்றுக்கு உள்ளாகிய சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸ் உயிரிழப்பு!



கொரோனோ தொற்றுக்கு உள்ளாகியிருந்த சுயாதீன ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸ் உயிரிழந்துள்ளார்.
கொடிகாமத்தை சேர்ந்த பிரகாஸ் , சுயாதீன ஊடகவியலாளராக யாழில். இருந்து வெளி-வரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் , செய்திகள் எழுதி வந்ததுடன் , உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளை கட்டுரைகளை எழுதி வந்தார்.


*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*























# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## வேலை வாய்ப்பு

ஸ்காபுறோ **Thanus Kitchen** நிறுவனத்தில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

1. **Kitchen Cabinet Assemblers**
2. **Painters**
3. **Flooring Workers**
4. **General Help**

அனுபவம் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு:

**(416) 417-0733**

## Tutoring Available

**Private and group tutoring available. Offering help on all subjects up to grade 12. Learn French language (conversation, vocabulary, written). Providing help with your assignments, homework, and school work.**

**Contact: 647-877-6457 or premithira@hotmail.com**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## BASEMENT FOR RENT

**Ajax** நகரில் **Kingston Road / Westney** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் 3 **bedrooms, 2 washrooms, separate entrance** ஆகியன கொண்ட **basement** உடனடியாக வாடகைக்கு உண்டு. **Kitchen, separate laundry, living room & 2 parking spaces** ஆகியனவும் வழங்கப்படும். **Highway** 401க்கு அருகில்.

தொடர்புகளுக்கு: **(437) 772-8199** அல்லது **(647) 539-9680** ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

## DISH WASHERS வேலை வாய்ப்பு

மிசிசாகா நகரில் உள்ள **Indian Restaurant** க்கு முழு நேரம் மற்றும் பகுதி நேரம் **dish washers** தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:

**kumargurunala@gmail.com**
அல்லது
**(647) 619-0237**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**Vaughan** நகரில் உள்ள யன்னல்கள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

**Morning Shift: 6:30 AM - 4:00 PM**
**Evening Shift: 4:30 PM – 2AM**
**Pay Rate: $16-$17**

**PLEASE CALL or TEXT:**
**(437) 246-7299**

## வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள **Rehabilitation Clinic** ஒன்றுக்கு முழு நேர அல்லது பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை.
போதிய ஆங்கில, தமிழ் அறிவு, மற்றும் கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் அவசியம்.

**Email resume to:**
**admin@scarboroughrehab.com**

## வேலை வாய்ப்பு

**Hiring Sewing Machine Operators & General Labour.**
**Full-time Only**
**No Cash Job - Only SIN**
**Possibility to earn up to $22 per hour.**
**Address:**
**Clean Planet**
**5595 Finch Ave. East, Unit #1**
**Scarborough (Markham & Finch)**
**Walk-in or Call:**
**(647) 986-7797**

## திருமண ஏற்பாடுகள் MARRIAGE BROKER

கனடாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மணமக்களை இணைத்து திருமணம் வரையும் அவர்களை அழைத்துச் சென்று இல்லற வாழ்க்கையில் இணைத்திடும் வகையில் நாம் ஏற்பாடுகள் செய்வோம்.
சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

**(416) 505-2764**



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தமிழ்நாட்டில் ‘அகதிகள்’ என்ற அவப் பெயரிலிருந்து ‘விடுதலை’ பெற்ற ஈழத் தமிழ் உறவுகள்

தமிழ்நாட்டில் மிக நீண்ட காலமாக வாழ்ந்துவர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளான இலங்கைத் தமிழ் உறவுகள் அவர்களுக்கு அங்கு ஆட்சியாளர்களினால் சூட்டப்பட்டிருந்த ‘அகதிகள்’ என்ற அவப் பெயரிலிருந்து விடுதலை பெற்றுள்ள நற் செய்தி தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கின்ற விடயம் என்பதை பலரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.
இந்த அறிவிப்பை தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ளமையும் ஒரு நற்காரியமாகவே விளங்குகின்றதைப் பார்க்கின்றோம்.

அகதிகள் எனக் கூற அவர்கள் அநாதைகள் அல்லர். ‘இலங்கை அகதிகள் முகாம் இனி மறுவாழ்வு மையம்’ என அழைக்கப்படும் எனக் கூறிய தமிழக முதல்வர் மு.க. ஸ்ராலினையும், தி.மு.கவையும் பாராட்டாமல் இருக்க எமது மக்கள் பாராட்டவே வேண்டும்.

இந்த வார்த்தைகளின் ஆழத்தில் ‘இலங்கைத் தமிழர்களுக்கு நாம் இருக்கிறோம்’ என்ற செய்தியும் பொதிந்திருக்கிறது. நீண்டதொரு கால இடைவெளியின் பின்னர் தமிழகமும் அதன் ஆட்சி மையமும் இலங்கைத் தமிழர்களை நெகிழ வைத்திருக்கின்றன.

விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட அரசியலோ, விமர்சனம் இல்லாத அரசியலோ, விமர்சிக்கப்படாத தலைவர்களோ, விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட தலைவர்களோ இவ்வுலகில் இல்லை. உலகில் புரட்சிகளை நடத்தி, நாடுகளின் விடுதலைக்கு வித்திட்ட விமர்சனங்களை எதிர்கொள்ளாத எவரும் இன்றில்லை. ஆயிரமாயிரம் விமர்சனங்கள் அனைவர் மீதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு. உலக வல்லரசுகளுடன் போட்டிபோட்டு வளர்ந்து வரும் அரசு. 100 கோடிகளுக்கு மேற்பட்ட மக்களையும், பெருநிலப்பரப்பையும் ஆளுகின்ற ஒரு பெரும் தேசம். அதில் இலங்கையை போன்று பல மடங்குகள் அதிகமான 6 கோடி மக்களுக்கு மேற்பட்டோரையும், பெரு நிலப்பரப்பையும் கொண்ட மாநில அரசே தமிழகம். தமிழக அரசியல் என்பது இந்திய தேசத்தின் அரசியலுக்கும் ஆட்புலத்திற்கும் உட்பட்டது.

இலங்கை தமிழர்களுக்கு இவ்வாண்டில் 108 கோடி மதிப்பில் 3510 வீடுகள் கட்டித்தரப்படும். தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களின் முகாம் வீடுகள், சாலைகள் சீரமைக்கப்படும். இலங்கை தமிழர்கள் முகாம்களில் உள்ள 7,469 பழுதடைந்த வீடுகளும் 231 கோடி ரூபா செலவில் புதிதாகக் கட்டித் தரப்படும். அவர்களது குழந்தைகள் கல்விக்காக 5 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படும். மதிப்பெண் அடிப்படையில் பொறியியல் மற்றும் வேளாண் பொறியியல் இரண்டு பட்டப் படிப்புகளில் சேரும் முதல் 50 மாணவர்களுக்கு, முதுநிலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, கல்வி மற்றும் விடுதி கட்டணத்தை தமிழக அரசே ஏற்கும். இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவது, சொந்த நாட்டிற்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் என உள்ளடக்கிய குழு அமைக்கப்படும். இலங்கை தமிழ் அகதிகளின் குடும்பத்தினருக்கு விலையில்லா எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்பு வழங்கப்படும். இலங்கைத் தமிழர்கள் தொடர்பான வழக்குகள் விரைந்து முடிக்கப்படும் என்ற அறிவிப்புக்களும் வெளியாகியுள்ளன.

# “இது தேர்தலுக்குரிய நேரமல்ல.” நேற்றைய பிரன்ச்சு மொழி தேர்தல் விவாதத்தில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவர் எரின் ஓ டூல் வாதம்



*(முன் பக்கத் தொடர்ச்சி)*

“இது தேர்தலுக்குரிய நேரமல்ல. நாங்கள் கோவிட்-19 நோயின் தாக்கத்தோடு போராட வேண்டிய காலம்” இவ்வாறு, நேற்று வியாழக்கிழமை மொன்றியால் நகரில் இடம்பெற்ற பிரன்ச்சு மொழி மூலமான தேர்தல் விவாதத்தில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சித் தலைவர் எரின் ஓ டூல் கடுமையாக வாதம் செய்தார்.

கனடா மொன்றியால் நகரை தலைமைகமாகக் கொண்டு இயங்கும் டிவிஏ என்னும் பிரன்ச்சு மொழி மூலம் நடத்தப்பெற்ற விவாதத்தின் போது லிரல் கட்சியின் தலைவரும் தற்போதைய பிரதமருமான ஜஸ்ரின் ட்ரூடோ விவாதத்தை நடத்தியவரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது கருக்கலைப்பிற்கு தடைவிதிப்பதை தமது கட்சி ஏற்றுக் கொண்டாலும் முன்னைய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் அதனை எதிர்த்ததாகவும் கூறினார்

அங்கு உரையாற்றிய கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் எரின் ஓ டூல் ”தொற்றுநோய்களின் தாக்கம் அதிகரித்துள்ள போது இது தேர்தலுக்கான நேரம் அல்ல” என்று கூறினார், கட்சித் தலைவர்களிடையே நடைபெற்ற விவாதத்தில் மூன்று கட்டமான தொலைக்காட்சி விவாதங்களின் போது ஆப்கானிஸ்தானின் நெருக்கடி மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் காட்டுத் தீ ஆகியவை தொடர்பாக அரசாங்கத்தால் முழுமையாக கவனம் செலுத்தி முழுமையாக கவனம் செலுத்த முடியவில்லை என்று கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் எரின் ஓ டூல் கூறினார். இதை ஒரு குற்றச்சாட்டாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இடதுசாரி கொள்கைச் சார்புடைய புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், அதே வாக்காளர்களுக்காக லிபரல் கட்சியுடன் போட்டியிடுகிறார் என்றும் இவ்வாறு மற்றக் கட்சியின் வாக்குகளைப் பெறுவதற்காக நடத்தப்படும் இந்த தேர்தல் நாட்டுக்கு அவசியமற்றது என்று நான் நினைக்கிறேன்.” என்றார்

என்டிபி கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் தனது வாதத்தின்போது ட்ரூடோ அவர்கள் இந்த தேர்தலில் பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றை வெற்றி கொள்ளவே தேர்தலுக்கு அழைப்பு விடுத்ததாக குற்றம் சாட்டினார். அத்துடன் அவர் நினைத்தது நடக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த பிரதமரும் லிபரல் கட்சித் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ “சிறுபான்மை மக்கள் பாதுகாப்பற்றவர்கள் என்பதால், கனடாவில் ஜனநாயகத்தை தேர்தல்களால் பாதுகாக்க முடியாது என்று கூறுவது ”ஆபத்தமானது. எங்கள் ஜனநாயகம் வலிமையானது ” என்றும் பதிலளித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையத்தை அமைக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல்



மன்னார் மாவட்டத்தில் கொவிட்-19 19 மரணங்கள் தற்போது அதிகரித்துச் செல்லும் நிலையில் சடலங்கள் வவுனியாவில் உள்ள மின் தகன நிலையத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள மையினால் மாவட்டத்தில் உள்ள அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (31) காலை இடம்பெற்ற அவசர கலந்துரையாடலை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது கொவிட்-19 தொற்றும் மரணங்களும் அதிகரித்துச் செல்லும் சூழ் நிலையில், மன்னார் மாவட்டமும் இதற்கு விதிவிலக்கு இல்லை என்ற வகையில் ஏனைய மாதங்களை விட ஆகஸ்ட் மாதத்தில் கொவிட் தொற்றாளர்களும், மரணங்களும் அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் ஒரே நாளில் நான்கு கொவிட்-19 மரணங்களும் இடம் பெற்றுள்ளது. இந்த சூழ்நிலையில் நாங்கள் இறந்தவர்களின் உடலை மின் தகனம் செய்வதற்கு வவுனியாவிற்கு கொண்டு சென்றோம்.

தற்போதைய சூழ்நிலையில், வவுனியாவில் சடலங்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில், ஏனைய மாவட்டங்களில் இருந்தும் சடலங்கள் தகனம் செய்ய வவுனியாவிற்கு கொண்டு செல்லப்படும் நிலையில் வவுனியாவில் உள்ள மின்



தகன இயந்திரத்தின் செயல்திறன் குறைவடைந்துள்ள நிலையிலும், குறித்த விடயம் எமக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தங்களின் முன் அனுமதி இன்றி சடலங்களை வவுனியா தகன நிலையத்திற்கு கொண்டு வர வேண்டாம் என எங்களுக்கு தெரியப்படுத்தி உள்ளனர். இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அவசர கலந்துரையாடலை செவ்வாய்க்கிழமை (31) மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்தோம்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், செயலாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இடம் பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக மின் தகன நிலையத்தை மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயான பகுதியில் அமைக்க முடிவு எடுத்துள்ளோம்.

மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும், வாகனத்திற்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதினால் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யவும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. தேவையான நிதியை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகள் தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்குவதாக தெரிவித்துள்ளனர். நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள்,தனவந்தர்கள் முன் வந்து உதவி செய்ய முன் வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (31-08-2021)**

# சட்டத்திற்கு முரணாக நீதி அமைச்சர் உண்மையை மறைக்க முயல்கின்றார்

## எம்.ஏ.சுமந்திரன் M.P



காணாமல் போனோரை கண்டறியும் ஆணைக் கெழுவின் முக்கிய விடயம் காணாமல்போனவர்கள் எப்படி காணாமல் போனார்கள் என்பதனை கண்டு பிடிப்பதுதான் அதன் முக்கியமான பணி எனச் சட்டத்தில் கூறியிருக்க நீதி அமைச்சரின் கூற்று சட்டத்திற்கே முரணானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் புதிய ஆணையாளர் ஓய்வு பெற்ற நீதியரசர் உபாலி அபயரத்ன வந்த பின்பு இடம்பெற்ற மெய்நிகர் வழி கலந்துரையாடல் நேற்று இரவு 7 மணிமுதல் 8 மணிவரை இடம்பெற்றது. இதில் நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேன் ராகவன், ஆகியோரின் உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில், காணாமல. ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கான சட்ட மூலத்தில் இந்த அலுவலகம் என்ன என்ன விடயம் ஆற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் முக்கிய விடயம் காணாமல்போனவர்கள் எப்படி காணாமல் போனார்கள் என்பதனை கண்டு பிடிப்பதுதான் முக்கியமான பணி.

அந்த சட்டத்தின் கீழ் ஆணையாளர்களை நியமித்து விட்டு அவர்கள் செய்ய வேண்டிய முக்கிய பணியை செய்யத் தேவை இல்லை என்பது அந்தச் சட்டத்திற்கே முரணானது. நீதி அமைச்சரே இப்படி கூறியிருக்க முடியாது சட்டத்திற்கு முரணாகவும் செயல்பட முடியாது.

இதேநேரம் தமிழ் கட்சிகள் இலாபம. பெற முயல்வதாக கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏன் அதே தமிழ்க் கட்சியிடம் வந்து நியமனம் பெற கெஞ்சினார் எனத் தெரியவில்லை. எமது மக்களின் காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான நீதியை தேடுவது, அவர்களிற்கு என்ன நடந்தது என உண்மையை கண்டறிவது. அவர்களிற்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப்படாமல் நல்லிணக்கம் ஏற்படுத்த முடியாது. அதாவது உண்மையை மறைத்து செயல்பட இந்த அலுவலகம் உருவாக்கப்படவில்லை. இதேநேரம் இழப்பீடு கொடுப்பது இவர்கள் வேலை அல்ல என்றார்.

**(31-09-2021)**



# வவுனியாவில் அதிகரிக்கும் கொரோனா தொற்று – நால்வர் மரணம்

வவுனியாவில் மேலும் 299பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில செவ்வாய்க்கிழமை (31) இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 299பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் பத்தினியார்மகிழங்குளம், நெடுங்குளம், கோவில்குளம், குடியிருப்பு, ஆகிய பகுதிகளை சேர்ந்த நால்வர் கொரோனா தொற்றால் சாவடைந்துள்ளனர்.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

**(31-8-2021)**

# வடமராட்சியில் 100 வயது முதியவர் உள்ளிட்ட இருவர் கொரோனோவால் மரணம்!

வடமராட்சியில் 31-8-2021 அன்று 100 வயது முதியவர் உள்பட இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 100 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 245ஆக உயர்வடைந்துள்ளது.

**(31-8-2021)**

# உணவுப் பற்றாக்குறை: அபாயகரமான பாதையில் செல்லும் இலங்கை

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



**"தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்"**
**- மகாகவி சுப்பிரமணிய பாரதி**

இந்த வாரம் இருமுறை மகாகவி எனது நினைவில் வந்து போனார். முதலாவது ஒரு ஃபேஸ்புக் பதிவு. இலங்கையின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான முருகன் சிவலிங்கம் அவரது பக்கத்தில் செய்த பதிவு.

"பாரதி பெயரில் முதல் பள்ளிக்கூடம்...!
பாரதி ராமசாமி - பதுளை

இப்படித் தலைப்பிட்டு தான் ஐயா முருகன் சிவலிங்கம் அந்த பதிவை செய்திருந்தார். அதில் பாரதி ராமசாமி அண்ணர் சுகம் குறைவாக...மட்டக்குளியில் அவரது உறவினர் வீட்டில் இருக்கிறார். இந்தத் தகவலை நேற்று நண்பர் திரு. மு. நித்தியானந்தனிடம் (லண்டன்) உரையாடிக் கொண்டிருக்கும் போது கூறினேன். அவர் அதிர்ந்து போனார் என்று எழுதி "பாரதி பெயரில் தமிழ் நாட்டில் கூட பள்ளிக்கூடம் உருவாகாத காலத்தில், இலங்கையில் முதல் முதலாக 1957 ம் ஆண்டிலேயே பாரதி பெயரில் பதுளையில் பள்ளிக்கூடம் கட்டியவராச்சே...! என்று லண்டனிலிருக்கும் எழுத்தாளர் மு. நித்தியானந்தன் உணர்ச்சிவசப்பட்டு போனார்" என்று குறிப்பிட்டிருந்தார். அவரை நான் கண்டதில்லை, எனினும் தமிழர் என்ற வகையில் அவரை நெஞ்சார்ந்து பாராட்ட வேண்டும்.




பாரதி குறித்து இந்த வாரம் வந்த அடுத்த நினைவு அவரது மிகவும் பிரபலமான வரிகளில் ஒன்றான "தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்". தனியொரு மனிதனுக்கு உணவு அளிக்க முடியவில்லை என்றால் உலகத்தை அழிப்பதில் தவறில்லை என்கிற புரட்சிகரமான அந்தக் கருத்தை அவர் வெளியிட்டு நூறாண்டுகளுக்கு மேலாகிறது. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பல திருப்புமுனைகளை ஏற்படுத்திய சம்பவங்கள் ஏராளம் உண்டு. அவ்வகையில் தமிழகத்தில் ஆங்கிலேய கலெக்டர் (மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட அரசாங்க அதிபர்) ராபர்ட் வில்லியம் ஆஷ் "துரை" திருநெல்வேலிக்கு அருகிலுள்ள மணியாச்சி ரயில் நிலையத்தில் வைத்து வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒரு முக்கிய சம்பவமாகக் கருதப்படுகிறது. அவரைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதன் தன்னையும் சுட்டுக் கொண்டு உயிரிழந்த நிலையில், வழக்கு விசாரணையில் நீலகண்டன் (நீலகண்ட ஐயர்- பின்னாளில் நீலகண்ட பிரம்மச்சாரி) முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். வனத்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த வாஞ்சிநாதனிடம் இவர் ஒரு மான் தோல் கேட்டு கடிதம் எழுதியதாகவும் அதன் அடிப்படையில் நீலகண்ட பிரம்மச்சாரி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பின்னர் அவருக்கு நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறை தண்டனை விதித்தது. பின்னர் பொதுவுடைமை கட்சியின் ஒரு முன்னோடியான "சிந்தனைச் சிற்பி" சிங்காரவேலருடன் இணைந்து செயலாற்றியதற்காக அவருக்கு பத்தாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.




சரி, இதில் பாரதியின் அமரத்துவம் வாய்ந்த வரிகளுக்கு என்ன தொடர்பு?

ஆஷ் துரை கொலை வழக்கில் கடூழிய சிறைவாசம் காரணமாக நீலகண்டரின் உடல்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது. சிறையிலிருந்து விடுதலையான பிறகு புதுச்சேரியில் இருந்த பாரதியை சந்திக்கச் சென்றார் நீலகண்ட பிரம்மச்சாரி. அவரை அடையாளம் காண முடியாத முண்டாசுக் கவிஞன், "நீர் யார்"? என்று கேட்க "நான் நீலகண்ட பிரம்மச்சாரி" ... அதிர்ந்து போனார் பாரதி. அவரைக் கட்டித் தழுவி பேச ஆரம்பித்தவருக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது!

"சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகின்றன- உணவு கிடைக்குமா?" என்று நீலகண்டர் கூறக் கேட்ட பாரதியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. தன்னை நாடி வந்த ஒரு சக போராளிக்கு தன்னால் உணவளிக்க முடியாத நிலையைக் கண்டு மிகவும் மனம் வருந்திய பாரதியார் "இனியொரு விதி செய்வோம் - அதை எந்த நாளும் காப்போம் தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்துவிடுவோம்" என்ற பத்தியை, "பாரத சமுதாயம் வாழ்கவே" எனும் தலைப்பிலான கவிதையில் எழுதினார் என்று பாரதி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் தற்போது நிலவும் உணவுத் தட்டுப்பாட்டை காணும் போது பாரதியின் இந்த வரிகள் நினைவில் வருவதை தவிர்க்க இயலவில்லை. ராஜபக்சக்கள் ஆட்சியில் மக்களின் துயரங்கள் அதிகரித்து வருகின்றன என்பதை மறுக்க முடியாது. அதற்கு அரச நிர்வாகத்தின் தோல்வி, எங்கும் எதிலும் இராணுவம், நாடு முற்றாகச் சீனாவிடம் அடமானம் வைக்கப்பட்டது போன்ற காரணிகளுக்கு அப்பாற்பட்டு உலகையே ஆட்டிப்படைக்கும் கொரோனா பெருந்தொற்றும் காரணமாக அமைந்துவிட்டது.

இரண்டாம் ராஜபக்ச ஆட்சியில் தொடர்ச்சியாக பொருளாதார சரிவுகள் கண்கூடாகத் தெரிகின்றன. எவ்விதமான முன்னேற்பாடுகளும் இன்றி தற்சார்பு பொருளாதரம் என்று கூறி மக்களின் அன்றாட பாவனைப் பொருட்களான மஞ்சள், சீனி, மிளகாய், பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. அந்த தடைகள் விதிக்கப்படுவதற்கு முன்பு அரசு எவ்விதமான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது உயர்ந்த சிந்தனை தான் ஆனால் எண்ணம் என்பது வேறு யதார்த்தம் என்பது வேறு: இந்த வேறுபாட்டை இலங்கை அரசு உணரவில்லை என்பதே இங்கு உண்மை. உதாரணமாக இலங்கையில் மஞ்சள் பயன்பாடு எவ்வளவு நாட்டில் உற்பத்தி எவ்வளவு என்பது குறித்த தரவுகளை அரசு வெளியிட்டதாக நினைவில்லை. மற்ற பொருட்களின் இருப்பு மற்றும் தேவையும் இதே நிலைதான்.



கடந்த ஆகஸ்ட் 30 ஆம் திகதி அன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிவிசேட வர்த்தமானி ஒன்றை வெளியிட்டார். பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் படி, "அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்கான அவசரகால சட்ட ஒழுங்குவிதிகளை" பிரகடனப்படுத்தினார்.

நாட்டின் உணவு தட்டுப்பாட்டைச் சமாளிக்க இந்தச் சட்டத்தின்படி - அவசரக்கால ஒழுங்குவிதிகளை பிரகடனப்படுத்தியதே கேள்விகளை எழுப்பியது. மூத்த சட்டத்தரணிகளும் அரசியல்வாதிகளும் இதை கண்டித்துள்ளனர். சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் - நெல், அரிசி, சீனி மற்றும் இதர அன்றாட பாவனைப் பொருட்கள் - வழங்கல் ஏற்பாடு நடவடிக்கைகளை இராணுவத்திடம் அளித்துள்ளதும் சர்ச்சைகளை எழுப்பியுள்ளது.

இந்த அறிவிப்பின் அடிநாதம் என்பது நாட்டில், "உணவு நெருக்கடி" நிலவுகிறது என்பதே. இதில் மற்றொரு வி'யமும் கவனிக்கப்பட வேண்டும். இந்த அதிவிசேஷ வர்த்தமானி அறிவித்தல் மேலும் ஒரு செய்தியை வெளிப்படுத்துகிறது் அதாவது பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்படி நாட்டில் அதிகாரபூர்வமாக நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் ஜனாதிபதிக்கு பரந்துபட்ட அதிகாரங்களை அளிக்கிறது. இதன் கீழ் ஆட்களை வகை தொகையின்றி தடுத்து வைக்க முடியும், பொதுநலன் என்று கூறி நினைத்ததைச் செய்ய முடியும்.



அரச தரப்பில் உணவு பதுக்கப்படுவதே நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. அப்படியென்றால் யார் பதுக்கலில் ஈடுபடுகின்றனர்? சிங்களப் பேரினவாதிகள் கொழும்பு மொத்த விற்பனை சந்தைகள் பெரும்பாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களின் படியில் உள்ளது அதுவே உணவு தட்டுப்பாட்டிற்கு காரணம் என்று சமூக ஊடகங்களில் புலம்புகின்றனர். அது உண்மையென்றால் அரசு நடவடிக்கை எடுத்து அதைப் பறிமுதல் செய்து பொதுச் சந்தையில் விற்பனைக்கு கொண்டுவர ஏன் தயங்குகிறது? நீண்டகாலம் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்தால் அவை வீணாகி பாவனைக்கு உதவாமல் ஆகிவிடும் என்பது அனைவரும் அறிந்ததே.

பொருளாதார வல்லுநர்கள் இலங்கையில் நிலவும் உணவு தட்டுப்பாட்டுப் பிரச்சனைக்கு மூன்று முக்கிய காரணங்களை முன்வைக்கின்றனர். முதல் காரணம், கொரோனா பெருந்தொற்றினால் பன்னாட்டளவில் ஏற்பட்டுள்ள வர்த்தக சிக்கல் மற்றும் சீர்கேடு. பொது முடக்கம், விவசாய பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, பொருட்களை எடுத்துச் செல்வது, விமான போக்குவரத்துப் பிரச்சனைகள். இவை காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் வரத்து குறைந்து போனது. ஆனால் இதை காட்டிலும் ராஜபக்ச ஆட்சியில் அதிகாரிகளும் இராணுவத்தினரும் எந்த நிலைமையும் சரியாகக் கையாளாததும், அனைத்தும் எமக்குத் தெரியும் எனும் மனப்பான்மையில் செயற்பட்ட விதம் பிரச்சனைக்கு மிக முக்கியமானதொரு காரணம்.

இரண்டாவது முக்கிய காரணம் நாட்டின் பொருளாதார நிலை. மிகவும் மோசமான நிர்வாகம் காரணமாக நாட்டின் பொருளாதார நிலை அதலபாதாளத்திற்குச் சென்றுள்ளது. சீனாவைத் தவிர வேறு எந்த நாடும் இலங்கைக்கு கடன் கொடுக்க முன்வருவதில்லை. மத்திய வங்கியின் கையிலிருந்த அந்நிய செலாவணி முற்றாக காலியாகும் நிலையிலுள்ளது. வங்கதேசம் போன்ற நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளியது. கடன் வாங்குவது ஒரு நாணயத்தில் வட்டியைக் கொடுப்பது மற்றொரு நாணயத்தில் என்கிற நிலையில் நாடு உள்ளது. இதன் காரணமாக வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதியைச் செய்ய முடியாத நிலையில் நாடு உள்ளது என்பதே உண்மை.

ஆப்ரிக்க நாடான நைஜீரியாவின் அதிபர் முகமது புகாரி கடந்த ஆண்டு இதேபோன்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். "நாட்டில் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்ய போதிய பணமில்லை, எனவே விவசாயிகள் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டும்" என்ற அவரது அறைகூவல் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது. அதைச் சமாளிக்க அவர் இன்னும் படாதபாடுபட்டு வருகிறார்.

மூன்றாவது - நாட்டில் நிலைமை- அரசியல் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமான சூழலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதாகும். எனவே அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்படு என்று சொல்லி நெருக்கடி நிலையை மேலும் இறுக்குவதற்காக உண்மையான தட்டுப்பாடுகள் பூதாகரமாகப் பெருக்கி காட்டப்பட்டுள்ளது எனும் விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன.

பல நாடுகளில் உணவுப் பற்றாக்குறையே பெரும் கிளர்ச்சிகளுக்கு வித்திட்டுள்ளது என்கிற அரசியல் வரலாற்றை இலங்கை ஆட்சியாளர்கள் அறிந்து கொள்வது அவர்களுக்கும் நாட்டிற்கும் நல்லது.

இந்தியா செய்திகள்
India News

# ஈழத் தமிழ் அகதிகளுக்குச் சிறப்பு உதவி மேம்பாட்டுத் திட்டம் முதல்வருக்கு பழ. நெடுமாறன் பாராட்டு!



தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை: இலங்கையிலிருந்து உயிர் தப்பி, தமிழகத்திற்கு வந்து அடைக்கலம் புகுந்து, முகாம்களில் உள்ள ஈழத் தமிழர் குடும்பங்களுக்கு சுமார் 320 கோடி ரூபாய் செலவில் கீழ்க்கண்ட நலத்திட்டங்களைத் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பதை உளமார வரவேற்றுப் பாராட்டி நன்றி செலுத்துகிறேன்.

முகாம்களில் உள்ள பழுதடைந்த வீடுகளைப் புதிதாகக் கட்டுதல், கழிப்பிட, குடிநீர், மின்சார வசதிகள் அளித்தல், குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை உயர்வு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத்திறனை மேம்படுத்தும் பயிற்சி அளித்தல், 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி உதவி, அகதிகளின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர உதவித்தொகை உயர்வு, எரிவாயு இணைப்பு, அடுப்பு அளித்தல், மாதந்தோறும் 20கிலோ இலவச அரிசி, அனைவருக்கும் கைத்தறி ஆடைகள், போர்வைகள், இலவச சமையல் பாத்திரங்கள் உட்பட அனைத்தும் அளிக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு ஈழத் தமிழர் அகதி குடும்பங்களுக்குக் காலத்தினால் செய்த பேருதவியாகும். இதற்காக முதல்வரை மீண்டும் பாராட்டுவதோடு, கீழ்க்கண்டவற்றையும் நிறைவேற்ற முன்வருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

முகாம்களுக்கு வெளியே சென்று வேலை பார்க்கவும், சிறு தொழில்கள், வணிகம் நடத்தவும் அனுமதி வழங்கவேண்டும்.

மருத்துவம், பொறியியல் படிப்புகளில் ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 100 மாணவர்களுக்கு இடஒதுக்கீடு அளித்தல் ஆகியவற்றையும் நிறைவேற்றி உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

உலகின் பல்வேறு நாடுகளில் அகதிகள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அந்த அகதிகள் அனைவருக்கும் தேவையான உதவிகளை முழுமையாக ஐ.நா. அகதிகள் ஆணையம் அளித்து வருகிறது. அதுமட்டுமல்ல, அவர்கள் தங்களின் தாயகம் திரும்பி தங்கள் வாழ்வை புனரமைக்கும் வரை அனைத்து உதவிகளையும் செய்கிறது. ஆனால், ஐ.நா. அகதிகள் ஆணையம் ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவ முன்வந்த போதிலும், அதை அனுமதிக்க இந்திய அரசு மறுக்கிறது. எனவே, முதலமைச்சர் அவர்கள் இந்திய அரசுடன் பேசி இதை நிறைவேற்ற முன்வரவேண்டும் என வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,
பழ. நெடுமாறன்
தலைவர்.

# தமிழ்நாடு முன்னாள் துணை முதல்வர் ஓ.பி.எஸ். மனைவி மரணம் – முதல்வர் ஸ்டாலின், சசிகலா நேரில் ஆறுதல்

தமிழ்நாடு முன்னாள் துணை முதல்வர் அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வத்தின் மனைவி விஜயலெட்சுமி மறைவிற்கு, ஓ.பன்னீர்செல்வத்தை நேரில் சந்தித்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், சசிகலா, வைகோ, ஆகியோர் ஆறுதல் கூறினார்கள்.

புதன்கிழமை (01.09.2021) அன்று உடல்நலக்குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காமல் உயிர் பிரிந்தது.





# நோவா ஸ்கோசியா மாகாணத்தில் புதிதாய் ஆட்சி அமைத்த கொன்சர்வேர்ட்டிவ் முதலமைச்சர் டிம் ஹூ ஸ்டன் சுகாதார அமைப்பை சீர்திருத்துவதில் தீவிரம் காட்டுகின்றார்



அண்மையில் நோவா ஸ்கோசியா மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் முதலமைச்சர் டிம் ஹூஸ்டன் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது மாகாணத்தின் சுகாதார அமைப்பை சீர்திருத்துவதற்கான தனது தேர்தல் வாக்குறுதியை செயல்படுத்தும் வகையில் நோவா ஸ்கோசியா சுகாதார ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியை பதவி நீக்கம் செய்தார் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவையும் கலைத்தார்.

முதலமைச்சர் டிம் ஹூஸ்டன் மற்றும் அவரது புதிய அமைச்சரவை பதவியேற்ற ஒரு நாள் கழித்து இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளுத என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 17 அன்று நடைபெற்ற மாகாணத் தேர்தலில் தனது கொன்சர்வேட்டிவ் கட்சி பெரும்பான்மை அரசாங்கத்தை வென்றபோது, நோவா ஸ்கோசிய மக்கள் தமது கட்சிக்கு வாக்களித்து மாற்றத்திற்கான தங்கள் விருப்பத்தை தெரிவித்துள்ளதால் முதலமைச்சர் ரிம் ஹூஸ்டன் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட "தலைமைத்துவக் குழுவை" அறிமுகப்படுத்தினார்.

மாகாணத்தின் கொன்சர்வேர்ட்டீவ் கட்சியின் பிரச்சாரம் கிட்டத்தட்ட நிர்வாகத்தை சரிசெய்வதில் மட்டுமே கவனம் செலுத்தியது என்றும் முதல்மைச்சர் ரிம் ஹூஸ்டன் தனது அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமையாக நிர்வாகத்தை சீர் செய்வதில் இருக்கும் என்று மீண்டும் மீண்டும் கூறினார்.

"இது மாற்றத்திற்காக அல்ல" என்றும் முதலமைச்சர் ரிம் ஹூஸ்டன் செய்தியாளர்களிடம் கூறினார். "நோய்த் தொற்று உள்ள காலத்தில் பல விடயங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது ...நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் அனைத்தும் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துவது பற்றியது." என்று அவர் தெரிவித்தார்.

14 உறுப்பினர்களைக் கொண்ட மாகாணத்தின் இயக்குநர் குழு ஒரு தன்னார்வ அமைப்பாக மட்டுமே இருந்தது, அது இனிமேலும் தொடர்ந்து இயங்காது. இதேவேளையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் பிரெண்டன் கார் சுமார் தனது வருடாந்த ஊதியமாக 400,000 டாலர்களைப் பெற்றார் என்று மாகாணத்தின் சுகாதார அமைச்சு உறுதி செய்தது.

"மக்கள் சுகாதாரப் பாதுகாப்பை அணுகுவதை உறுதி செய்வதில் எமது கவனம் செலுத்துவேண்டி இருக்கிறது" என்று ரிம் ஹூஸ்டன் கூறினார். மாகாணத்தின் புதிய மருத்துவு நிர்வாகக் குழுவிற்கு கரேன் ஓல்ட்ஃபீல்ட் என்பவர் இனிமேல் தலைமை தாங்குவார்-அவருக்கு சுகாதாரப் பாதுகாப்பு அனுபவம் இல்லை. அவர் முன்னாள் கொன்சர்வேர்ட்வ் கட்சியின் முதலமைச்சர் ஜான் ஹாமின் அலுவலகத்தில் பணியாற்றினார். மற்றும் ஹாலிஃபாக்ஸ் துறைமுகத்தை நிர்வாகம் நடத்தும் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார் என்றும் முதலமைச்சர் ரிம் ஹூஸ்டன் தெரிவித்தார்.

மேலும் மாகாணத்தின் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மாகாணத்தின் மருத்துவ பகுதி தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசுகையில் "ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுக்கு குடும்ப மருத்துவர்களைத் தேடுகிறார்கள், இந்த மாகாணத்தில் மருத்துவர்களுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன மருத்துவ தாதியர்கள் மருத்துவர்கள் என 20 சதவிகிதம் பற்றாக்குறையாக உள்ளது, இது எங்கள் முதியோர்கள் வாழும் நீண்டகால பராமரிப்பு இல்லங்களுக்கு பெரும் சவாலாக உள்ளது," என்றும் அவர் கூறினார். நோவா ஸ்கோசியா மாகாணம் ஏனைய மாகாணங்களுடன் போட்டித்தன்மையுடன் இருக்க, மருத்துவத்துறைக்கு ஆட்சேர்ப்பு, முக்கியமானதாகும்.அதை நாம் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

முன்னணி சுகாதார நிபுணர்களிடம் இருந்து கேட்கும் வகையில் புதிதாக நியமிக்கப் பெற்ற மருத்துவ குழு செப்டம்பர் 20 முதல் 23 வரை எமது மாகாணத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் என்று ஹூஸ்டன் கூறினார். மேலும். இந்த மருத்துவக் குழு ஒரு கறுப்பின உறுப்பினர் மற்றும் பூர்வீக உறுப்பினரைக் கொண்டிருப்பதால் மாகாணத்தின் மக்கள்தொகையின் மாறுபட்ட பிரதிபலிப்பைக் கொண்டு வரும் என்றும் குழுவின் உறுப்பினர் ராங்கின் கூறினார்.

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்துமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கைச் செய்திகள்
Sri Lanka News


# வடமாகாண விகாரைகளுக்கு புத்தர் சிலைகளை அன்பளிப்புச் செய்யுமாறு பணிப்பு – போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கடும் விசனம்

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவாகி எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தி அடையும் நிலையில் அதனை அனுட்டிக்கும் முகமாக தமிழர் தாயகமான வடமாகாணத்தில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு புத்தர் சிலைகளை அன்பளிப்புச் செய்ய வேண்டும் என இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோட்டபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி பிரமாணம் செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைகின்றது. இந்த நிலையில் இதனை அனுஷ்டிக்கும் வகையில் ஆளும் கட்சியின் தொழிற் சங்கமான வட மாகாண பொதுஜன பெரமுன போக்குவரத்துச் சபை ஊழியர் சங்கம் ஏற்பாடுகளைச் மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோட்டபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி பிரமாணம் செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைகின்றது. இந்த நிலையில் இதனை அனுஷ்டிக்கும் வகையில் ஆளும் கட்சியின் தொழிற் சங்கமான வட மாகாண பொதுஜன பெரமுன போக்குவரத்துச் சபை ஊழியர் சங்கம் பல ஏற்பாடுகளைச் மேற்கொண்டு வருகிறது.

இதற்கமைவாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி பஸ் டிப்போக்களில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களில், குறித்த தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் அனைவரும் இணைந்து அவர்களின் டிப்போக்களுக்கு அருகாமையில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு புத்தர் சிலைகளை அன்பளிப்பாக வழங்கவேண்டும் என பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த டிப்போக்கள் ஒவ்வொன்றிலும் பணியாற்றும் ஊழியர்களில் வட மாகாண பொதுஜன பெரமுன போக்குவரத்துச் சபை ஊழியர் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள அனைவரும் 50 ஆயிரம் ரூபா பணத்தினை திரட்டவேண்டும் எனவும், குறித்த பணத்தொகையில் புதிய புத்தர் சிலைகளைக் கொள்வனவு செய்து அருகில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டும் எனவும் குறித்த தொழிற் சங்கத்தினால் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


23.08.2021.

சாலை முகாமையாளர்கள்,
யாழ்/பரு/காரை/கிளி/முல்/மன்/வவ.

தலைவர்/செயலாளர்,
பொது ஜன பெரமுன போக்குவரத்து ஊழியர் சங்கம்,
யாழ்/பரு/காரை/கிளி/முல்/மன்/வவ.

அதி மேதகு ஜனாதிபதி அவர்களது பதவி ஏற்பு தினத்தையொட்டி புத்தர் சிலைகள் விகாரைகளுக்கு வழங்குதல்

பிரதான பிராந்திய முகாமையாளர்,
இ.போ.ச(வட).

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவரினால் இது தொடர்பான உரிய உத்தரவுகள், வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதம பிராந்திய முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மத்திய போக்குவரத்துச் சபையின் உத்தரவிற்கு இணங்க பொதுஜன பெரமுன தொழிற்சங்கத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் அனைவரும் தமது சொந்த நிதியில் புதிய புத்தர் சிலைகளை பௌத்த விகாரைகளுக்கு வழங்கவேண்டும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதம பிராந்திய முகாமையாளரும், கடிதங்கள் மூலம் போக்குவரத்துச் சபை ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதம பிராந்திய முகாமையாளர் இது தொடர்பாக யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய பஸ் டிப்போக்களின் முகாமையாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(01-09-2021)



# மன்னார் மாவட்டத்தில் கட்டுப்பாடுகளை மீறி மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு



நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர பகுதியில் மக்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

குறிப்பாக வியாழக்கிழமை காலை தொடக்கம் சிலர் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அதே நேரம் பலர் அத்தியாவசிய காரணங்கள் இன்றியும் நகர் பகுதிகளை நோக்கி வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

அதே நேரம் இன்றைய தினம் வங்கி நடவடிக்கைகளும் இடம் பெறுகின்ற நிலையில் மக்களின் நடமாட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போது மக்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படுகிறது.



மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் மக்கள் தொடர்ந்து ஊரடங்கு நிலையை மதிக்காது செயல்படுவதுடன் அனுமதி பெறாத பல வர்த்தக நிலையங்கள் மற்றும் மரக்கறி வியாபார நிலையங்கள் மக்களை அதிக அளவில் ஒன்று கூட்டி விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் பயணங்களை தொடரவும், ஏனைய நடவடிக்கை களுக்காகவும் பாஸ் அனுமதி பெற்றுக் கொள்ள அதிகளவானவர்கள் மாவட்டச் செயலகத்திற்கு சென்று வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

- மன்னார் நிருபர் (02-09-2021)

# யாழ்ப்பாணத்தில் கொரோனோ தொற்றுக்கு உள்ளாகிய சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸ் உயிரிழப்பு!



கொரோனோ தொற்றுக்கு உள்ளாகியிருந்த சுயாதீன ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸ் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தை சேர்ந்த பிரகாஸ், சுயாதீன ஊடகவியலாளராக யாழில். இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளை கட்டுரைகளை எழுதி வந்தார்.

அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார். அத்துடன் முகநூலில் உடனுக்கு உடன் உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளை பதிவேற்றி வருபவர்.

அந்நிலையில் கடந்த ஐந்து நாட்களாக தலைவலி, இருமலுடன், இலேசான காய்ச்சலுடன் பீடிக்கப்பட்டு இருந்த நிலையில், நேற்றைய தினம் புதன்கிழமை அண்டிஜன் பரிசோதனையை தானாக முன் சென்று பரிசோதித்த போது, அவருக்கு, தொற்று உறுதியானது.

அது தொடர்பில், புதன்கிழமை மாலை 3 மணிக்கு தனது முகநூலில் "கடந்த ஐந்து நாட்களாக இலேசான தலைவலி இருமலுடன் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தேன்.

சற்று தேறிவரும் நிலையில் இன்று அன்டிஜன் சோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. குணமடைந்த பின்னர் தடையின்றி எனது பணிகள் தொடரும். அதுவரை காத்திருங்கள்" என பதிவு ஒன்றினையும் பதிவேற்றி இருந்தார்.


இந்நிலையில் இன்றைய தினம் மாலை திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டதை அடுத்து, வீட்டார் அவரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது, உயிரிழந்துள்ளார்.

இவர் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவற்றை எல்லாம் தாண்டியும் அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(02-09-2021)

# தடுப்புஸீசிதான் ஒரே தீர்வா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



“அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையே கொரோனா வைரஸ் நிலைமை மோசமடைவதற்கு காரணம். கொரோனாவிற்கு எதிரான போராட்டத்திற்கு மருத்துவ நிபுணர்கள் தலைமை தாங்கவேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான எரான் விக்கிரமரட்ண. எனது கடந்த வாரக் கட்டுரையில் நான் குவிமையப்படுத்திய விடயமும் இதுதான்.

“இலங்கை ஒரு சிறியதீவு எங்களால் பாதிப்பை கட்டுப்படுத்தியிருக்கமுடியும். இலங்கையை பாதுகாக்கவேண்டும் என நாங்கள் ஆரம்பத்திலிருந்து தெரிவித்து வருகின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர் பெருந்தொற்றிற்கு எதிரான போராட்டத்திற்கு மருத்துவ சுகாதார நிபுணர்கள் தலைமை தாங்கவேண்டும் என நாங்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றோம். அரசாங்கம் உணர்வுபூர்வமாக இருக்காததால் மருத்துவநிபுணர்கள் தலைமை வகிக்க முடியாமல்போய்விட்டது” எனவும் எரான் தெரிவித்துள்ளார்.

ஆனால் அரசாங்கம் வைரசுக்கு எதிரான போராட்டமும் உட்பட நாட்டின் எல்லாத் துறைகளையும் ராணுவமயப்படுத்தி வருகிறது. ஒரு பெரும் தொற்றுநோய் காலத்தில் நாட்டை அதிகம் ராணுவமயப்படுத்திய ஓர் அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் காணப்படுகிறது. அதுமட்டுமில்ல ஒரு பெரும் தொற்றுநோய் காலத்தில் மையத்தில் அதிகம் அதிகாரங்களை குவித்த ஒரு நாடாகவும் இலங்கைத் தீவு காணப்படுகிறது.

அண்மையில் பைசர் தடுப்பூசியை கையாள்வதில் சிவில் தரப்புக்கள் போதிய அளவிற்கு வினைத்திறனுடன் நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. குறிப்பாக கொழும்பு லேடி ரிச்வே மருத்துவமனையில் மிக முக்கியமான பிரமுகர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் ரகசியமாக விநியோகிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. தமிழ்ப்பகுதிகளில் மன்னாரில் பைசர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. தடுப்பூசிகளை பெறுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்தும் சிலர் மன்னாருக்கு சென்றதாக தெரியவருகிறது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்வோர் தடுப்பூசிகளை பெறுவதற்காக மன்னாருக்கு சென்று அங்கே பொய்யான ஆவணங்களை கையளித்து தடுப்பூசிகளை பெற்றிருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது. இவ்வாறான விமர்சனங்களின் விளைவாக அரசாங்கம் பைசர் தடுப்பூசியை இராணுவத்திடம் கொடுத்துவிட்டது. அதாவது ஒரு குறிப்பிட்டவகை தடுப்பூசியை இனி படைத்தரப்பிடம் மட்டும்தான் பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. மேற்கத்திய நாடுகள் சீனத் தயாரிப்பு தடுப்பூசிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே மேற்கத்திய தயாரிப்பான பைசர் மோடோர்னா போன்ற தடுப்பூசிகளை பெற்றால்தான் மேற்கத்திய நாடுகளுக்கு பயணம் செய்யலாம். இதனால் அடிக்கடி மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் பைசர் தடுப்பூசியை விரும்புகிறார்கள். இவ்வாறானவர்கள் இனிமேல் இராணுவத்திடம் போய்த்தான் அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

“பைசர் தடுப்பூசியை இராணுவத்திற்கு மாத்திரம் கொடுக்கும் தீர்மானத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இராணுவத்திற்குத் தடுப்பூசியை வழங்குவதானால், போரின் போது சுகாதாரத் துறைக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்” என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்திய நிபுணர் நவீன் டி சொய்சா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார துறையினரும் மருத்துவத் துறையும் போதிய அளவுக்கு வினைத்திறனோடு முன்னெடுக்கவில்லை என்று கூறி அதனை படைத்தரப்பு பொறுப்பேற்றது. இதன்மூலம் மருத்துவ ஊழியர்களால் மருத்துவ சுகாதார நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டிய தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் ஒரு ராணுவ நடவடிக்கைபோல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த மாதம் நடுப்பகுதிக்குள் முப்பது வயதுக்கும் மேலான அனைவருக்கும் தடுப்பூசி போட்டு முடிக்கப்பட்டுவிடும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதற்காக இரவு பகலாக தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை படைத்தரப்பு ஓய்வு ஒழிச்சலின்றி முன்னெடுக்கிறது. எனவே தடுப்பூசி போடும் நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய தவறுகளுக்கு படைத்தரப்பும் அரசாங்கமும்தான் பொறுப்பே தவிர சுகாதாரப் பிரிவினர் அல்ல என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இவ்வாறாக கடந்த 20 மாதங்களுக்கு மேலான இராணுவ மயமாக்கலின் அடுத்தகட்டமாக அண்மையில் அரசாங்கம் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகளை பிரகடனப்படுத்தியுள்ளது. திங்கட்கிழமை நள்ளிரவு (30/08) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய அவ்வாறு பிரகடனப்படுத்தியுள்ளார். சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்பதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ். பி.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. அரசாங்கம் அறிவித்திருக்கும் முழுமையற்ற சமூக முடக்கம் காரணமாக விலைகள் மேலும் அதிகரிக்கின்றன. அரசாங்கம் இதற்கு முன்னரும் சில பொருட்களுக்கு விலைகளை நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அவ்வாறு விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் வணிகர்களை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதே கடந்தகால அனுபவமாகக் காணப்படுகிறது. இம்முறையும் அறிவிக்கப்பட்டிருக்கும் சமூக முடக்கமானது சமூகத்தை முழுமையாக முடக்கவில்லை.

மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாத காரணத்தால்தான் நாடு முடக்கப்பட்டது. அந்த நேரத்தில் அரசாங்கம் நாட்டை முடக்குவதற்கு தீர்மானித்திருக்கவில்லை என்று கூறியிருக்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த. அப்படியென்றால் அரசாங்கம் துறைசார் நிபுணர்களின் வேண்டுகோளை ஏற்றுக் ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். அதாவது துறைசார் நிபுணர்களின் நோக்கு நிலையிலிருந்து இந்த சமூகமுடக்கம் அறிவிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் பொருளாதார நோக்கு நிலையிலிருந்தே இந்த சமூகமுடக்கம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அரசாங்கம் அண்மைய மாதங்களில் அறிவித்த சமூக முடகங்களுக்கு வெவ்வேறு பெயர்களை வைத்தது. சில மாதங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது பயணக் கட்டுப்பாடு என்று அழைக்கப்பட்டது. இப்பொழுது அறிவிக்கப்பட்டிருப்பது தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்று அழைக்கப்படுகிறது. மேலும் ஹைபிரிட் சமூக முடக்கம் என்ற ஒரு பெயரையும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார். அதாவது இது முழுமையான அர்த்தத்தில் சமூக முடக்கம் அல்ல என்று பொருள். மருத்துவ நோக்கு நிலையிலிருந்து இது அறிவிக்கப்படவில்லை. பொருளாதார நோக்கு நிலையிலிருந்தே இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சமூக முடக்க காலத்தில் அத்தியாவசிய சேவைகள் என்ற பட்டியலின் கீழ் ஒரு தொகுதி தொழிற்துறைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இதை வசதியாகப் பயன்படுத்தி சனங்கள் வீட்டுக்கு வெளியே வருகிறார்கள். நகரங்களின் மையங்களில்தான் சன நடமாட்டம் குறைவாக இருக்கிறது. புறநகர் பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் ஜனங்கள் வழமைபோல நடமாடுகிறார்கள். சந்தைகள் மூடப்பட்டதால் தற்காலிக சந்தைகள் எல்லாக் கிராமங்களிலும் திறக்கப்பட்டு விட்டன. இச்சந்தைகளில் பொருட்களின் விலைகள் வழமையைவிட அதிகமாக காணப்படுகின்றன. உதாரணமாக திருநெல்வேலிச் சந்தையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்தில் தெருவோரங்களிலும் உள்வீதிகளிலும் திறக்கப்பட்டிருக்கும் சந்தைகளில் பொருட்களின் விலை வழமையைவிட அதிகமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இது நல்லூர் திருவிழாக் காலம். இக்காலகட்டத்தில் மரக்கறி விலை பொதுவாக கீழே வந்துவிடும். ஆனால் இம்முறை கோயிலும் பூட்டு. சந்தையும் பூட்டு. ஆனால் விலைகளோ உச்சத்தில். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வைரஸ் தொற்றிவிடும் என்ற அச்சத்தோடு வீட்டுக்கு வெளியே வரும் சனங்கள் ஒருபுறம் வைரசை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொருபுறம் விலையேற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அனர்த்த காலத்தை தமக்கு வசதியாக பயன்படுத்தி வர்த்தகர்கள் உழைக்கத் தொடங்கி விட்டார்கள். சில பொருட்கள் பதுக்கப்பட்டதற்கும் பெருமளவுக்கு வணிகர்களே காரணம். எதிர்காலத்தில் குறிப்பிட்ட பொருட்களின் விலைகள் உயரலாம் என்று ஊகத்தின் அடிப்படையில் வணிகர்கள் பொருட்களை பதுக்குகிறார்கள். இதுசாதாரண ஜனங்களுக்கு சமூக முடக்கத்தை வேதனை மிகுந்த ஒன்றாக மாற்றிவிட்டது. இப்படிப்பட்ட சூழலில்தான் அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களுக்கு என்று ஒரு மேஜர் ஜெனரலை பொறுப்பாக நியமித்திருக்கிறது.

எனவே தொகுத்துப்பார்த்தால் தடுப்பூசிக்கும் ராணுவம்தான் பொறுப்பு. அத்தியாவசியப் பொருட்களுக்கும் ராணுவம்தான் பொறுப்பு. அரசாங்கம் நம்புகின்றது வேகமாக தடுப்பூசியை போடுவதன் மூலம் நோய் பரவும் வேகத்தையும் இறப்பு விகிதத்தையும் குறைக்கலாம் என்று. இந்த இலக்கை முன்வைத்து தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் படையினரிடம் தரப்பட்டிருக்கின்றன. அடுத்த மாதம் நடுப்பகுதியளவுக்குள் நாட்டிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டு விடும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துவிட்டது. 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் திட்டத்தின்படி அரசாங்கம் கிட்டத்தட்ட அறுபது வீதத்துக்கு மேல் முன்னேறி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னரே பாடசாலைகளையும் அலுவலகங்களையும் முழுமையாக திறக்கலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. இது விடயத்தில் சில மேற்கத்திய நாடுகளின் முன்னுதாரணத்தை பின்பற்றி தடுப்பூசிகளை வேகமாக போட்டு.முடித்தால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது.

ஆனால் தடுப்பூசி போடுவதற்கான தேசிய கொள்கையின்படி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போட்டு முடிக்காமல் 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடுவது என்று அரசாங்கம் கொள்கையை மாற்றியது என்றும் இது தொடர்பில் சுகாதாரப்பிரிவுடன் அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை என்றும் ஜேவிபி குற்றம்சாட்டுகிறது. இவ்வாறு திட்டத்தை மாற்றியதால்தான் அதிகளவு முதியோர் அண்மைக்காலங்களில் இறந்தார்கள் என்றும் அக்கட்சி கூறுகிறது. ஓகஸ்ட் மாதம் மொத்தம் 4850 பேர் கோவிட் தொற்றினால் இறந்திருக்கிறார்கள் அவர்களின் 3000 பேர் தடுப்பூசி போடாத 60வயதுக்கு மேற்பட்ட முதியோர்களே என்று ஜேவிபி சுட்டிக்காட்டியுள்ளது.

வைரஸ் புதிய திரிபுகளை அடையும் பொழுது தடுப்பூசி மட்டும் ஒரு தீர்வு அல்ல என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். மருத்துவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெருமளவுக்கு புறக்கணித்துவிட்டு ஆகக்கூடியபட்சம் தடுப்பூசியைப் போடுவதன்மூலம் நிலமையை கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. நாடு முழுவதும் தடுப்பூசி போட்டு முடிக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இழப்புகளைத் தாங்கினால் சரி என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. இது விடயத்தில் அரசாங்கம் திட்டமிடுவதுபோல நாடு முழுவதும் தடுப்பூசி போடப்பட்டபின் நிலைமை கட்டுக்குள் வருமாக இருந்தால் அது அரசாங்கத்தை பலப்படுத்தும். மாறாக வைரஸ் மேலும் திரிபுகளை அடைந்து தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாது போனால் நிலைமை என்னவாகும்?

# கனடியத் தமிழர் பேரவை, 2021 ஆம் ஆண்டுக்கான கனடியத் தமிழர் நிதிசேர் நடை, "கோர்ட் டவுனி மற்றும் சேனி வென்ஜாக்" நிதியத்தை ஆதரித்து நிகழ்த்தவுள்ளது




கனடியத் தமிழர் பேரவை (CTC) பதின்மூன்றாவது வருடாந்த கனடியத் தமிழர் நிதிசேர் நடையை மேற்குறித்த நிதியத்துக்காக நிகழ்த்துவதைப் பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த நடைபயணம் செப்ரெம்பர் 12, 2021 அன்று தொம்சன் பூங்காவில் நடைபெறும். இந்த நிதிசேர் நடையில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொள்வார்கள். மேலும் கனடியத் தமிழர் பேரவை, கனடா முழுவதற்குமான தொலைதூர பங்கேற்பை ஊக்குவிக்கிறது.

இந்த ஆண்டு நிதிசேர் நடையில் கிடைக்கும் நிதி "கோர்ட் டவுனி மற்றும் சேனி வென்ஜாக் நிதியத்துக்கு" (DWF) வழங்கப்படும். கனடாவின் பூர்வீக குடிகளுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தை இந்த நிதியம் ஊக்குவிக்கிறது. மேலும் இந்த நிதியம், கனடாவில் உள்ள பழங்குடி மக்களின் உண்மையான வரலாறு மற்றும் வதிவிடப் பள்ளிகளின் சரித்திரம், அவர்களது மரபு பற்றிய கல்வியைக் கற்க உதவுகிறது.

"ஒரு புலம்பெயர்ந்த சமூகமாக, பூர்வீக மக்களின் நிலங்களிலிருந்து நாம் அனைவரும் பயனடைந்தோம் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். கனடாவின் பூர்வீக குடி மக்களிடம் தோழமைக்கான கரங்களை நாம் நீட்டுவது எங்கள் பாக்கியம்", என்கிறார் கனடியத் தமிழர் பேரவைத் தலைவர் சிவன் இளங்கோ.

இந்த நிதிசேர் நடையின் இணைத்தலைவர்கள், விதுசாயினி பரமநாதன் மற்றும் ரம்யா அமுதன் ஆகியோராவார்கள். கனடியத் தமிழ்ச் சமூகத்திற்கும் கனடாவின் பூர்வீக குடிகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான, மதிப்புடனான உறவுகளின் வாய்ப்புகளுக்காக உற்சாகத்தில் திளைத்திருக்கும் இளம் பெண்கள் இவர்கள். "கனடாவும், அதற்குள் வாழும் தமிழ் சமூகமும், மிகவும் தேவையான, நம்பிக்கையான, பூர்வ குடிகளுடனான உறவை உருவாக்க வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். எங்களைத் தங்கள் நாட்டிற்குள் வாழ அனுமதித்த பூர்வ குடி மக்களது பிரச்சினைகளைக் கேட்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. கடந்தகாலக் காயங்களை மீட்பது கடினம். நாம் கதையின் ஒரு பக்கத்தை மட்டுமே கேட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வது மேலும் கடினம். ஆனால் நாங்கள் எங்கிருந்தாவது தொடங்க வேண்டும், எனவே இங்கே தொடங்குவோம்".

இந்த நிதிசேர் நடையை நடத்துவதன் மூலமும், DWF உடனான கூட்டினை உருவாக்குவதன் மூலமும் தமிழ்க் கனடியக் குடியேறிகளுக்கு, பூர்வீக குடிகளது இருண்ட, பயங்கரமான வரலாறு உணர வைக்கப்படுகிறது. பழங்குடி மக்கள் அனுபவித்த கொடுமைகள் அவர்களது நீடித்த போராட்டங்கள் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றிக் கனடியத் தமிழ் சமூகம் அறிய வேண்டியதும் இந்த நடைபயணத்தின் நோக்கமாக உள்ளது. கனடாவில் உள்ள வதிவிடப் பள்ளிகளில் அண்மையில் பூர்வ குடிச் சிறுவர்களது கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதால், கனடாவின் வரலாறு மற்றும் பூர்வ குடிகள் குறித்த நமது விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான கூட்டுப் பொறுப்பை அடையாளம் காணவும், நல்லிணக்கத்தை நோக்கிப் பூர்வ குடிச் சமூகங்களுடன் கனடியத் தமிழ் சமூகம் இணைந்து உறுதியான நடவடிக்கை எடுக்கவும் கனடியத் தமிழர் பேரவை தீர்மானகரமாக வலியுறுத்துகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில், இதய மற்றும் பக்கவாத அறக்கட்டளை, போதை & மனநல மையம், மற்றும் சம்பூர் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை ஆதரிக்க கனடியத் தமிழர் பேரவை, நிதிசேர் நடைகள் மூலமாக நிதி திரட்டியுள்ளது. இந்த ஆண்டு, கனடாவின் கடந்த காலத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலமும், கனடியர்களை நல்ல எதிர்காலம் ஒன்றை உருவாக்க ஊக்குவிப்பதன் மூலமும், அனைத்துக் கனடியர்களுனான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் பூர்வ குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான குறிக்கோளில் கனடியத் தமிழர் பேரவை வலுவாக உள்ளது.

"கனடியத் தமிழர் பேரவையின் ஆதரவுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்" என்று கோர்ட் டவுனி & சேனி வென்ஜாக் நிதியத்தின் தலைவரும், நிறைவேற்றுச் செயலருமான "சாரா மிட்டானிக்" கூறினார். "கனடாவின் உண்மையான வரலாற்றைக் கற்றுக்கொள்ள கூடுதலான மக்களுக்கு அவர்கள் உதவுகிறார்கள். எனவே நாங்கள் அனைவரும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை முன்னோக்கி நகர்த்திச் சிறந்த முறையிலான கனடா தேசத்தை உருவாக்க முடியும்".

**நிகழ்வு: பதின்மூன்றாவது ஆண்டு கனடியத் தமிழர் நிதி சேர் நடை**

**தேதி: செப்ரெம்பர் 12, 2021 ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: தொம்சன் பூங்கா, ஸ்காபுரோ**

**பதிவுத் தொடக்கம்: காலை 8:30 மணி**
**நிகழ்வு ஆரம்பம்: காலை 9:30 மணி**
**நடைபயணம்: காலை 10 மணி**

**www.tamilcanadianwalk.ca**


**நிகழ்வு பற்றிய படிவங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு:**
**https://www.canadahelps.org/en/pages/tamil-canadian-walk-2021/**

**ஊடகத் தொடர்புகளுக்கு: ரம்யா அமுதன், இணைத் தலைவர்**
**2021 தமிழ்க் கனடிய நடைபயணம்**
**(647) 680-4814**
**info@canadiantamilcongress.ca**



உலக செய்திகள்
World News

# தாக்குதல்களில் கொல்லப்பட்ட படை வீரர்களின் கதைகளைக் கவனத்துடன் கேட்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனிடம் சினத்துடன் தெரிவித்த உறவினர்கள்



ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தில் கடந்த வாரம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட அமெரிக்க கடற்படை வீரர் ஒருவரின் தந்தை, கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்ட நிகழ்வில் தனது கருத்துக்களை முன்வைத்தார். அப்போது இவ்வாறான சண்டைகளில் அல்லது தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் கதைகளைக் கவனத்துடன் கேட்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனிடம் மிகவும் கடுமையாகத் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மார்க் ஷ்மிட்ஸின் என்னும் பெயருடைய அந்த தந்தை தனது பற்றி அவர் தெரிவித்தார். அவரது மகன், 20 வயது லான்ஸ் சிபிஎல். ஆகஸ்ட் 27 அன்று கொல்லப்பட்ட அமெரிக்க குடிமக்கள் மற்றும் ஆப்கானிஸ்தானை வெளியேற்ற உதவி செய்த 13 அமெரிக்க படைப் பிரிவுகளின் உறுப்பினர்களில் ஒருவரான ஜாரெட் ஷ்மிட்ஸ், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பால் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் குறைந்தது 169 ஆப்கானிஸ்தான் மற்றும் 13 அமெரிக்க படைப் பிரிவு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஜனாதிபதி ஜோ பைடன் கலந்து கொண்ட வைபவத்தில் டெலாவேரில் உள்ள டோவர் விமானப்படை தளத்தில் நடந்த அதில் கொல்லப்ப்ட்ட படை வீரர்களின் உடல்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன.



அதன்பிறகு, ஜனாதிபதி ஜோ பைடன் தங்கள் உறவுகளை இழந்து துயரத்துடன் காணப்பட்ட குடும்பங்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அதில் மார்க் ஷ்மிட்ஸின் அவர்களும் கலந்து கொண்டு தனது துயரங்களைப் பகிர்ந்து கொண்டார்.

மார்க் ஷ்மிட்ஸின் மேற்படி சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் "நான் முதலில் பிடனுடன் பேச விரும்பவில்லை என்று முடிவு செய்தேன் ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்த அவர் எமது படைகளைத் திரும்பப் பெறுவதை அவர் கையாண்டது முறைதான் எனது மகனின் மரணத்திற்கு காரணம் என்று நான் கருதுகின்றேன்" என்று குற்றம் சாட்டினார், ஆனால் பின்னர் அவரது எண்ணத்தை மாற்றிக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அங்கு தமது உறவினர்களை ஆப்கானிஸ்த்தான் தாக்குதலில் கொல்லப்பட்ட படை வீரர்களின் குடும்பத்தினரோடு உரையாடிய ஜனாதிபதி ஜோ பைடன் அவர்கள் தனது உரையில் ஈராக் வீரரான தனது மகன் பியூ பிடனை ஆறு ஆண்டுகளுக்கு முன்பு புற்றுநோயால் இழந்ததாகவும் ஜாரெட் பற்றி பேச விரும்புவதாகவும், அவரும் அவரது மனைவியும் ஜனாதிபதியிடம் காண்பிக்க தங்கள் மகனின் புகைப்படத்தை எடுத்துக் கொடுத்ததாகவும் தெரிவித்தார். அப்போது மிட்ஸ் செய்தியாளர்களிடம் கூறிய விடயங்கள் அனைவரையும் மனது கலங்கச் செய்யதன என்றும் கூறப்பட்டது.

தனது மகனின் புகைப்படத்தை ஜனாதிபதியிடம் காட்டிய மிட்ஸ், "அந்தப் பெயரை நீங்கள் எப்போதும் மறந்துவிடாதீர்கள். அந்த முகத்தை நீங்கள் மறக்காதீர்கள். அதைப்போன்று என் மகன் இறந்த நாளில் கொல்லப்பட்ட மற்றைய 12 பேரின் பெயர்களையும் நீங்கள் மறக்காதீர்கள்" என்று ஷ்மிட்ஸ் ஜனாதிபதி பைடனிடம் கூறினார். "மேலும் அவர்களின் கடந்த கால சேவைகள் சார்ந்த கதைகளைக் அறிந்து கொள்ளவும் சிறிது நேரம் ஒதுக்குங்கள்." என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆனால் ஷ்மிட்ஸின் கூற்றை, ஜனாதிபதி பைடன் விரும்பமாமல் அது தொடர்பாக முணுமுணுக்கவும் செய்தார் என்றும் பின்னர் "அவர்களின் கதைகள் எனக்குத் தெரியும்" என்று மகனை இழந்த தந்தையிடம் தெரிவித்ததாகவும் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கடந்த திங்களன்று மற்றுமொரு செய்தியாளரோடு உரையாடிய மிட்ஸ் அவர்கள் பேட்டியில் பிடனுடனான சந்திப்பின் விவரங்களையும் தெரிவித்தார். "அந்த சந்திப்பு சரியாக நடக்கவில்லை, என்றே நான் சொல்லுவேன்" "அவர் தனது சொந்த மகனைப் பற்றி இன்னும் அதிகமாகப் பேசினார், பின்னர் அவர் என் மகனது இழப்பு பற்றி அசட்டை செய்தார் அது எனக்கு சரியாக படவில்லை".

1972 ஆம் ஆண்டில் கார் விபத்தில் தனது முதல் மனைவியையும் அவரது மகளையும் இழந்து, பல வருடங்களுக்குப் பிறகு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தனது மகனையும் இழந்தார் - கோவிட் மூலம் அன்பானவர்களை இழந்து தவிப்பவர்களின் வலியைப் புரிந்துகொள்ள அனுமதிக்கிறது என்று பைடன் குறிப்பிட்டதையும் மிட்ஸ் செய்தியாளர்களுடன் பகிர்ந்து கொண்டார். அன்றைய சந்திப்பின் போது ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கு ஜனாதிபதி பைடன் கையாண்ட நடைமுறைகளுக்கு அன்று அவர் பரவலான விமர்சனங்களைப் பெற்றார், இது தலிபான்களை விரைவாக அதிகாரத்தை மீண்டும் பெற அனுமதித்துத என்றும் பலர் விமர்சனம் செய்தனர்.

பயங்கரவாத தாக்குதல்களுக்கு எதிராக தாக்குப்பிடிக்க தலிபான்கள் விமான நிலையத்தைச் சுற்றி அமைத்த பாதுகாப்புச் சுற்றுவட்டாரத்தை விட்டு அமெரிக்கா வீரர்கள் காபூலில் இருந்து விமானங்களில் நாட்டை விட்டு வெளியேறிய போது ஆயிரக்கணக்கான ஆப்கான் நாட்டு மக்கள் கோசமிட்டனர தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர் என்றும் அன்றைய சந்திப்பின்போது ஒரு படைத்தளபதி தெரிவித்தார்.

கடந்த வாரம் தி டெய்லி பீஸ்ட் உடனான நேர்காணலில், கடந்த வாரம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட அமெரிக்க கடற்படையின் தந்தை கரீம் நிகோய் பிடென் மீது கோபத்தை வெளிப்படுத்தினார். "அவர்கள் என் மகனை ஒரு காகித தள்ளுபவனாக அங்கு அனுப்பினர், பின்னர் தலிபான்களை வெளியே பாதுகாப்பு அளித்தனர்" என்று நிகோய் கூறினார். "நான் என் சொந்த இராணுவத் தலைவர்களைக் குற்றம் சாட்டுகிறேன்".



# இன்றைய பூகோள அரசியலில் இஸ்லாமிய அடிப்படைவாத அரசாட்சி நிலைக்குமா?

- கனடா நக்கீரன்

போரைத் தொடங்குவது எளிது, ஆனால் அதை முடிப்பது எப்போதும் கடினம் **(It's easy to start a war, but it's always difficult to end with it)** என்பது அரசியல் பாடம். இந்தப் பாடத்தை உலக வல்லரசான அமெரிக்கா ஆப்பகனிஸ்தான் நாட்டுக்கு எதிரான நீண்ட கால (ஒக்தோபர் 07, 2001 - ஒகஸ்ட் 2021) போரில் கடினமான முறையில் கற்றுக் கொண்டுள்ளது. இருபது ஆண்டுகளில் அமெரிக்காவுக்கும் நேட்டோ நாடுகளுக்கும் ஏற்பட்ட உயிர், உடமை இழப்பு பின்வருமாறு:




<u>மனித செலவு</u>

அமெரிக்க இராணுவத்தினர் - 2,448. அண்ணளவாக 20,700 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அமெரிக்க ஒப்பந்தக்காரர்கள் - 3,846.

ஆப்கான் தேசிய இராணுவம் மற்றும் காவல்துறை: 66,000.

நேட்டோ உறுப்பு நாடுகள் - 1,144.

ஆப்கான் பொதுமக்கள் - 47,245.

தலிபான்கள் மற்றும் பிற எதிர்க்கட்சி போராளிகள் - 51,191.

உதவி தொழிலாளர்கள் - 444.

டிசம்பர் 2001 இல் ஆப்கானிஸ்தான் மோதலுக்கு 38 நாடுகளின் நேட்டோ கூட்டணி உறுதியளித்தது, ஆனால் அமெரிக்கா எப்போதுமே மிகப்பெரிய இராணுவக் குழுவை வழங்கியுள்ளது.

பெப்ரவரி 2020 நிலவரப்படி, வோஷிங்டன் தலிபான்களுடன் தனது படைகளைத் திருப்பிப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, பென்டகன் சுமார் 14,000 பேர் ஆப்பானிஸ்தான் நாட்டில் தங்கியிருப்பதாக மதிப்பிட்டது.

மே 1, 2021 க்குள் திரும்பப் பெறுவதற்கான அசல் காலக்கெடு, புதிய ஜனாதிபதி ஜோ பைடனால் செப்டம்பர் 11 க்கு தள்ளிவைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானில் சுமார் 9,500 வெளிநாட்டு துருப்புக்கள் இருந்தன, அதில் அமெரிக்க துருப்புக்கள் 2,500 பேர் கொண்ட மிகப்பெரிய அணியாகும்.

<u>இழப்புகள்:</u>

பொது மக்கள் - 38,000, அதே காலகட்டத்தில் 70,000 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இடம் பெயர்ந்தோர் - 395,800, ஆப்கானிஸ்தான் இராணுவம் - 2014 முதல் 45,000.

போருக்கு எவ்வளவு செலவானது? ஒரு திரில்லியன் (ஆயிரம் கோடி) டொடர்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய அளவில் 2001 முதல் ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" களில் 6.4 திரில்லியன் டொலர் செலவாகியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

செப்தெம்பர் 11, 2001 இல் இரட்டைக் கோபுரங்கள் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் விமானத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டார்கள். அவர்கள் பில் லேடன் தலைமையில் இயங்கிய அல் கொய்தா தீவிரவாதிகள் என அறியப்பட்டது. எனவே பின் லேடனைப் பிடிக்க அமெரிக்கா முடிவு செய்தது. பின் லேடன் பாகிஸ்தானில் ஒளித்திரந்ததைக் கண்டறிந்த அமெரிக்க கடற்படை உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்தி அவரது இருப்பிடத்தை வளைத்து மே 02, 2011 அன்று தாக்குதல் மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில் பின் லேடன், அவரது மகன் உட்பட 5 பேர் கொல்லப்பட்டனர்.

பின் லேடன் கொல்லப்பட்டதை அடுத்து அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா அப்படிச் செய்யத் தவறியது.

அமெரிக்க சனாதிபதி ஜோ பைடன் அமெரிக்க துருப்புக்கள் ஒகஸ்ட் 31 க்கு முதல் ஆப்கானிஸ்தில் இருந்து வெளியேறிவிடும் என அறிவித்துள்ளார். அப்படி அமெரிக்கா வெளியேறும் என ஒரு ஒப்பந்தம் ஒன்று கடந்த 29 பெப்ரவரி 2019 அன்று தலிபான் தலைவர்களோடு கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஆப்கனிஸ்தானில் இருந்து தமது படைகளை விலக்கிக் கொள்ள 30 மாதங்கள் அவகாசம் இருந்தும் அங்கு இப்போது குழப்ப நிலை நிலவுகிறது. கடைசியாக அங்கிருந்து கிடக்கும் செய்தியின் படி **ISIS (K)** தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் அமெரிக்க படையினர் 13 பேர் இறந்துள்ளனர். 18 பேர் காயப்பட்டுள்ளனர். ஆப்கானிய பொதுமக்கள் 90 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா ஆயிரக்கணக்கான அமெரிக்க குடிமக்களையும் ஆப்கானிஸ்தான் பொதுமக்களையும் வெளியே கொண்டுவ 5,800 இராணுவ வீரர்களை காபுல் விமான நிலையத்தில் நிறுத்தியுள்ளது.

ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் இருந்து ஒகஸ்ட் 31 முன்னர் அமெரிக்க படைகளை விலக்கிக் கொள்ளும் முடிவு தொடர்பாக சனாதிபதி ஜோ பைடன் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி வருகிறார்.

சனாதிபதி ஜோ பைடன் எடுத்த முடிவை முன்னாள் பிரித்தானியாவின் பிரதமர் ரோனி பிளேயர் மிகக் கடுமையாக விமர்ச்சித்துள்ளார். "இதுவொரு முட்டாள்" த்தனமான முடிவு **("imbecilic" decision)** எனச் சாடியுள்ளார். அதே நேரம் ஒகஸ்ட் 31 க்கு முன்னர் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் வெளியேறத் தவறினால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என தலிபான் எச்சரித்துள்ளது.



இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தலிபான் மீள ஆட்சியைக் கைப்பற்றினாலும் சாதாரண மக்கள் அவர்களுக்கு மாலை மரியாதை செய்யவில்லை. எதிராக தலிபான்களை பேய்களைப் பார்த்த அச்சத்தில் மக்கள் இருக்கிறார்கள்! இதன் காரணமாக மக்கள் ஆப்கானிஸ்தானை விட்டுவெளியேற படாதபாடு படுகிறார்கள். பேருந்தில் ஏறுவது போல அமெரிக்க விமானங்களில் முண்டியடித்து ஏறுகிறார்கள். இதன்போது உயிர் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

இதுவரை (செவ்வாய் 24) காபூலில் இருந்து 21,000 பேர் விமானத்தில் கொண்டு செல்லப்பட்டனர் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. முப்பத்தேழு அமெரிக்க இராணுவ விமானங்கள் மூலம் 12,700 பேரும் அமெரிக்க நட்புநாடுகளின் 57 விமானங்களில் கூடுதலாக 8,900 பேர் வெளியேறியுள்ளார்கள்.



ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான்கள் கடந்த காலத்தை விட (1996 - 2001) வித்தியாசமாக நாட்டை ஆட்சி செய்யப் போவதாக வாக்குறுதிகளை வழங்கி வருகிறார்கள். தலிபான்கள் "இஸ்லாமிய சட்டத்தின்" கீழ் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கப் போவதாக உறுதிளிக்கின்றனர். அதே சமயம் ஆப்கனிஸ்தான் ஒரு இஸ்லாமிய குடியரசு எனவும் அறிவித்துள்ளார்கள்.

தலிபான் என்பது இஸ்லாமிய அடிப்படைவாத **(Islamic Fundamentalism)** தீவிர அமைப்பாகும். மொகமது நபி வாழ்ந்த காலமான 7 ஆம் நூற்றாண்டு இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு அமைய இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் அரசு அமைய வேண்டும் என அடிப்படைவாத தலிபான் இயக்கம் நம்புகிறது. இஸ்லாம் ஒரு மதம் அல்ல அது ஒரு மார்க்கம் என்றும் அதில் அரசியல் உள்ளடக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் மதத்தை உலகமயப்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை என்றும் நவிலப்படுகிறது. இதற்காக முஸ்லிம்கள் ஜிகாதி போர்களை மேற்கொள்ள வேண்டும் என்று அல்குர் ஆன் கட்டளையிடுகிறது.

இசுலாமிய அடிப்படைவாதம் என்பது அரசியல் நோக்கங்களை அடைவதற்காக மதத்தின் பெயரால் இஸ்லாமியர்களால் மேற்கொள்ளப்படும் தீவிரவாத தாக்குதல்கள் ஆகும். இத்தீவிரவாத தாக்குதல்களுக்கான கருத்தியல் ஆதாரமாக குரானின் வசனங்களைக் கொள்ளுவதால் இவை இஸ்லாமிய தீவிரவாதம் என அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய குழுக்கள் அவர்கள் நிகழ்த்தும் வன்முறையையும் கொலைகளையும் குரான் வசனங்கள் மற்றும் ஹதீஸ் மூலம் நியாயப்படுத்துகின்றனர். சமீப காலங்களில் உலகெங்கும் தீவிரப் போக்குடைய இஸ்லாமியக் குழுக்கள் பிற இஸ்லாமியப் பிரிவைச் சார்ந்தவர்களையும் இறை நம்பிக்கையற்றவர்களையும் மற்றும் பிற மதத்தவர்களையும் கலீபா ஆட்சிமுறையின் படி தலையை வெட்டிக் கொல்லப் பரிந்துரைப்பது மற்றும் அடிமைப்படுத்துவது ஆகியவற்றைச் செய்கின்றனர். இவ்வாறான செயல்கள் மிதவாத இஸ்லாமியர்களுக்கும் தீவிரவாதப் போக்குடைய இஸ்லாமியர்களுக்கும் இடையில் கருத்தியல் வேறுபாடுகளை உருவாக்குகின்றன.

பெண்களைப் பொறுத்தளவில் இஸ்லாம் அவர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

*ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ள இஸ்லாம் அனுமதிக்கிறது.

*மனைவியைப் பிடிக்காவிட்டால் சர்வ சாதாரணமாக விவகரத்துச் செய்ய இஸ்லாம் ஆண்களுக்கு உரிமை வழங்கியுள்ளது.

*விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு ஜீவனாம்சம் கொடுப்பதையும் இஸ்லாம் மறுக்கிறது.

*பெண்களை ஹிஜாப் எனும் ஆடையால் போர்த்தி அவர்களின் சதந்திரத்தைப் பறிக்கிறது.

*வாரிசுரிமைச் சட்டத்தில் ஆண்களுக்கு இரு மடங்கும், பெண்களுக்கு ஒரு மடங்கும் எனப் பாரபட்சம் காட்டுகிறது.

*இரண்டு பெண்களின் சாட்சி ஒரு ஆணுடைய சாட்சிக்குச் சமமானது என்று பாரபட்சம் காட்டுகிறது.

*கணவன் இறந்து விட்டால் இத்தா என்ற பெயரில் குறிப்பிட்ட காலம் பெண்களைத் தனிமைப்படுத்தி வைக்கிறது.

*பெண்கள் ஆட்சித் தலைமை வகிக்கக் கூடாது எனக் கூறிப் பெண்களின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்கிறது.

*முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதில்லை.

*முஸ்லிம் பெண்கள் பள்ளிவாசல்களில் தொழ அனுமதியில்லை.

தலிபான்கள், பெண்கள் ஆசிரியர், மருத்துவர் ஆகப் பணிபுரிய மட்டும் அனுமதிப்பார்கள். ஏனைய தொழில்கள் செய்ய அனுமதியில்லை.

இஸ்லாம் இசை. நடனத்தை தடை செய்கிறது. தலிபான்கள் தொலைக்காட்சிகளை தடை செய்து விட்டதாக அறிவித்துள்ளார்கள். போகப் போக வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறினால் அது பற்றி வியப்படையத் தேவையில்லை.

2001 இல் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு, தாலிபான் பெண்கள் படிப்பதைத் தடைசெய்து, விபச்சாரம் போன்ற குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட பெண்களை ஷாரியா சட்டத்துக்கு அமைய கல்லால் அடித்துக் கொன்றனர்.

2001 இல் ஆப்கானிஸ்தானில் தலிபான்களது ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் கல்வி அமைச்சகம், இப்போது 9.7 மில்லியன் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 42 சதவீதம் பேர் பெண்கள் என்றும் கூறியுள்ளது. நாடு முழுவதும் 18,000 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன, இது இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு 3,000 ஆக இருந்தது.

கடந்த ஒகஸ்ட் 15 வரை ஆப்கான் நாடாளுமன்றத்தில் 68 பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். கடந்த இரண்டு தசாப்தங்களாக, பெண்கள் மேலவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் போன்ற மூத்த அரசியல் மற்றும் அரசாங்க பதவிகளையும் வகித்துள்ளனர்.

2003 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், குழந்தை இறப்பு விகிதம் 1,000 பேருக்கு 53 முதல் 23 ஆக குறைந்துள்ளது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

சனநாயக விழுமியங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் புறந்தள்ளும் தலிபான் ஆட்சியை அங்கீகரிக்கப் போவதில்லை என இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அறிவித்துள்ளன. ஆப்கானிஸ்தானுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவிகளை இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக வங்கி நிறுத்தியுள்ளன.

அதே சமயம் தலிபான்கள் சீன அரசோடு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்கள். பாகிஸ்தான், உருசியா, இரான் போன்ற நாடுகள் தலிபான்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

மிதவாத முஸ்லிம் நாடுகள் தலிபான் ஆட்சியை அங்கீகரிப்பார்களா என்பது கேள்விக் குறி. முஸ்லிம் அடிப்படைவாதிகள் தங்கள் ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என பல மிதவாத இஸ்லாமிய நாடுகள் எண்ணுகின்றன.

இன்றைய பூகோள அரசியலில் தலிபான்களது இஸ்லாமிய அடிப்படைவாத அரசாட்சி நிலைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

*(சென்ற வாரம் எழுதிய கட்டுரை)*

# ரொறொன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயத்தில் வெளியிடப்பட்ட ஆன்மீகச் சஞ்சிகை "தெய்வீகம்"



"தெய்வீகம்" என்னும் சர்வதேச ஆன்மீக காலாண்டு சஞ்சிகை கடந்த திங்கட்கிழமையன்று ரொறொன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயத்தில் மிகசிறப்பாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.
சிவாகம வித்தகர்,டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சார்யார் அவர்கள் போசகரா-கவும் மற்றும் மதிப்புகுரிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள் அவர்கள் ஆலோசகராகவும் என். ஞானச்செல்வம் (செல்வம்) சர்வதேச பொறுப்பாசிரியராகவும் கொண்டு இந்த சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. முதலாவது வெளியீடு தாயகத்தில் பதித்தாலும் சர்வதேசத்தில் மலர்ந்தது .அதுவும் தமிழர்கள் அதிகமாக வாழும் கனடாவில் ரொரொன்ரோவில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்களின் தலைமையிலும் சிவஸ்ரீ சோமாஸ்கந்தகுருக்கள் அவர்களின் அருளாசியுரையுடனும் சிவஸ்ரீ முருகாணந்தக்குருக்கள் வாழ்த்துரையுடனும் விழா ஆரம்பமாகியது. பின்னர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றிய ஒன்ராரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன்.கணபதி அவர்கள் தனது ஊ உரையில் ‘‘மக்களிடையே ஆன்மீகம் வளரவேண்டும் நீதிவழி செல்ல ஆன்மீகம் தேவை அதற்கு இப்படியான சஞ்சிகைகள் அவசியம்" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய பொறுப்பாசிரியர் என்.ஞானச்செல்வம்(செல்வம்) தனது உரையில் "சர்வதேசம் எங்கும் வாழுகின்ற தமிழ் மக்கள் சமயத்தையும் தமிழையும் காப்பாற்றவேண்டியதும் கடைப்பிடிக்கவேண்டியதும் ஒவ்வருவரது கடமை "தமிழ் இன்றேல் சமயம் இல்லை""சமயம் இன்றேல் தமிழ் இல்லை" என்பதுதான் உன்மை. தாயகத்தில் பண்டிதரும்,சமய சொற்பொழிவாளரும், பட்டிமன்ற நடுவரும்,பாடல் ஆசிரியரும், சைவம் தொலைக்காட்சியூடாக தெய்வத்தமிழை வளர்த்துவருபவருமான செந்தமிழ்புலவர் பொன்.சுகந்தன் அவர்களின் தெய்வீகம் எனும் ஆன்மீக சஞ்சிகையை சர்வதேசமெங்கும் வெளிவரச்செய்யவேண்டும் என்ற விருப்பத்திற்கு அமைய கனடா-வில் இந்த சஞ்சிகை வெளியிடப்படுகின்றது அதற்கு பொறுப்பாக செயல்படமுடியுமா என்று பணிவுடன என்னிடம் கேட்டார்கள் அவரது நல்ல நோக்கத்திற்கு உறுதுணை செய்வோம் என்று இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இந்த வெளியீட்டு முயற்சியில் இறங்கினேன்" என்றார்.

அடுத்து சாமி அப்பாத்துரை அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.முதல் தெய்வீகம் சஞ்சிகையை சர்வதேசப்பொறுப்பாசிரியர் என்.ஞானச்செல்வம் அவர்கள் வெளியிட லோகன் கணபதி அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.
விழா ஏற்பாட்டாளர்களின் சிறப்புவெளியீடு அழைப்பையேற்று வருகைதந்த அனுசரணையாளர்கள்,வர்த்தகர்கள்,சமூகசேவையாளர்கள்,தொண்டர்கள்.செய்தி வெளியிட்ட உதயன் பத்திரிகை,ஈழநாடு.நேரில் வருகைதந்து சிறப்பித்த விளம்பரம் பத்திரிகை ஆசிரியர் மற்றும் மேடைஅமைத்து ஒலி அமைத்து தந்த ஜெயானந்த சர்மாவுக்கும் வீடியோவையும்,போட்டோவையும் தனியாக நின்று எடுத்த புகைப்பட கலைஞன் உதயன் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கப்பட்டது.
.தெய்வீகம் சஞ்சிகை பெறவிரும்புபவர்கள்இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.சர்வதேச பொறுப்பாசிரியர் என்.ஞானச்செல்வம்(செல்வம்) 416 806 5397


Car Accident // Injury Law
Our friendly Lawyers will help you with:

- Any Car Accident Situation (Big or Small) – get financial help
- Traffic Tickets
- Personal Injuries - Minor to Major
- Slip and Fall injuries, concussion, fracture, chronic pain
- Work Injuries
- Long and Short Term Disability
- Stress Leave

We are a large Law Firm with 20 Lawyers servicing clients across Canada and US
உங்கள் தேவைகளுக்கு தமிழிலும் உரையாடி சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்
Please Call or Text: (647) 812-6350 Yaalini

Take advantage of your work benefits
Maple Health Center
We accept all insurances, Social Services, ODSP and Refugee programs
Massage
Acupuncture
Naturopathy
Physiotherapy and
Psychological consultations
Medical Supply – braces, walkers,
compression socks
Orthopedic Mattresses and Pillows




உங்கள் தேவைகளுக்கு தமிழிலும் உரையாடி சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்
2235 Kennedy Road (at Kennedy /Sheppard intersection)
Call for appointment: (416) 497-2525


கனடாவில்
ஒரே நாளில் ஒரே மேடையில்
அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்
POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
www.uthayannews.ca
உதயன்
நண்பன் WORLDWIDE
வெள்ளி விழாவும்
விருது விழாவும்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty தமிழா
30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்
கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து
Covid-19 கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்
Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4
அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512

# பொதுக்குழுக் கூட்டத்தை எதிர்த்த வழக்கு: சசிகலா பதில்



மனுபொதுக்குழுக் கூட்டத்தை எதிர்த்த வழக்கை நிராகரிக்கக் கோரி, அதிமுக நிர்வாகிகள் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என, சசிகலா தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பதில்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிமுக பொதுச் செயலாளராக சசிகலா நியமிக்கப்பட்டது செல்லாது என, 2017ம் ஆண்டு நடந்த அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பொதுக்குழுக் கூட்டத்தைச் செல்லாது என அறிவிக்கக் கோரி, சசிகலா தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, சென்னை 4வது உதவி உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

சசிகலாவின் இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவுக்கு சசிகலா தரப்பில் இன்று (செப். 02) தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, கட்சியின் பெயர் மற்றும் சின்னம் தொடர்பாக மட்டுமே தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளதாகவும், கட்சியின் மற்ற விவகாரங்களில் தலையிட முடியாது எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும், உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கையும் தேர்தல் ஆணையம் தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளதாகக் கூறிய சசிகலா, தனது வழக்கை நிராகரிக்கக் கோரி, அதிமுக நிர்வாகிகள் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கிடையில், இந்த வழக்கில் இருந்து தினகரன் விலகியுள்ளதால், சசிகலா தரப்பில் திருத்த மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என, அதிமுக அமைப்புச் செயலாளர் செம்மலை பதில் மனுத்தாக்கல் செய்தார். அதில், சசிகலாவின் திருத்த மனு விசாரணைக்கே உகந்ததல்ல எனவும், விசாரணையைக் காலம் தாழ்த்த வேண்டுமென்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், சசிகலாவின் திருத்த மனுவை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கட்சியின் நிதி விவகாரங்கள் சம்பந்தப்பட்டுள்ளதாலும், வங்கிகளை எதிர்மனுதாரராக சசிகலா இணைத்துள்ளதாலும், வங்கித் தரப்பை பதில் மனுத்தாக்கல் செய்ய உத்தரவிட்ட உரிமையியல் நீதிமன்றம், விசாரணையை செப்டம்பர் 6ம் தேதிக்குத் தள்ளிவைத்துள்ளது.

# ஓபிஎஸ் மனைவி உடல் இறுதி அஞ்சலிக்குப் பிறகு பெரியகுளத்தில் தகனம்

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமியின் உடல் அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்களின் அஞ்சலிக்குப் பிறகு பெரியகுளத்தில் இன்று மதியம் எரியூட்டப்பட்டது. அதிமுக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர்செல்வத்தின் மனைவி விஜயலட்சுமி (66) நேற்று மாரடைப்பால் சென்னையில் காலமானார். அவரது உடல் நேற்று இரவு ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த ஊரான தேனி மாவட்டம் பெரியகுளத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தெற்கு அக்ரஹாரத்தில் உள்ள அவரது வீட்டில் அஞ் சலிக்காக வைக்கப்பட்டது.

அன்றிரவு அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், முன்னாள் அமைச்சர்கள் செம்மலை, செல்லூர் ராஜூ, நத்தம் விசுவநாதன், வெல்லமண்டி நடராஜன், எம்.சி.சம்பத், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த்தின் மகன் விஜயபிரபாகரன், வேடசந்தூர் சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் பரமசிவம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், அதிமுக தேனி மாவட்டச் செயலாளர் எஸ்பிஎம்.சையதுகான் உட்படப் பலர் அஞ்சலி செலுத்தினர்.



இன்று காலையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தேனி ஆட்சியர் க.வீ.முரளிதரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.பின்பு, எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், தங்கமணி, வேலுமணி, மா.ஃபா. பாண்டியராஜன், கம்பம், ஆண்டிபட்டி, பெரியகுளம் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணக்குமார், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் தங்கதமிழ்ச் செல்வன், எல்.மூக்கையா, லட்சுமணன், திரைப்பட இயக்குநர் பாரதிராஜா உட்படப் பலரும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.பல மாவட்டங்களில் இருந்தும் அதிமுகவினர் ஏராளமானோர் வந்திருந்தனர் குறுகிய தெருவில் ஆயிரக்கணக்கானோர் கூடியதால் கடும் நெரிசல் ஏற்பட்டது.

எனவே முன்னாள் முதல்வர் பழனிசாமி உள்ளிட்ட பலரும் வீட்டிற்குள் சென்று அஞ்சலி செலுத்த சிரமப்பட்டனர். இதனால் 10 நிமிடத்திற்கு மேல் நெரிசலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.இறுதி அஞ்சலிக்குப் பிறகு சம்பிரதாய முறைப்படி நீர்மாலை எடுத்தல், பிறந்த வீட்டு சேலை அணிவித்தல் உள்ளிட்ட இறுதிச் சடங்குகள் நடந்தன. இதனைத் தொடர்ந்து மதியம் 1.30 மணிக்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரை ரதத்தில் விஜயலட்சுமியின் உடல் வைக்கப்பட்டு டிராக்டரில் ஊர்வலமாகக் கிளம்பியது.

தேவர்சிலை அருகே ஓ.பன்னீர்செல்வத்தின் பூர்வீக வீட்டின் வழியே சென்று கம்பம் ரோடு, காந்தி சிலை, தண்டுபாளையம், வராக நதி, பழைய பேருந்து நிலையம் வழியாக நகராட்சி எரிவாயு மின் தகன மயானத்திற்கு உடல் கொண்டு வரப்பட்டது. அங்கு சந்தனக் கட்டைகள், விறகுகளின் மேல் விஜயலட்சுமியின் உடல் வைக்கப்பட்டது. உடலுக்கு மகன் ப.ரவீந்திரநாத் எரியூட்டினார்.

# தமிழகத்திலேயே முதல் முறை: நீலகிரியில் ஆதார், கரோனா தடுப்பூசி சான்று இருந்தால் மட்டுமே மது



நீலகிரி மாவட்டத்தில் ஆதார் அட்டை, கரோனா தடுப்பூசி சான்றைக் காண்பித்தால் மட்டுமே வாடிக்கையாளர்களுக்கு மது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டத்தில் 76 மதுக்கடைகள் இயங்கி வருகின்றன. மாவட்டத்தில் நாள்தோறும் சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான மது விற்பனையாகிறது. பண்டிகைக் காலம் மற்றும் கோடைக் காலத்தில் மது விற்பனை இரட்டிப்பாவது வழக்கம். குளிர்ப் பிரதேசம் மற்றும் சுற்றுலாத் தலம் என்பதால் நீலகிரி மாவட்டத்தில் மது விற்பனை அதிகமாக உள்ளது.

இந்நிலையில், தற்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் மதுக்கடைகளில் மது வாங்கச் செல்வோர் ஆதார் அட்டை, கரோனா தடுப்பூசி சான்றிதழைக் காண்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றுகளை மதுக்கடை ஊழியர்களிடம் காண்பித்தால் மட்டுமே மது வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலேயே இந்த நடைமுறை முதன்முறையாக நீலகிரி மாவட்டத்தில் அமல்படுத்தப் பட்டுள்ளது. இந்த நடைமுறையால் மது வாங்க வரும் நபர்கள் கரோனா தடுப்பூசி செலுத்த முற்படுவார்கள் என டாஸ்மாக் மாவட்ட அதிகாரி சேகர் தெரிவித்தார். மேலும் அவர் கூறும்போது, ''மக்களிடம் தடுப்பூசி செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், டாஸ்மாக் கடைகளில் மது வாங்க வரும் வாடிக்கையாளர்கள் கட்டாயம் தடுப்பூசி சான்றைக் காண்பித்து மது வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உத்தரவின் பேரில் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.இதன் மூலம் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவது குறித்து விழிப்புணர்வு வரும். தடுப்பூசி செலுத்தாதவர்கள் உடனடியாகத் தடுப்பூசி செலுத்துவார்கள்'' என்று தெரிவித்தார்.நீலகிரி மாவட்டத்தில் 9 பேரூராட்சிகள் மற்றும் கூடலூர் நகராட்சியில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் தடுப்பூசி செலுத்தும் விகிதம் கிட்டத்தட்ட 100 சதவீதத்தை அடையும் நிலையில் உள்ளது.

மாவட்டத்தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட 5.82 லட்சம் பேருக்குத் தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது. இதில், தற்போது 70 சதவீத மக்களுக்கு கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டது. மது வாங்கத் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற நடைமுறையால் மதுப் பிரியர்கள் தாமாக முன்வந்து தடுப்பூசி செலுத்துவார்கள். இதனால், தடுப்பூசி செலுத்தியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னைக்கு அருகில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

இந்தியாவிலேயே முதல் முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர



மணியன் அறிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவையில் ஒவ்வொரு துறை வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இன்று (செப். 02) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. இதில், அத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 110 அறிவிப்புகளை வெளியிட்டார். அப்போது, இந்தியாவிலேயே முதல் முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிவிப்பில், "தமிழகத்தின் பழமையான மருத்துவ முறைகளான சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்துக்கென தனிப் பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் உட்பட) சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும்'' எனத் தெரிவித்தார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் "இகுருவி" 10,000 காலடிகளின் நூறாவது நாள் வெற்றி விழா கொண்டாடப்பெறுகிறது

கடந்த வருடம் நடைபெற்ற Ekuruvi Steps போன்று இந்த வருகடந்த ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 08 வரை நூறு நாட்க்கள், நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் என்று இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து உங்கள் உடல் உள அரோக்கியதை மேம்பெடுத்துவது மட்டுமல்லாது சமூகத்தையும் புத்துணர்ச்சியுடன் அழைத்துச்சென்ற நமரசரஎளைஞவநிள 2021 இன் நூறாவது நாள் வெற்றிவிழா வரும் புதன்கிழமை 08ம் திகதி நடைபெறவுள்ளது.

Covid-19 வைரஸ் பரம்பல் காலத்தில் எமது உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வது அவசியமாகின்றது. பல ஆய்வுகள் நாளுக்கு 10,000 காலடிகள் நடைப்பயிற்சியின் பயன்களை அறிவியல் பூர்வமாக நிரூபித்துள்ளன.

BMI யைக் குறைத்து உடல் எடையைப் பேணுவது, நீரிழிவு, இருதய நோய் என்பவற்றை வராது தடுப்பது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது என்று பல பயன்களைக் கொண்ட இந்த நடைப்பயிற்சியைத் தொடர்ந்து 100 நாட்கள் என்று இலக்கு நிர்ணயித்து நிறைவேற்றுவதன் மூலம், நாளடைவில் அதுவே பழக்கமாகி உடல் ஆரோக்கியம் மேம்பட உதவும். Covid-19 பரம்பல் காலத்தில் உலகம் முழுவதும் இவ் உடல் ஆரோக்கிய மேம்பாட்டு நிகழ்வை நடத்தியதில் Ekuruvi பெருமையடைகின்றது.

இந்நிகழ்வில் இணைந்து கொண்ட ஒவ்வொருவரும் எங்கள் Whatsapp "Ekuruvi Steps 2021" இன் குழுமத்தில் இணைத்து ஒவ்வொரு நாளும்தாங்கள் நடந்த கால் நடைகளின் எண்ணிக்கையை பதிவிட்டுவந்துள்ளார்கள். அதுவே எங்களால் தொடர்ச்சியாக 100 நாட்க்கள் கண்காணிக்கப்பட்டு வரும் 8ம் திகதி தனது நூறாவது நாளை Milliken இன் பாக்கில் நிறைவுசெய்யவுள்ளது.

இத் தொடர் 100 நாட்க்களிலும் பங்கு பற்றியவர்களுக்கு விருதும், சான்றிதழ்களும் வழங்கி கோவுரவிக்கப்படும். இதில் பங்குபற்றிய 220 பயனாளிகளையும் மற்றும் ஆதரவாளர்களையும் ஊடகவியலாளர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக, தாயகத்தில் வட, கிழக்கு மற்றும் மலையகம் எங்கும் கோவிட-19 காலத்தில் பொருளாதார கடும் நெருக்கடியை எதிர்வுகொள்ளும் ஆதரவற்ற மக்களுக்கு உதவுமுகமாக திரு. ஆறுதிருமுருகன் ஐயாவின் வழிநடத்தலில் "சிவபூமி அறக்கட்டளை" யை ஒரு குறியீட்டு அமைப்பாக நாம் இந்த வருடம் Ekuruvi Steps 2021 நேரடியாக உங்கள் பங்களிப்பை செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**உங்கள் உதவிகளுக்கு:**

**Sivapoomi Trust, Kondavil, Jaffna**
**Commercial Bank Jaffna**
**Acc No: 1060016510**
**SWIFT CORD - CCEYLKLX**

**நவஜீவன் அனந்தராஜ்**
**Ekuruvi Steps 2021**

---

**Ekuruvi Steps 2021 - 100 Days Celebration**
**10,000 Steps Per Day For 100 Days**
**08 Sep 2021**
**5:30 PM TO 8:00 PM**
**Milliken District Park**
**5555 Steeles Ave E, Toronto**

**- Medal Ceremony**
**- Certification Ceremony**
**- Dinner**
**- Covid 19 Protocol**

---




சினிமா

# குழந்தைகளை தொடும்பொழுது Good Touch Bad Touch பற்றிய வித்தியாசத்தை சொல்லும் "கிரீன் சில்லீஸ்"

கன்னியாக்குமரி மாவட்டம் நாகர்கோவில் பகுதியில் வாழும் நந்தா எனும் ஆட்டோக்காரனுக்கும் அதே ஆட்டோவில் தினமும் பள்ளிக்குச் செல்லும் பெண் குழந்தை யமுனாவிற்கும் இடையே மலரும் அன்பின் வெளிப்பாடே "கிரீன் சில்லீஸ்". குழந்தைகள் பாலியலை தோலுரித்துக்காட்டும் கதையம்சம் கொண்டதே "கிரீன் சில்லீஸ்". பல படங்களை இயக்கி தயாரித்த சஞ்சய் ராம் இப்படத்தை இயக்கி உள்ளார்.

கதையின் நாயகன் லெனின் ஆட்டோ ஓட்டும் நந்தாவாக அறிமுகமாகிறார். நாயகன் லெனினின்மு றைப்பெண்ணா. ககன தீபிகாவும் முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் விலைமாது மகியாக டெல்லியைச் சேர்ந்த திவ்யாங்கனா மலையாளத்தில் பிரபல நடிகரான சாய்குமாரின் பேத்தியாகிய நந்தனா தும்பி, நூற்றுக்கணக்கான படத்தில் நடித்த சாப்ளின் பாலு குழந்தைகளை விற்கும் புரோக்கராகவும் பல படங்களை இயக்கி தயாரித்த சஞ்சய் ராம் மன்மதன் எனும் மாறுபட்ட கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். புதுமுகங்களாகிய பரூக், தினேஷ் நந்தித், பேபி தேவநந்தா, பேபி அனுக்ரகா, பேபி கார்த்திகா ஆகியோரும் நடித்துள்ளனர்.



ஒளிப்பதிவு - பினேஷ் தம்பி, இசை - பு. ராம்
பாடல்கள் - சஞ்சய்ராம், பாலா சீதாராமன்
தயாரிப்பு - பு.ளு சினிமா இண்டர் நேஷனல், ரெட் குளோபல் நெட்ஒர்க்
கதை திரைக்கதை வசனம் இயக்கம் - சஞ்சய் ராம்

இரும்புக் கூட்டுக்குள்ளே இரு மனசு பறக்கையிலே குறும்பு பார்வையிலே குறுநிலவு சிரிக்கையிலே அரும்பு முகத்துக்குள்ளே அழகழகா வானவில்லே. எனும் பாடலை பாலா சீதாராமன் எழுத கௌசிக் பாடியுள்ளார்.

கடவுளை பாக்கணுமே கண்டபடி கேக்கனுமே பாத்தவுங்க யாரிருக்கா கேட்டவங்க பதிலிருக்கா காலம் சொல்லும் வாழ்க்கையில தொடரும் இந்த பயணத்துல கல்லே கடவுளே கருணையை நீ காட்டலியே .. எனும் பாடலை சஞ்சய் ராம் எழுத ராம் பாடியுள்ளார். இதன் படப்பிடிப்பு கன்னியாக்குமரி, நாகர்கோவில், திருவனந்தபுரம், ஆலப்புழா ஆகிய இடங்களில் 35 நாட்களில நடைபெற்று முடிவடைந்தது. விரைவில் வெளிவர திட்டமிடப்பட்டுள்ளது.

# "எதிர்ப்பாளர்களின் கூச்சல்களைக் கண்டு நானும் எமது கட்சி வேட்பாளர்களும் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை"

## லிபரல் கட்சித் தலைவர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு



"கனேடியர்களை முன்னோக்கி செல்லும் எனது சரியான பாதையில் பயணிக்கின்றேன். எனவே எதிர்ப்பாளர்களின் கூச்சல்களைக் கண்டு நானும் எமது கட்சி வேட்பாளர்களும் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை", என்று கனடியப் பிரதமரும் லிபரல் கட்சியின் தலைவருமான ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள கேம்பிரிட்ஜ் நகரத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் தனது சக வேட்பாளர்கள் சிலருடன் சென்றிருந்தார். அப்போது அவருக்கு எதிராக பதாகைகளைத் தாங்கிய வண்ணம் மோசமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்த வண்ணமும் அங்கு நூற்றுக்கு உட்பட்ட மக்கள் கூடி கோசமிட்டனர். மிகுந்த அவமரியாதையான வார்த்தைகளைக் கையாண்ட அந்த கூட்டத்தினர் அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளையும் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் அவமதித்தார்கள்.

ட்ரூடோ அவர்கள்கேம்பிரிட்ஜ் நகரில் தற்போதைய முக்கிய பிரச்சனையாக உள்ள காலநிலை மாற்ற நடவடிக்கைகளை அறிவிப்பதற்காகவும் தொழிற்சாலைகளுக்கு சுத்தமான தொழில்நுட்பங்கள் மற்றும் கனடாவில் விற்கப்படும் அனைத்து பயணிகள் வாகனங்களும் 2035க்குள் பூஜ்ஜிய வெப்ப வெளியேற்றத்தைக் கொண்டவையாகவும் இருக்க வேண்டும என்றும் திட்டமிடப்படுவதாகக் குறிப்பிட்டார்.

அப்போது அங்கு நிலைமைகள் சற்று பதட்டம் நிறைந்தவையாக இருந்ததனால், பாதுகாப்பு காரணங்களுக்காக நிகழ்வை ரத்து செய்வேண்டியிருந்தது என்றும் கூறப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை நிகழ்வு - ஒரு மணி நேரம் தாமதமாகத் தொடங்கியது - ட்ரூடோவிற்கு எதிராக கோசம் எழுப்பி எதிர்ப்பைக் காட்டியவர்களை தவிர்க்க வேண்டும் என்பதற்காக அதற்கேற்ப வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. எனினும் எதிர்ப்பு கோசங்களை எழுப்பிய வண்ணன் அவர்களில் சிலர் பின்னர் விமான நிலையத்திற்கு ஊடகப் ஜஸ்ரின் ட்ரூடோ பயணித்த பேருந்தைப் பின்தொடர்ந்தனர்.

மேலும் இன்னும் சில இடங்களிலும் எதிர்ப்புக் குரல் எழுப்பியவண்ணம் பலரும் மற்றும் தடுப்பூசி எதிர்ப்பு எதிர்ப்பாளர்கள் - சிலர் நாடு முழுவதும் ஜஸ்ரின் ட்ரூடோவைப் பின்தொடர்வதாகவும் இதனால் நாடு முழுவதுமான தேர்தல் - பிரச்சாரத்தின் மூன்றாம் வாரத்தில் லிபரல் கட்சியின் தலைவராக இவருக்கு வழங்கப்படுகின்ற பாதுகாப்பை அதிகரிப்புத தொடர்பாகவும மத்திய காவல் துறை ஏற்பாடுகளைச் செய்து வருவதாககவும் கூறப்படுகின்றது.

இந்த வேளையில் கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமான சிபி-சி நிருபர் டிராவிஸ் தன்ராஜ் ஜஸ்ரின் ட்ரூடோவிடம் முன்வைத்த ஒரு கேள்வியில் ஒரு கறுப்பினப் பாதுகாப்பு அதிகாரி மீது உறுப்பினர் மீது இனவெறிச் சாயல் கொண்ட சொற்கள் எறியப்பட்டதாகவும், ஒரு பெண் பொலிஸ் அதிகாரியிடம் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட கூச்சலையும் பற்றிக் கேட்டார்.

இந்தத் தேர்தலில் தேர்வின் முக்கியத்துவத்தை இவ்வாறான தாக்குதல்களும் எதிர்ப்புக் குரல்களும் எங்களுக்கு இன்னும் காட்டுகின்றன. இனவாதத்தையும் பெண்களுக்கு எதிரான தாக்குதல்களையும் முறியடிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது என்று அந்த சிபிசி செய்தியாளருக்கு ஜஸ்ரின் ட்ரூடோ கூறினார்.

அவர் அங்கு மேலும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் "நாங்கள் இனங்களுக்கு இடையிலான பிரிவு, வெறுப்பு, இனவெறி மற்றும் வன்முறையில் ஆகியவற்றில் வீழ்த்தப்படுகின்றோமோ? அல்லது நாங்கள் சொல்கிறோமா", "இல்லை, உங்களுக்கு என்ன தெரியும், என்று சத்தமிட்ட வண்ணம் அவர்கள் எங்கள் முன்வந்தால், அது நம்மை பின்வாங்கச் செய்யும் வேலையைச் செய்யாது நாம் பார்க்க வேண்டும் . எது சரி என்பதன் பக்கம் எழுந்து நிற்பதை கனேடியர்கள் இந்த தேர்தலில் சொல்லுவதற்கோ அல்லது அதை நீருபிப்பதற்கோ அவர்கள் அச்சமடைய மாட்டார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.




Carefirst Seniors & Community Services Association

கோவிட் -19
POP-UP சோதனை

புதிய நேரம் (ஜூலை முதல்)

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஏப்ரல் 10, 2021 முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
தொடக்க தேதி: ஜூலை 3, 2021 ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
தொடக்க தேதி: ஜூலை 6, 2021 ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
தயவுசெய்து கவனிக்கவும்: இந்த இடத்தில் சோதனை செய்வது வாகன நிறுத்துமிடத்தில் drive-thru நடைமுறை மூலம் இயங்கும்
ஸ்ட்ராட் தேதி: ஜூலை 8, 2021 ஒவ்வொரு வியாழக்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
**www.carefirstontario.ca**
Walk-In (10 am - 2 pm) ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் **www.carefirstontario.ca** அல்லது அழைக்கவும் **416-646-5108**

**உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association**

Carefirst Family Health Team
Health for All Family Health Team
Islamic Society of Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on June 20, 2021



On September 20th RE-ELECT

# HELENA JACZEK

Markham—Stouffville

## About Helena

- Dr. Helena Jaczek was elected in 2019 as Member of Parliament for Markham-Stouffville.
- As Chief Medical Officer of Health for York Region for 18 years, Helena was responsible for Public Health, Land Ambulance and long-term care.
- Helena served as the Member of Provincial Parliament for the riding of Oak Ridges-Markham for 11 years. During that time, she served as the Minister of Health and Long-Term Care and Minister of Community and Social Services.
- As a member of the Standing Committee on Industry, Science, and Technology and the Standing Committee on Transport, Infrastructure and Communities, Helena worked to lessen the impact of the health and economic consequences of the global pandemic.
- Helena graduated from the Faculty of Medicine at the University of Toronto and was on the active staff at Women's College Hospital.
- She has a Masters of Health Science and a Masters of Business Administration.







## Delivering Results For Markham-Stouffville

Introduced and increased the Canada Child Benefit, a tax-free payment of up to $6,833 per year, per child, to help eligible families with the cost of raising children, helping over **16,000 families** and over **29,000 kids** in Markham-Stouffville.

Supporting our seniors, including restoring the age of eligibility for Old Age Security (OAS) to 65, a **one-time increase of $500** to the OAS in 2021 and a permanent increase to OAS of **10% in 2022** for seniors aged 75 and over.

Building sustainable transit in our community through a **$2.2B investment in York Region, including the Yonge Subway extension**, to boost our economy and improve your commute.

This year, **invested nearly $150,000 through** the New Horizons for Seniors Program to promote social inclusion and improve seniors' health and well-being in Markham-Stouffville.

**Over $300,000 through the Energy Savings Rebate Program** to help residents with up to $5,000 in grants for retrofits to make energy-efficient purchases, save them money, make their homes more energy efficient, help protect the environment, and address climate change.

**Over $6.2 million** through the COVID-19 Resilience Infrastructure Stream to advance Markham's Trees for Tomorrow program, continue the City's Block Street Pruning and replace 595 street trees, plant approximately 500 trees in Stouffville and replace/construct new sidewalks, and upgrade Markham's Emergency Operations Centre.

**$18.4 billion in** COVID-19 support for Small-Businesses in Ontario through the Canada Emergency Business Account (CEBA).

905-554-0337
votehelena.ca
info@votehelena.ca

/DrHelenaJaczek
@HelenaJaczek
@HelenaJaczek

Authorized by the Official Agent for Helena Jaczek

HELENA JACZEK

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

## ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....




மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைண்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைண்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...







காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்



# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# நந்திக் கொடி புகழ் தனபாலா அவர்களுக்களுக்கு அகவை எழுபதாகின்றது இன்று



சைவசமயத்தின் சின்னமாக விளங்கும் நந்திக் கொடிகளை இந்து மக்களுக்கும், இந்து மத நிறுவனங்களுக்கும், ஆலயங்கள் மற்றும் பாடசாலை என்பவைகளுக்கும் இலவசமாக வழங்கும் ஒரு சிறப்பான கைங்கரியத்தை இவர், ஒரு தனிமனித முயற்சியாக கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் பிரபல தொழிலதிபராக விளங்கியவர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட சி.த. சின்னத்துரை. "சிந்தனைச் சிற்பச் செல்வர்" என சிறப்பித்துச் சொல்லப்படும் இவர், கொழும்பில் "லீலா குறூப்" என்ற பெயரில் வர்த்தக நிறுவனத்தை நடத்தி வந்ததுடன், முதன்முதலாக "லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்" என்ற பெயரில் சித்திர நாட்காட்டியை அறிமுகம் செய்த பெருமைக்குரியவர். இதற்கும் மேலாக சமய பொதுநலப் பணிகளிலும் பெரிதும் ஈடுபட்டு வந்தார். இவரது ஒன்பது ஆண் பிள்ளைகளுள் எட்டாவது புதல்வர்தான் விடைக்கொடிச் செல்வர் தனபாலா.

தகப்பனாரால் தோற்றுவிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் இன்றும் இவர், பணிப்பாளர்களுள் ஒருவராக செயற்பட்டு சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

தனபாலா 1970 ஆம் ஆண்டு முதல், அதாவது தனது பத்தொன்பதாவது வயதிலிருந்தே சமய மற்றும் பொதுநல நிறுவனங்களுடன் சாதாரண உறுப்பினராக இணைந்து செயலாற்றி வந்தார். கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபை, அகில இலங்கை இந்து மாமன்றம் என்பனவற்றின் உபதலைவர் பதவிக்கும், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், கொழும்பு கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய திருப்பணிச் சபை என்பனவற்றின் தலைவர் பதவிக்கும் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றினார்.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தலைவராகவும், உலக சைவப் பேரவை (இலங்கைக் கிளை), விவேகானந்த சபை (கொழும்பு), திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை என்பனவற்றின் உபதலைவராகவும், சைவநெறிக் கழகத்தின் காப்பாளராகவும், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இந்து கலாசார நிதியம் என்பனவற்றின் ஆளுநர் சபை உறுப்பினராகவும், மனிதநேய நிதியம், கொழும்பு சைவமுன்னேற்றச் சங்கம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை என்பனவற்றின் தர்மகர்த்தாவாகவும் தற்போது பதவி வகித்து வருகின்றார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமானவர்களுள் இவர் ஒருவர். 1980 ஆம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையில் இணைந்து உப தலைவராகத் தெரிவானார். 1990 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இந்து மாமன்ற தலைமையகக் கட்டடப் பணிகள் மீளவும் ஆரம்பமான காலத்தில் மாமன்ற நிதிக்குழுவின் தலைவராகப் பணியாற்றினார். அதன் பின் மாமன்ற கட்டடக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1996 பிற்பகுதியில் மாமன்ற தலைமையகக் கட்டடம் முழுமை பெற்று வெற்றிகரமாக இயங்கத் தொடங்கியது. மாமன்ற சமூக நலன் குழுத் தலைவராக பணியாற்றி வந்த வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளையின் மறைவுக்குப் பின், புதிய தலைவராக சி.தனபாலா தெரிவு செய்யப்பட்டார். போர்க்காலச் சூழ்நிலைகள், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டும் மற்றும் வறுமைக்கோட்டின் கீழும் வாழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி கற்கும் வசதிகளுடன் சேர்ந்த இலவச விடுதியொன்றை இரத்மலானையில் அமைப்பதற்காக இந்து மாமன்றத்தினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டம், தனபாலா தலைமையிலான சமூக நலன் குழுவின் ஒத்துழைப்பினால் வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போதும், இயற்கை அனர்த்தங்களின் போதும் இந்து மாமன்றத்தின் சார்பில் நிவாரணப் பொருட்களை கையளிப்பதற்காக அமைக்கப்பட்ட மாமன்றக் குழுவுக்கு தனபாலா தலைமை தாங்கி செயற்பட்டிருக்கிறார்.

போர் முடிவடைந்த நிலையில் வன்னி இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த பொதுமக்கள், இந்துமத குருமார்கள், ஆதரவற்ற முதியோர்கள் என்போரை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள் உட்பட ஏனைய உதவிகளை வழங்குவதிலும், அவர்களது மருத்துவ தேவைகளை நிறைவேற்றி வைப்பதிலும் இந்து மாமன்றம் மேற்கொண்டிருந்த முயற்சிகளுக்கும் தனபாலா வழங்கிய ஒத்துழைப்புகள் ஏராளம்.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம், தனது 40 வருட நிறைவையொட்டி 2017 ஆம் ஆண்டு இலங்கையில் வசதி குறைந்த 40 தம்பதியினருக்கு பெருந்தொகைப் பணத்தில் திருமணச் சடங்கை நிறைவேற்றி வைத்த பெரும் கைங்கரியம் அகில இலங்கை இந்து மாமன்ற சமூகநலன் குழுவின் ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்பட்டபோது, இதற்கான சகல கருமங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதில் மாமன்ற சமூகநலன் குழுத்தலைவர் என்ற வகையில் தனபாலா ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து வழங்கிய பங்களிப்பு பலராலும் போற்றப்பட்டது. இவர் இன்றும் இந்து மாமன்ற சமூகநலன் குழுவின் தலைவராகவிருந்து, மாமன்றப் பணிகளுக்கு பெரிதும் உதவிக் கொண்டிருக்கிறார்.

சைவசமயத்தின் சின்னமாக விளங்கும் நந்திக் கொடிகளை இந்து மக்களுக்கும், இந்து மத நிறுவனங்களுக்கும், ஆலயங்கள் மற்றும் பாடசாலை என்பவைகளுக்கும் இலவசமாக வழங்கும் ஒரு சிறப்பான கைங்கரியத்தை இவர், ஒரு தனிமனித முயற்சியாக கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக மேற்கொண்டு வருகிறார்.



நல்லூர் ஆதினத்தில் நந்திகொடி கையளித்த போது.

இவர் நந்திக்கொடிகளை மட்டும் வழங்குவதுடன் நின்றுவிடாது. நந்திக்கொடிகள் சம்பந்தமாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகளைத் தொகுத்து "நந்திக்கொடியின் முக்கியத்துவமும் பெருமைகளும்" என்ற பெயரில் நூலொன்றை 2008 ஆம் ஆண்டிலும், "நந்திக்கொடி ஏற்றீர்! கொடிக்கவி பாடீர்!" என்ற பெயரில் 2013 ஆம் ஆண்டில் இன்னொரு நூலையும் வெளியிட்டிருக்கிறார்.

நந்திக் கொடிகளை வழங்கிவரும் இவரது நற்பணிகளைப் போற்றும் வகையில் இந்தியா பேரூர் ஆதீனம் "விடைக்கொடிச்செல்வர்" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. உள்நாட்டு, வெளிநாட்டு இந்துமத நிறுவனங்களும் வெவ்வேறு பட்டங்களையும், விருதுகளையும் இவருக்கு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பழகுவதற்கு இனியவர். எந்தவொரு பொதுநலக் கருமத்தை ஆரம்பித்தாலும், அதனை தீவிரமாக செயற்படுத்தி, வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கும் வல்லமை உள்ளவர். விடைக்கொடிச் செல்வர் கலாநிதி தனபாலா இன்று (30.08.2021) அகவை எழுபதை நிறைவு செய்கிறார். இவர் சுகநலத்துடன் வாழ்ந்து சமய, சமூகநலப் பணிகளை மேலும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் தொடருவதற்கு பிரார்த்தித்து வாழ்த்துவோம்!

- அ. கனகசூரியர்.



# செப்டம்பர் மாத எண்கணித பலன்கள்

## 1,10,19,28 ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

ராஜநடை, கூர்மையான பார்வை, கொடு என்ற தோரணை போன்ற கவர்ச்சிமிக்க மக்களால் மதிக்கப்படும் 1,10,19,28 திகதிகளில் பிறந்தவர்களுக்கு A,I,J,Q,Y பெயரின் முதல் எழுத்தாக பெற்றவர்களுக்கும், 1ஆம் எண்ணை பெயர் எண்ணாக பெற்ற தலங்களும் இந்த மாதம் தங்களின் மேல் வைரத்தை வைத்து சொலிப்பது போன்ற காலகட்டம், பாதியில் நின்ற பலவிதமான வேலைகள் இன்னும் மீதி இருக்கிறதா என்று கேட்கும் எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி, மக்கள் மத்தியில் மாறிப்போகாத செல்வாக்கை எந்நாளும் நிலைத்திருக்கும்படி வந்து சேரும்.

**பொருளாதாரம்:** எல்லா துறையிலும் ஏகப்பட்ட வருமானம், கடன் கொடுத்த வகையில் எல்லாம் திரும்ப வருமானம், கடன் கொடுத்த வகையில் எல்லாம் திரும்ப வரும், போட்டு வைத்த நிலுவையிலிருந்த திட்டங்கள் எல்லாம் நிறைவேறி நிரந்தர வருமானத்தை பெருக்கிவிடும், முன்னோர்களின் சொத்துக்கள் அதிரடியான தீர்ப்புகள் மூலம் திடீர் அந்தஸ்தை தரப்போகிறது. தந்தையார் வழி உறவுகள் தானாக முன்வந்து தந்து விடுவார்கள். வழக்குகளில் இருந்த நிலங்களை, வாங்கிய எல்லாக் கடன்களையும் அடைத்து, வங்கி இருப்புகள் வகையான உயர்த்தி மகிழும் காலம் தான் இது.

**மங்கள நிகழ்வுகள்:** காதலர்களின் கலக்கமான காலகட்டம் கடந்து போய் நிரந்தரமாக திருமணத்திற்கு வழிகாட்டும், நீண்ட நாள் இழுபறியில் இருந்த திருமணத் தடைகள் எல்லாம் நீங்கி, உடனடியாக உள்ளத்திற்கு பிடித்தது போன்ற நல்ல வரன்கள் வந்து சேரும்.

**உடல் நலம்:** மனநிலை நன்றாக இருந்தால் உடல் நிலையும் உயர்ந்து நிற்கும் என்பதை உணரும் காலம் தான் இது. பல நாள் வியாதிகள் எல்லாம் பறந்தோடி விடும். பழையதை நினைத்தாலும் நினைவில் வராத அளவிற்கு முழுமையான உடல் நிலை உயர்வாக அமைந்திடும். இதனால் குடும்பத்தினருடன் குதூகலமாக செயல்படுவதுடன் பயப்படாமல் வெகு தொலைவு பயணங்களையும் மேற்கொண்டு மகிழ்வு பெறுவீர்கள்.

**தொழில் அதிபர்கள்:** எதிர்பார்த்த அரசாங்க ஒப்பந்தங்கள் அதிரடியாக தங்களுக்கே வழங்கப்படலாம். வெளிநாட்டு வகை வியாபார கையொப்பங்களும் வெற்றியாக அமைந்திடும். பாதியில் நின்ற பல காண்ட்ராக்டுகள் மீதியையும் நீங்களே எடுத்து செய்து தாருங்கள் என்ற வகையில் குவிந்திடும். வங்கிகள் தங்களின் ஒப்பந்த ஆர்டர்கள் மனதில் கொண்டு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவிற்கு பணம் வாங்கிப் பயன்படுத்துங்கள் என்று வலிய முன்வந்து வெற்றிக்கு வெகுவாக வழிகாட்டுவர்.

**வியாபாரிகள்:** ஓட்டல்கள் நடத்துவோர் தங்களின் சுவையை மாறுதலாக்கி மக்களை கவர்ந்து இழுத்து வியாபாரத்தை நிலை நிறுத்தி மகிழ்வார்கள், ஜவுளிக்கடை, நகை விற்பனை, வாகன உதிரிப்பாகங்கள், ஸ்டேசனரி கடைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், வெளிநாட்டு புதுமை பொருட்கள் மூலம் தன்னிறைவை அடைவர் வியாபாரிகள்.

**அரசியல்வாதிகள்:** அரசாங்க உயர் அதிகாரிகளும் உங்கள் எதிர்க் கட்சியினரும் பாராட்டும் வகையில் தங்கள் செயல்பாடுகள் உயர்ந்து நிற்கும். மேலும் மக்கள் செல்வாக்கும் உயர்ந்து நிற்கும். புகழும், பணமும், பதவியும் பன்மடங்கு உயரும் நேரம் இது.

**கலைஞர்கள்:** திரைக்கலைஞர்கள், தொலைக்காட்சி துறையினர், பத்திரிகை பணியாளர்கள் எல்லா வகையிலும் எதிர்பார்த்த, எதிர்பாராத அற்புதமான சான்சுகளைப் பெற்று வருமானத்தை வகை, வகையாக பெற்று வருமானத்தை வகை, வகையாக பெற்று மகிழ்வர். குறிப்பாக 'யூ' டியூப்பினர் அதிகமான வருவாய் பெற்று மகிழ்ச்சியுடன் இருப்பர். நடனம்,தெருக்கூத்து, கிராமிய பாடல் கலைஞர்களுக்கு அரசாங்க ஆதரவு மிக அதிகமாக கிடைக்கப் பெறலாம்.

**பெண்கள்:** பணிக்கு செல்லும் பெண்மணிகள் மனதில் மகிழ்வடைவர், பணப் பலன் அதிகரிக்கும். வேலைப்பளு குறையும் சக ஊழியர்களிடம் பாராட்டு பெறுவர். அரசாங்க பணியாளர்களை எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்த வீட்டு, வாகன கடன்கள் உடனே கிடைத்த உயர்விற்கு வழி கிடைக்கும். மொத்தத்தில் உயர் அதிகாரிகளையும், சக பணியாளர்களையும் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வர் தங்களின் பணித்திறனால்.

**பணியாளர்கள்:** தாங்கள் பணிபுரியும் இடத்தில் உயர்வான நிலையை பெறுவீர்கள். எந்த பணிகளை தந்தாலும் தனது சொந்த பணியாக நினைத்து மிகக் கவனமாக செய்து உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். தங்களின் பணித்திறனை மனதில் கொண்டே உயர் அதிகாரிகள் கூடுதலான பணிகளை தங்களுக்கு தருவார்கள் என நினைத்து செயலாற்றுங்கள். கிடைக்கும் வெற்றிக்கெல்லாம் காரணமாக நீங்களே அமைவீர்கள்.

**மாணவர்கள்:** பொறியியல்துறை மாணவர்கள் புதுமைகளை படைப்பது (ஆன்லைனில் தான்) மேலும் விவசாயத்துறை மாணவர்கள் அதிரடியான கண்டுபிடிப்புகள் கண்டுபிடித்து இத்துறையின் புரட்சிக்கு காரணமாக அமைவதால் அரசாங்கமும், அயல் தேசமும் பாராட்டும் இது மிகப்பெரிய சாதனையாக எல்லோராலும் கருதப்படும்.

## 2,11,20,29ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்

நல்ல குணமும், நளினமான பேச்சும் நாடறிய வைக்கும் இவர்களை, மனோ சக்தி மிகுந்த இவர்கள் பிறர் எண்ணங்களை எளிதில் புரிந்துகொண்டு அவர்களுக்கேற்ப நடந்து நற்பெயர் வாங்குவதில் முதன்மையானவர்கள் சிலர் இவர்களை காக்கப் படிப்பவர். "என்பர் வாழ்ந்தாலும் ஏகம் தாழ்ந்தாலும் ஏசம் இவ்வையகம் இது தானடா' என்ற சொல்லிற்கேற்ப எதையும் கண்டு கொள்ளமாட்டார்கள் இவர்கள். 2,11,20,29 திகதிகளில் பிறந்தவர்களும், R,K,B எழுத்துக்களை பெயரின் முதல் எழுத்துக்களாக பெற்றவர்களுக்கும், 2ஆம் எண்ணை பெயர் எண்ணாக உள்ளவர்களுக்கும் இந்த மாதம் முழுக்க நித்தம், நித்தம் நிகழ்வுகள் எல்லாம் நிரந்தர நன்மைகளாகவே நடக்கும் நல்லதாகவே.

**பொருளாதாரம்:** தங்களின் திட்டம் எல்லாம் தங்கு தடையின்றி நடந்தேறுவதால் பொருளாதார நிலை பொங்கி எழுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. ஏற்றுமதியாளர்களுக்கு ஏகாந்த நிலை உண்டு. எண்ணெய், குளிர்பானம், கலைத்துறை, கல்லூரி, பள்ளி, உணவு சார்ந்த உற்பத்தியாளர்கள் உயர்வான நிலையைப் பெறுவர். பொதுக் காரியங்களுக்கு உதவி உத்தமமான பெயர் பெறுவீர்கள்.

**உடல் நலம்:** இது இப்பத்தான் என்ற மனநிலையில் இருந்த நீங்கள், எல்லாமும் சரியாக நடப்பதாலும், வலிமையும், பலமும் அதிகரிப்பது குறித்து ஒரே மகிழ்ச்சி தான். பெற்றோர்களின் உடல் ரீதியான பெரும் குறைகள் அகன்று ஆச்சரியப்படுத்தும், கணவர் நலனில் கவனம் வேண்டும். உணவுக் கட்டுப்பாடு வீட்டினர் அனைவருக்குமே அவசியம். 'ஓட்டக்கூடத்தன் பாட்டுக்கு ரெட்டை தாழ்ப்பாள்' என்பது போல இரட்டை "மாஸ்க்' அவசியம் என்பதை பலருக்கும் பாடம் நடத்துமளவிற்கு தாங்கள் அடைந்த நன்மைகளை சொல்லி அசத்துவீர்கள்.

**தொழில் அதிபர்:** இரும்புக் கம்பி உற்பத்தியாளர்கள், சுரங்கம் எண்ணெய் சுத்திகரிப்பு, ரியல் எஸ்டேட், எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர், கமிஷன் துறையினர் ஆனந்தமான நிலையில் பொருளாதார ஏற்றத்திற்கு வழி கிடைத்திடும். குறிப்பாக தொலைக்காட்சி, துறையினர் சினிமா எடுப்பவர்கள், பத்திரிகை நடத்துவோர் விரும்பியபடி தங்களை தாங்களாகவே முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் மும்முரம் காட்டுவர்.

**வியாபாரிகள்:** ஏற்கனவே வாங்கி வைத்த பொருட்கள் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பு பொருட்கள் அதிரடியான லாபத்தை குவித்திடும். இருப்பினும் மனித நேயத்துடன் நடந்து மக்கள் மத்தியில் மாறாத அன்பையும், நற்பெயரையும் பெற்று மகிழ்வீர்கள். குளிர்பானம், உணவுப்பொருட்கள், பூஜை பொருட்கள், உணவகங்கள் மூலம் வருமானம் குவியப் போகிறது.



எண் கணித நிபுணர்: Dr. JNS.செல்வன், Phd.

**அரசியல்வாதிகள்:** ஏற்கனவே செய்து வைத்த பல வேலைகள், மற்றும் திட்டங்கள் எல்லாம் தலைமையின் கவனத்திற்கு செல்வதாலும், தங்கள் தயவால் சில ரகசியமான வேலைகள் அவர்களுக்கு பயனுக்கு வரவேண்டியுள்ளதாலும் உடனடியாக அரசியல் உயர்வுகள் வந்து சேரப்போகிறது. பெண் அரசியல் பிரமுகர்கள் பல தரப்பினரின் பாராட்டுக்களை எளிதில் பெற்று மக்கள் செல்வாக்கை பெறுவார்கள். சில புல்லுருவிகளால் புகைந்து கொண்டிருந்த பிரச்சினைகள் எல்லாம் பொசுங்கிப் போகும் என்பதால் எல்லாம் வெற்றி தான் உங்களுக்கு இனி.

**கலைஞர்களுக்கு:** காட்டுதலான முயற்சியும், திறமைகளும் குறைவில்லா நிலைதனை தந்து மகிழ்விக்கும், புதிய ஒப்பந்தங்கள் குறிப்பாக சகபெண் கலைஞர்கள் மூலம் வந்து பொருளாதார ஏற்றத்தினை வாரி வழங்கப்போகிறது. வெளியூர்களில் வெகுவான புகழ் கிடைத்திடும். யாரும் நினைக்காத புதுமையை செய்து இன்ஸ்டன்ட் புகழ் பெற போறீங்க மாஸ் மீடியாக்களால்.

**பெண்கள்:** அரசாங்கம், தனியார் துறையில் பணிபுரியும் நீங்கள் மிகவும் மதிப்பான பல பணிகளைச் செய்து புகழ் பெறுவீர்கள். நிர்வாகத்தினர் வரிந்துகட்டி பாராட்டுக்களை தருவதுடன் பண பலன்களும் கிடைத்திடும். குழந்தைகளால் மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைத்திடும். கணவரால் சில எரிச்சலூட்டும் நிகழ்வுகளும் வரலாம். நீங்கள் தான் கங்கை ஆயிற்றே பொறுமையில்.

**பணியாளர்கள்:** அதிகாரிகளின் எண்ணங்கள் எளிதில் எடை போட்டு யாருக்கு எதை செய்தால் பிடிக்கும் என்ற கோட்பாட்டை தெரிந்து அதுபோல பணிகளை முடித்து முதன்மையான பணியாளர் என்ற பட்டத்தினை திட்டம் போட்டு தட்டிச் செல்வதில் தங்களுக்கு நிகர் நீங்கள் தான். பண வரவும், சுமையற்ற பணிகளும், சக பணியாளர்களின் அரவணைப்பும் மிகவும் ஆறுதல் தரும் உங்களுக்கு.

**மாணவர்கள்:** மனதில் நினைத்தபடி, மதிப்பெண்களை பெறுவதுடன், நிறைய உலக விசயங்களை தெரிந்து கொண்டு பிறரை எளிதில் மடக்கி விடுவீர்கள். இந்த ஆற்றலால் நேரடி தேர்வுகளில் பதில் கூறி வேலை வாய்ப்புக்களை உறுதி செய்வீர்கள். மதிப்பும், மதிப்பெண்களும், மகிழ்வு தரும் வகையில் கிடைத்திடும்.

## 3,12,21,30 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்

முறையான நடவடிக்கை, முடிந்தவதை உண்மை நிலை, தன்புகழ் பாடும் நிலை, தலைசிறந்த ஆலோசகர், தேச நலனில் எப்பொழுதுதே அக்கறை கொண்ட 3,12,21,30 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக C,G,L,S ஐ பெற்றவர்களுக்கும் 3ஆம் எண்ணை பெயர் எண்ணாக உடையவர்களுக்கும் இந்த மாதம் சென்ற மாதத்தை போன்றே சிறப்புடனேயே நடைபெறும். எல்லா இடங்களிலும் மதிப்பும் மரியாதைகளும் நிச்சயமாக மனநிறைவை தரும் வகையில் இருக்கும். போட்டு வைத்த திட்டங்களில் ஏற்பட்ட ஏற்ற, இறக்கங்கள் எல்லாம் ஏற்றமாக நிலையை தருவதற்கு தயாராகி விட்டது.

**பொருளாதாரம்:** விருப்பம் போல் பண வரவுகள் ஏற்கனவே எடுத்து வைத்த பல முயற்சிகள் மூலம் இந்த மாதத்திற்கு தேவையான வரவுகள் வந்து மனத்திற்கு இதமளிக்கும். குறிப்பாக ஆலோசனைகள் மூலமும், விவசாயத்தின் மூலமும், பூர்வீக சொத்துக்கள் மூலமும் மாத நிறைவில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். கடன் என்ற சொல்லை ஏட்டிலிருந்து எடுத்துவிட நல்ல முயற்சிகள் எடுப்பீர்கள். வெற்றியும் கிடைக்கலாம்.

**மங்கள் நிகழ்வுகள்:** மனதில் குடிவைத்த வரை மணம் மங்களகரமான நேரம் இது. தந்தையார் தாண்டிக் குதித்தாலும், தாயாரின் அரவணைப்பினால் நினைத்ததை நடத்திக் கொள்வர். காதல் ஜோடிகள் நிரந்தரமாக, நீண்ட காலமாக மருத்துவர்களை நாடிய சிலருக்கு இயற்கையாகவே மழலை பேறு கிடைத்திடலாம். புதிய வாகனம் வாங்கி மகிழ வாய்ப்புள்ளது.

**உடல் நலம்:** பலம், வலிமை, ஆனந்தம், மகிழ்ச்சி என வாயால் பேசினாலும் தனக்கு வலித்தது தனக்குத் தானே தெரியும் என்ற நிலையில் தான் சர்க்கரை, ஒவ்வாமை, வயிறு பிரச்சினை என்றிருந்த நிலை மாறி இயல்பான இனிமையான, மனதளவில் மகிழ்வு கொள்ளத்தக்க வகையில் உடல்நிலை உத்தமமாக இருக்கும்.

**தொழில் அதிபர்கள்:** உலகளாவிய அளவில் ஆலோசனை தரும். நிறுவனங்கள், திரைப்பட, தொலைக்காட்சி நிறுவனத்தினர், கல்லூரி, பள்ளி நடத்துவோர், அந்தஸ்து உள்ள சைவ உணவகங்கள், ஜவுளி, நகை தயாரிப்போர் தாங்கள் போட்டு வைத்த பல திட்டங்களை செயலுக்கு கொண்டு வந்து குவிக்க போறீங்க பொருளாதாரத்தை.

**வியாபாரிகள்:** வியாபாரத்திலும் நேர்மை என்ற நிலையிலிருந்து என்றைக்குமே மாறாத தங்களின் உயர்குணம் பலர் மத்தியில் பரவி புகழைச் சேர்க்கவிருப்பதால் தங்களைத் தேடி வந்து நிறையபேர் பொருட்களை அள்ளிக் கொண்டு பணவரவுகளை தங்களுக்கு தருவதற்கான தக்க தருணம் இந்த மாதமாக அமைந்துள்ளது.

**பணியாளர்கள்:** அரசாங்கத்தின் பணிபுரிவோர் அதிகாரிகளின் பாராட்டுதல் களை அதிகம் பெறலாம்.பிறர் பணியையும் சேர்த்து பார்த்து உளப்பூர்வமாக மகிழ்வடைவர். ஏற்கனவே விண்ணப்பித்து காத்திருந்த வாகன, வீட்டு கடன் தொகைகள் வந்து தங்களின் நிலையை உயர்ந்த தயாராகிவிட்டது என்று சொல்லலாம்.

**அரசியல்வாதிகள்:** தலைவர்கள் தந்த வேலைகளை மிகத்தரமாக செய்து மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களை குவிக்க போறீங்க, எதிர்பாராத பதவிகளும் வந்து சேரப்போகுது. புதுமையான பல திட்டங்களை மக்களுக்கு ஏற்படுத்த சுய செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்வீர்கள். U,V,W என்ற முதல் பெயர்களைக் கொண்ட நிறுவனங்கள், பிரமுகர்களிடம் கூடுதலான எச்சரிக்கையுடன் செயல்படுதல் நல்லது.

**கலைஞர்கள்:** சில நிறுவனங்கள் நீண்ட நாள் ஒப்பந்தங்கள் மூலம் தங்களின் ஆஸ்தான கலைஞர்களாக தங்களை நியமிக்க விருப்பத்தால் தொடர்ந்த பொருளாதார ஏற்றத்திற்கு வழி கிடைக்கலாம். வெளிவட்டார புகழும், செல்வாக்கும் மனநிலையை எப்பொழுதும் மகிழ்ச்சி நிலையிலேயே வைத்துக்கொள்ளும்.

**பெண்கள்:** வெளியில் தங்கள் செல்வாக்கை நிலை நிறுத்தும் அளவிற்கு செயல்பாடுகள் சிறப்பாக பேசப்படும். அருகில் உள்ளவர்களும் ஆராதனை செய்யுமளவிற்கு நற்காரியங்கள் செய்து பெயர் எடுப்பீர்கள். குழந்தைகளின் திருமணமும் நடத்திட நல்ல நேரமாக தெரிவதால், கணவரின் கட்டைபோடும் பேச்சுக்களை பொறுமையுடன் கேட்டுக் கொண்டு தீர்க்கமான முடிவை நீங்கள் எடுத்தால் மங்கள காரியங்கள் மூலம் குடும்பத்திற்கே மரியாதை கட்டலாம். பெற்றோர், மாமனார், மாமியாரிடம் எப்படி அன்புடன் நடப்பது என்பதை தங்களிடம் கேட்டு பின்பற்றலாம் என்றளவிற்கு பெறுவீர்கள்.

**மாணவர்கள்:** எடுத்தேன், படித்தேன், முடித்தேன் என ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேன் போன்ற வெற்றி செய்தியை தங்கள் திறன் மூலம் காட்டுவர், மேலும் படித்து முடித்து பணியை நோக்கி காத்திருப்பவர்களுக்கு உள்நாட்டிலேயே கார்பரேட் கம்பெனிகள் பல பணிகளை வழங்க வாய்ப்பு உள்ளது.

(தொடரும்)

கனடிய செய்திகள்
Canadian News

# ரசிகர்கள் ஆவலோடு காத்திருந்த ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா 2021

ரசிகர்கள் மிகுந்த ஆவலோடு காத்திருந்த ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா இவ்வருடம் செப்டம்பர் மாதம் (September 10 - 12, 2021) நடைபெறவுள்ளது.

September 10ம் தேதி மாலை 7 மணிக்கு திரைப்பட விழா ஆரம்பித்து September 11, 12 ஆகிய திகதிகளில் முழுமையான திரையிடல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விழாவில் பங்கேற்ற 250 க்கும் மேற்பட்ட படங்களில், 55 சிறந்த படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதன. இதில் 40 வரையான படங்கள் வரும் செப் 11, 12 ஆகிய தினங்கள் கனடாவில் ரொரன்ரொ நகரில் உள்ள Woodside Square சினிமாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

September 10ம் தேதி மாலை 7 மணிக்கு விழா உத்தியோகப்பூர்வமாக தொடங்கப்படுகிறது. அதில் ஊடக நண்பர்கள், சமூக அமைப்பினர் மற்றும் ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

உலகில் பல முன்னணி திரைப்பட விழாக்கள் நடைபெற்றாலும், தமிழருக்கான திரைப்பட விழாக்கள் என்பது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றன.

இந்தியா மற்றும் இலங்கைக்கு அப்பால், தமிழர்கள் அதிகம் வாழும் கனடாவில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது மிகவும் சிறப்பானதும் முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது.

கனடாவில் நடைபெறும் இவ் திரைப்பட விழா, உலக தமிழ் திரைப்படங்களுக்கும், கலைஞர்களுக்கும் மிகப்பெரும் அங்கீகாரமாக அமையும் என்பது உண்மை.

பல்லாயிரம் தமிழ் திரைப்படங்கள், குறும்படங்கள் என்பன வெளிவருகின்ற போதிலும், அத்திரைப்படங்கள் தமிழ் அல்லாத திரைப்பட விழாக்களிலேயே சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை வேண்டி நிற்கும் நிலையே இதுவரை காலமும் தமிழ் திரை கலைஞர்களுக்கும், திரைப்படங்களுக்கும் உள்ள நிலை.

நிச்சயமாக ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா இக்குறையை நிவர்த்தி செய்யும்.

தமிழ் திரைப்படங்களையும், அதன் பின்னால் உள்ள கலைஞர்களையும் ஊக்கப்படுத்தி, பாராட்டி, மகிழ்ந்து கொண்டாடவே ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா செப்டம்பர் 10-12, 2021 ரொரான்ரோவில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழர்களுக்கான தனித்துவமான திரை அடையாளமாகவும், திரைக்களமாகவும், பல்வேறு வகையான தமிழ்த் திரைப்படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள், இசை ஆல்பங்கள் என வெவ்வேறு பிரிவுகளின் கீழ் போட்டியிட்டு தகுதியுடையவர்கள் “விருதினையும், அங்கீகாரங்களையும் பெற்றுக்கொள்வார்கள்.

உலகம் முழுவதும் வாழ்கின்ற திரை மற்றும் கலைஞர்களுக்கான மிகப் பெரிய திரையிடல், பயிற்சி, பட தயாரிப்பு உதவிக்களமாக ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா அமையும். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

நன்றி,
ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா 2021
**www.ttff.ca**
**416-832-7306**






*(அத்தியாயம் 26)*





# வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

இலங்கை என்பது ஈழத்தமிழரின் தாய்த் திருநாடு. இராவணன் என்னும் தமிழ் மன்னனால் ஒரு குடையின் கீழ் ஆளப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்கே உள்ள அழகிய சிறு தீவு. குமரிக் கண்டத்தில் ஏற்பட்ட ஓர் கடல் கோளால் இது தனித் தீவாக உருவானது என நம்பப்படுகிறது. சிங்கத்தின் மகன் விஜயன் இலங்கைத் தீவு வந்தான். அதன் பின் சிங்களம் என்னும் இனம் உருவாகி, இலங்கைத் தமிழ், சிங்களம் என்னும் இரு இன மக்கள் வாழ்ந்தார்கள். சோழப் பேரரசர்களும் தம் ஆட்சியை அங்கு நிலை நிறுத்தியது உண்டு. அந்நிய நாட்டவரும் எம் வளமிக்க நாட்டைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர். ஈழத்தமிழர் தம் நாட்டை, இனத்தை, மொழியை, உரிமைகளை, சொத்துக்களை காப்பாற்ற பல போராட்டங்களை நடத்தியும் இன்னும் நாடற்ற பரிதாபமான இனமாக உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். கொடிய இனவாத ஆட்சி அழிந்து நீதியின் பரிபாலனத்திற்காக ஏங்கி ஈழத்தவர் வாழ்கின்றனர். இப்படியான இந்த இலங்கைத் தீவை நோக்கி வந்தியத்தேவன் பூங்குழலியுடன் படகில் புறப்பட்டான். அவன் முன்னிரவில் நடந்தவை யாவும் அவனிற்கு ஞாபகம் வந்தது. நான் கடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தேன் என்னைப் பூங்குழலி தான் காப்பாற்றிக் கட்டிப் போட்டிருக்கிறாள் அவள் தனியாக படகு வலிக்கிறாள் எவ்வளவு வலிமையுள்ளவள். நான் அவளைச் சந்தேகப்பட்டது என் கோழைத்தனம் தன் அரைச் சுருளைத் தொட்டுப் பார்த்து, எல்லாம் பத்திரமாக இருக்கிறது, நான் பெரிய துரோகம் செய்துவிட்டேன் என்று மனம் வருந்தினான் வந்தியத்தேவன்.

அப்பொழுது பூங்குழலி எழுந்து தன்னந்தனியாக பாய்மரத்தைக் கட்டி பறக்கவிட்டாள். வந்தியத்தேவனும் தன் கட்டுக்களை அவிழ்த்தபடி, 'தாகமாக இருக்கிறது பூங்குழலி' என்றான். அவளும் தண்ணீர் கொடுத்தாள் 'நன்றாக உப்புத்தண்ணீர் குடித்தாய் அல்லவா? அதுதான் உனக்கு மிக்க தாகம் உனக்குப் பசித்தாலும் என்னால் உணவு தரமுடியாது. நீ கடலில் குதிக்கும் பொழுதே நான் எடுத்து வந்த உணவும் கடலில் குதித்துவிட்டது' என்றாள். 'சரி இலங்கையின் வட பகுதியில் உள்ள நாகதீவை நெருங்குகின்றேன் அங்கு உன்னை இறக்கி விட்டுப் போகிறேன் நீ தரைவழியாக இலங்கையை அடையலாம்' என்றாள் அதற்கு வந்தியத்தேவனோ 'சரி அதன் பின் நீ எங்கே போகிறாய்?' என்று பூங்குழலியைக் கேட்க, 'அதைப்பற்றி உனக்கென்ன கவலை வந்தியத்தேவா?' என்று அவள் கர்வமாகப் பதில் சொன்னாள். 'நேற்று நான் உன்னைச் சந்தேகித்து நடந்து கொண்ட விதத்தை நினைத்து வெட்கப்படுகிறேன் என்னை மன்னித்துவிடு' என்றான் வந்தியத்தேவன். 'உனக்கு நான் நன்றி செலுத்த வேண்டும் என்னிடம் நீ ஒன்றும் கேட்கவில்லையா?' என வினவினான் வந்தியத்தேவன். 'சரி நடந்ததைப் பேசி என்ன பயன்? நடக்கப் போகிற காரியத்தை சரியாக செய்ய வேண்டும் நீ நாகதீவில் இறங்கி எப்படி அருள்மொழிவர்மரை கண்டு பிடிப்பாய்?' என்று கேட்டாள் பூங்குழலி. 'சோழர் படைகள் எங்கு இருக்கின்றன என்று கேட்டுத் தெரிந்து கொள்வேன் இளவரசர் எப்படியும் அங்கு தான் இருப்பார் இந்த ஓலையை அவரிடம் அவரசமாகக் கொடுக்க வேண்டும்' என்றான். 'நாக தீவிற்குப் பக்கத்தில்தான் பூதத்தீவு இருக்கிறது நான் உனக்கு விசாரித்துச் சொல்லுகிறேன்' என்றாள் பூங்குழலி. 'என்ன இது பூதத்தீவு என்கிறாய்? பெயரே இத்தனை பயங்கரமாக இருக்கிறது நீ எப்படி, எங்கே போவாய்? யாரை விசாரிப்பாய்?' என்றான் வந்தியத்தேவன். 'போதத்தீவில் இருந்து மருவி பூதத்தீவு என்று வந்தது புத்தபிரான் முதலில் ஆகாயமார்க்கமாக அங்கு வந்து இறங்கி, அங்குள்ள அரசமரத்தடியில் போதனை செய்தார். இதனால் இதனை போதத்தீவு என்பர். இங்கு போய் பொன்னியின் செல்வன் எங்கு இருக்கிறார் என்று விசாரித்து வருகிறேன். நீ படகில் காத்திருக்க வேண்டும்' என்றாள். அதற்கு வந்தியத்தேவனும் 'அப்படியே ஆகட்டும்' என்றான். காற்று இதமாக வீச படகு விரைந்து சென்றது. கடலின் ஓங்கார நாதமும் ஓயாது கேட்டுக் கொண்டிருந்தது. படகு கரையை சேர்ந்ததும் வந்தியத்தேவனோ, இலங்கை ஒரு சொர்க்க பூமியே! என்று வியந்தான். அத்தனை அழகு ஆனால் இந்த அழகெல்லாம் அழிந்து ஒழியும் வகையில் போர், பூசல்கள் காலம் காலமாக நின்று விடாது தொடர்ந்து செல்கிறதே! மண்ணின் மைந்தர்களும் அமைதயுறாது வாழ்கின்றனர். பூங்குழலி வந்தியத்தேவனை கரையில் மோதும் கடல் அலைகளின் சலசலப்புச் சத்தத்தோடு படகில் விட்டுவிட்டு பூதத்தீவுக்குள்ளே சென்றாள். வந்தியத்தேவன் அவள் வருகைக்காகக் காத்திருந்தான். அவளும் விரைவாகத் திரும்பி வந்தாள். 'முதல் மந்திரி அன்பின் அநிருத்த பிரம்மராயர் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்காக மாதோட்டத்திற்கு வந்திருக்கிறாராம் பொன்னியின் செல்வர் மாதோட்டம் வந்திருக்க வேண்டும் நீ அங்கே போய்ப் பார்க்கலாம்' என்று தான் விசாரித்து வந்ததைச் சொன்னாள்.

'மாதோட்டம் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும் பூங்குழலி' எனக் கேட்டான் வந்தியத்தேவன் 'அதுவா ஐந்து ஆறு காததூரம் இருக்கும். பெரிய காடு, வான் முட்டும் மரங்கள், கரிய இருள், கொடிய மிருகங்கள் கவனமாகப் பார்துப் போ' என்றாள் பூங்குழலி 'நல்லது பூங்குழலி நான் எப்படியாவது இந்த ஓலையை அவரிடம் கொடுப்பேன் குந்தவை தேவி என்னிடம் ஒப்படைத்த இந்த செயலை செய்து முடிப்பேன் நீ செய்த உதவி பெரும் உதவி நீ என்னிடம் கேட்கப் போவதை கேள் நானும் உனக்கு செய்தே ஆக வேண்டும். நீ சோழ சக்கரவர்த்தியின் குலத்திற்கு மாபெரும் உதவி புரிந்துள்ளாய் நானும் ஏதாவது செய்ய வேண்டும் அப்பொழுதுதான் என் மனம் நிறைவடையும்' என்றான் வந்தியத்தேவன். அதற்கு பூங்குழலி 'ஆண் மக்களை நான் நம்புவதில்லை ஆனால் உன்னை முதலில் பார்த்த போதே நீ நல்லவன் என்று தெரிந்து கொண்டேன். அதனால் சொல்லுகிறேன் நீ பொன்னியின் செல்வரைப் பார்த்து உன் காரியங்கள் யாவும் முடிந்த பின் அவரிடம் பேச முடிந்தால் சமுத்திர குமாரியை ஞாபகம் இருக்கிறதா? என்று கேள் அவர் ஞாபகப்படுத்திக் கொண்டால் உன்னை நான் தான் இங்கு கூட்டி வந்தேன் என்று சொல்' என்றாள். சமுத்திரகுமாரி நீ மர்மமான பெண்தான் இத்தனை மோகமாக உன் மன ஏக்கம் இருக்கிறதே! இது நியாமா? என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் 'நிச்சயம் நான் சொல்லுவேன் என்றான். பின்னர் பூங்குழலி படகை நாகதீவுக் கரையில் நிறுத்தினாள் வந்தியத்தேவன் கரையில் இறங்கி அவளிடம் விடைபெற்று நடந்தான். உடல்நலக் குறைவில் சக்கரவர்த்தி, வந்தியத்தேவன் பொன்னியின் செல்வனை அழைத்துக் கொண்டு பழையாறை செல்வதற்காக குந்தவையின் ஓலை கொண்டு வந்திருக்கிறான், முதல் மந்திரி அநிருத்த பிரமராயர் பொன்னியின் செல்வரை இலங்கையில் இருக்குமாறு கேட்டுக் கொள்ள இங்கு வந்திருக்கிறார், பார்த்திபேந்திரன் கரிகாலரின் வேண்டுகோளிற்கிணங்க இலங்கை வந்து பொன்னியின் செல்வரை காஞ்சி அழைத்துச் செல்ல வருகிறார், வந்தியத்தேவனும், குந்தவையும் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் இலங்கை புறப்பட்டு பொன்னியின் செல்வரைச் சந்தித்தால் ----- பொன்னியின் செல்வர் எங்கே போவார்? இலங்கையில் இருப்பாரா அல்லது பழையாறை போவாரா இல்லை காஞ்சி செல்வாரா? என்று பார்ப்போம்.




ஆழ்வார்க்கடியான் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தார் அங்கும் மதம் பற்றிய வாக்கு வாதத்தில் பட்டர்களும், சைவர்களும் சுழன்று திரியும் அதே நேரம், திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர சோழ பராந்தகரின் மகாமானிய முதல் மந்திரி அநிருத்தப் பிரம்மாதி ராஜர் வருகிறார் பராக்! பராக்! என்ற கோஷம் கேட்கவே எல்லோரும் அங்கு நோக்கினர். ஆழ்வார்க்கடியானும் பார்த்தார் பெரும் திகைப்பு சோழ சாம்ராஜ்ஜியத்தில் புகழ் பெற்ற முதல் மந்திரி அன்பில் அநிருத்த பிரமராயர் ராஜ கம்பீரத்துடன் ஒரு படகில் வந்துகொண்டிருந்தார். அவர் ஆழ்வார்க்கடியாரைக் கண்டார் அவரை அழைத்தார் அவரும் கடற்கரை ஓரமாக வந்து நின்றார் 'திருமலை அதோ கடலில் தெரியும் அந்தத் தீவுக்கு வா அங்குள்ள மண்டபத்தில் வந்து என்னை சந்திப்பாய்' என்றபடி மண்டபம் நோக்கி விரைந்தார். இராமேசுவரப் பெரும் தீவினை அடுத்துள்ள ஒரு சிறிய தீவு ஒன்றில் ஒரு பழைமையான மண்டபத்தில் அநிருத்த பிரம்மராயர் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி கணக்காளர், ஓலை எழுதும் திருமந்திர நாயக்கர், அகப்பரிவாரக் காவலாளிகள் இருந்தனர். அன்பின் அநிருத்தரும் தன்னைப் பார்க்க வந்தவர்களை அழைத்தார். செல்வச் செழிப்புடன் வந்த ஐந்துபேர் முதலில் வந்தார்கள். நவரத்தின மாலை ஒன்றைத் தட்டில் வைத்து காண்பித்தனர். அதனைக் கணக்காளரிடம் கொடுத்து, 'இதனை செம்பியன் மாதேவி ஆலயத் திருப்பணிக்கு எழுதிக்கொள்' என்றார். அடுத்ததாக சோழப் பேரரசுடன் கடல் கடந்து வேற்று நாடுகளிலிருந்து வாணிபம் செய்தவர்கள் வந்தனர். மேலும் சில வர்த்தகக் கூட்டத்தினர் வந்தனர். அவர்களிடம் அன்பின் அநிருத்தர் 'வாணிபம் எப்படி செழிப்பாக இருக்கிறதா?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'நாளுக்கு நாள் செழிப்பாகி வருகிறது. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆட்சியில் என்ன குறை பாண்டிய மக்களுமே சோழர் ஆட்சியைத்தான் விரும்பகின்றனர்! கொள்ளைக்காரர்களைப் பிடிக்க அனுப்பிய கப்பல் திரும்பி வந்துவிட்டது கொள்ளை இப்பொழுது இல்லை' என்றனர். 'நான் அனுப்பிய ஓலை சம்பந்தமாக என்ன முடிவு எடுத்தீர்கள்? இலங்கை சோழ சைதன்யத்திற்கு அனுப்பிய ஆயிரம் மூட்டை அரிசியும், ஐந்நூறு மூட்டை சோளமும், நூறு மூட்டை துவரம் பருப்பும் இராமேசுவரத் தீவிற்கு கொண்டு வந்துள்ளேன். எங்கள் கப்பலில் அனுப்பி வைக்க வேண்டும்' என்றார் அநிருத்தர். பின்னர் வணிகர்கள், 'இலங்கை யுத்தம் எப்பொழுது முடியும் அது முடியுமா முடியாதா? என்று சொல்ல முடியவில்லை சோதிடம் பார்த்தீர்கள் அவர் என்ன சொன்னார்?' என்றனர் அதற்கு அன்பின் அநிருத்தர், 'அருள்மொழிவர்மர் ஆட்சியில் தூர தூர தேசங்களில் புலிக்கொடி பறக்குமாம்! வெற்றி மேல் வெற்றி அவரை வந்து சேருமாம்' என்றார். 'இதனால் எங்கள் வர்த்தகமும் பெருகும்' என்றார்கள் வாணிபர்கள்.

'அப்படியே ஆகட்டும்' என்றார் அநிருத்தர். இவர்களைத் தொடர்ந்து தெரிஞ்ச கைக்கோளப் படை சேனாதிபதிகள் வந்தனர். இவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர்கள். சுந்தர சோழ தெரிஞ்ச கைக்கோளர் படை என்றால், தமிழ் நாட்டில் கைத்தெறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டு நூலினைத் திரட்டி, கைக்கோளாக வகுக்கும் வகுப்பினரிடமிருந்து புகழ்பெற்ற வீரர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களைக் கொண்டு சோழப் பேரரசால் அமைக்கப்பட்ட அகப்பரிவாரப் படையையே தெரிஞ்ச கைக்கோளர் படை எனப்பட்டது. அவர்களிடம் அநிருத்தர், 'உங்கள் கோரிக்கைகள் என்ன?' என்றார். அதற்கு அவர்கள், 'இளவரசர் அருள்மொழிவர்மர் மாதண்ட நாயக்கராய் இருக்கும் சைதன்யத்தில் சேர்ந்து யுத்தம் செய்ய விரும்புகிறோம்' என்றனர். 'ஆகட்டும் தஞ்சை போனதும் சக்கரவர்த்தியிடம் சம்மதம் கேட்டு அறிவிக்கிறேன் தற்போது இலங்கை மன்னன் மகிந்தனைக் காணவில்லை எங்கோ ஒழிந்து விட்டான்! அவனுடைய சேனை வீரர்களையும் காணவில்லை அதனால் இப்போது யுத்தம் இல்லை அதனால் பாண்டிய நாட்டில் எம் பகைவர்களை அடக்கி அமைதி காருங்கள். வீர பாண்டியன் அழிந்தாலும் அவரிற்காக சதி செய்பவர்களும் இருக்கிறார்கள். இந்திரன் அளித்த இரத்தின மாலையும், வைரமிழைத்த பட்டத்து உடைவாளும் ரோஹண மலை நாட்டில் ஒழித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றை மீட்கும் வரை பாண்டிய போர் முற்றுப் பெறாது உங்களிற்கு ஒரு முக்கிய விடயம் சொல்லுகிறேன்! இலங்கைப் போரின் பின்பு அருள்மொழிவர்மர் நாலு திசைகளிலும் வீரர்களை ஏற்றிக் கொண்டு திக் விஜயம் செய்யப் புறப்படுவார். இமய மலைக்குச் சென்று புலிக்கொடியை நாட்டுவார் என்று நமது தென் திசை மாதண்டநாயக்கர் திட்டம் இட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் வீர இரத்தமும், வைர நெஞ்சமுடைய அனைவருக்கும் வேலை இருக்கும் அது வரை பொறுத்திருங்கள்' என்றார் அநிருத்தர். அவர்கள் விடைபெற ஆழ்வார்க்கடியயானை அழைத்தார். ஆழ்வார்க்கடியானும் அங்கு வந்து மந்திரியை வணங்கி நின்றார்.

அப்பொழுது அநிருத்தர், 'திருமலை நான் மாதோட்டம் போயிருந்தேன் அங்கு அருள்மொழிவர்மரைப் பார்க்க முடியவில்லை. ஆனால் சேனாதிபதியைப் பார்த்தேன். அவரிடம் பல செய்திகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இலங்கை அரசன் மகிந்தனிடம் ஒரு பெரும் போர் படை இருந்தது இப்போது அந்தப் படை வீரர்கள் எல்லோருக்கும் அருள்மொழிவர்மர் படைத்தலைமை வகித்து வருகிறார் என்பது தெரிந்தது. அந்தப் படையில் இருந்த பாண்டிய நாட்டு வீரர்களும், சேர நாட்டு வீரர்களும் நம் நாட்டுப் படையில் வந்து சேர்ந்து விட்டார்கள். இதனால் மகிந்தனால் போர் புரிய முடியவில்லை. மலைகள் சூழ்ந்த ரோஹண நாட்டிற்குச் சென்று ஒழிந்து கொண்டான். இதனால் போர் செய்வதற்கு எதிரிகள் இங்கு இல்லை' என்றார்.

*(தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**

**மாதினி நிமலன**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 962



## திருமங்கலாய் சிவன் கோவில்
### திருக்கரைசையம்பதி, திருகோணமலை

சைவசமயம் திராவிடமக்களின் பழம்பெரும் சமயமாகக் காணப்படுகின்றது. “பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்” என்பது, பேராசிரியர் மறைமலை அடிகளாரின் ஆராய்ச்சி முடிவு. இன்றைய உலகிலே எத்தனையோ சமயங்கள் காணப்பட்டாலும், அவைகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது சைவ சமயமேயாகும். ஏத்தனையோ பழம்பெரும் சமயங்கள் இந்நாளில் மறைந்தொழிந்து போய்விட்டன. அவ்வாறில்லாமல் சுண்ணாம்புக் கற்காலம் எனக் கூறப்படும் சிந்தனைக்கெட்டாத காலம் முதல் ஏறத்தாழ இருபதாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, இன்றளவும் நின்று நிலைபெற்று உயிர்ப்பாற்றல் மிக்க நிலையில் சைவசமயம் விளங்கி வருகின்றது. இதனை சேர் ஜோண் மார்ச்சல் போன்ற மேல்நாட்டு ஆராய்ச்சி அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலே தோன்றிய பல மதங்களின் காலத்தையும், அம் மதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டதென்பதையும் நிச்சயித்துக் கூறமுடியும். ஆனால் சைவசமயத்தின் காலத்தையோ, அன்றி யாரால் தாபிக்கப்பட்டது என்ற வரையறையையோ கூற முடியாது. சைவசமயம் அநாதியானது. மனிதன் வாழ்வு நெறியை ஆரம்பித்தபோது, இயற்கையாக மலர்ந்த வாழ்வு நெறியாக சைவசமயத்தைக் கருதமுடியும். பிற்காலத்தில் சிந்துப் பள்ளத்தாக்கினூடாக வந்த மேலைத்தேசத்தவர்கள் இம்மதத்தை இந்து மதம் என்றும், அதனைப் பின்பற்றியோரை இந்துக்கள் என்றும் காரணப் பெயரால் அழைத்தனர். பின்னாளில் இப்பெயரே நிலைத்து, சைவசமயம் என்ற பொதுப் பெயர் மறைந்து, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோரை மட்டுமே குறிக்கும் பெயராக தற்கால வழக்கிலே போற்றப்படுகின்றது.

பிற்காலத்தில் இந்துமதத்திலே பிளவும், கருத்து வேற்றுமையும் ஏற்பட்டு, தத்தம் சமயமே முதற்சமயம் என்ற கொள்கையும் வலுப்பட்டு, ஒவ்வொரு சமயத்தவர்களும் ஒன்றோடொன்று முரண்பட்ட வேளையில், அவற்றை ஒருநிலைக்குக் கொண்டு வந்து காப்பாற்ற சில நெறிமுறைகளைக் கையாண்ட ஸ்ரீ சங்கரர், சைவம், சாக்தம், வைணவம், காணபதியம், கௌமாரம், சௌரம் என்ற பிரிவுகளைக் கொண்டதாக இந்துமதத்தை வகுத்தார். இதன்படி சைவத்தின் முழுமுதற் தெய்வமாக சிவனையும், சாக்த மதத்தின் முழுமதற் தெய்வமாக சக்தியையும், வைணவத்தின் முழுமுதற் தெய்வமாக திருமாலையும், காணாபதியம் என்ற மதத்தின் முழுமுதற் தெய்வமாக கணபதியையும், கௌமாரம் என்ற மதத்தின் முழுமுதற் கடவுளாக முருகனையும், சௌரம் என்ற மதத்தின் முழுமதற் கடவுளாக சூரியனையும் வகுத்தார். இவ்வாறான அறுவகைச் சமயங்களும் ஒன்றிணைந்து இந்து சமயம் எனப் போற்றப்பட்டது. ஆயினும் சைவசமயத்தினுள் ஏனைய சமயங்கள் சங்கமமானநிலையிலேயே தற்கால வணக்கமுறை காணப்படுகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஈழத்திலே சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்ட சைவசமயம் எழுச்சி பெற்றுக் காணப்பட்டுள்ளது. ஈழத்திலே வாழும் சிங்கள இனத்தவர்களுடைய வரலாறு கி.மு 543 ஆம் ஆண்டிலே கலிங்கதேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு ஈழம் வந்த விஜயனுடன் ஆரம்பமாகின்றது. அக்காலத்திலேயே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பஞ்ச ஈஸ்வரங்களான முன்னேஸ்வரம், திருக்கேசீச்சரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய பஞ்ச ஈஸ்வரங்கள் சிறப்போடு விளங்கியுள்ளன.

வழிபாட்டிலே முதன்மையான வழிபாடாக சிவ வழிபாடு வரலாற்றுக் காலம் முதல் போற்றப்பட்டுள்ளது. சிவம் என்பதற்கு மங்கலம், சுபம், நன்மை, பேரானந்தம், உண்மை, மேன்மை எனப் பல பொருள்கள் உள் அடங்கிக் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டின் பெருமையை அதன் கருத்தே புரிய வைத்தள்ளது.

**“சைவம் சிவத்தடன் சம்பந்தமாகுதல்**
**சைவந் தன்னையறிந்தே சிவஞ் சாருதல்”**

எனத் திருமந்திரத்திலே கூறப்பட்டுள்ளது.

ஆரியர் வருகை காரணமாக, இவ்வாறான சிறப்புப் பெற்ற சைவத்துடன், பிற்காலத்தில் பல்வேறு உப தெய்வங்களும் இணைக்கப்பட்டு, சிவவழிபாடு பின்தள்ளப்பட்டது. ஆயினும் சைவசமயிகள் சிவனையே முழுமுதற் கடவுளாகவும், ஏனைய தெய்வங்களை அடுத்தநிலையிலே வைத்து எண்ணும் மரபும் பலரிடையே காணப்படுகின்றது. “உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்” என்ற தத்துவார்த்தமான உண்மையைப் புரிந்து கொண்டால், மனிதரிடையே காணப்படும் சமய பேதங்கள் அகன்றுவிடும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மன்னர்கள் பலர் ஈழத்தை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் பல சைவ ஆலங்களைக் கட்டிப் பேணி வளர்த்துள்ளனர். காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்பு, உள்நாட்டுப் போர்கள் என்பனவற்றின் காரணமாக, பழமையான பல கோவில்கள் அழிந்தாலும், அவற்றின் சுவடுகள், சைவமக்களாகிய தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை இனங்காட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்வாறான கோவிலாகத் திருக்கரைசையம்பதி திருமங்கலாய் கோவில் காணப்படுகின்றது.

மன்னர்கள் கட்டிய கோவில்கள் பல ஈழமெங்கும் காணப்படுகின்றன. பல மண்ணோடு மண்ணாகப் புதைந்து கிடக்கின்றன. இவ்வாறு கட்டப்பட்ட திருக்கோவில்களுள் ஒன்றாக திருக்கரைசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றிலுள்ள மூதூரிலிருந்த பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் கிளிவெட்டி என்ற சைவக் கிராமம் அமைந்துள்ளது. இங்கு திருக்கரசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் காணப்படுகின்றது.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
°roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

ஜீவன் முக்தி (பகுதி ) 122

# உங்களுடனே இருக்கும் சகுனிதான் உங்களுடைய பட்டறிவு

*(சென்ற வார தொடர்ச்சி...)*

## உங்களின் வெற்றி ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டது.

ஞானத்திற்குள்ளே மூழ்கினான்.
ஞானத்திற்குள்ளே நிறைந்தான்.
உங்களின் வெற்றி ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டத. நம்முடைய வாழ்க்கையினுடைய லட்சியத்தை நோக்கி நாம் செல்லும் பொழுது, இந்த வளர்ப்புறு கட்டுறுமனப்பாங்கு பீஷ்மர் வருவார். ஆச்சாரியார எனும் கட்டுறு மனப்பாங்கு துரோணர் வருவார். பள்ளி, கல்லூரி ஏற்படுத்துகிற கட்டுறுமனப்பாங்குதான் துரோணாச்சாரியார்.
நன்றாத் தெரிந்து கொள்ளுங்கள். துரோணர், வாழ்க்கை நடத்தத் தேவை. ஆனால் வாழ்க்கையே துரோணர் கிடையாது.

வாழ்க்கை நடாத்துவதற்குப் பள்ளி கல்லூரிகளில் வாங்குகிற பட்டம் வேண்டும். ஆனால் வாழ்க்கையினுடைய இறுதி அது கிடையாது. ஒரு டாக்டர் பட்டம் வாங்கியதனால் ஒரு பட்ட படிப்பின் சான்றிதழ் வாங்கியதனால், எதையோ அடைந்து விட்டதாக நினைக்காதீர்கள்.

அது துரோணச் சாரியார்தான், அதைக் தாண்டிப் போயாக வேண்டும். அதற்கு மேல் கர்ணன் வருவான். இந்த கதையை பார்த்தீர்களென்றால் உங்கள் வாழ்க்கையை அப்படிபே சொல்லும்.
ஒரு 25 வயது வரைக்கும் வளர்ப்புறு கட்டுறு மனப்பாங்கு, பிறகு அந்த வேலை செய்வதற்குத் தேவையான துரோணாச்சாரியார் கட்டுறு மனப்பாங்கு. பல்கலைக்கழகம். பள்ளி, கல்லூரிகளின் கட்டுறு மனப்பாங்கு ஒரு 34, 40 வயது வரை வரும். அதன் பிறகு குடும்பமாகி, பணம் எல்லாம் வந்த பிறகு உங்களுக்கென்று ஒரு தர்மத்தை வைத்துக் கொண்டு அதன்படி எல்லாம் ஓடுவது.
அதென்ன? கர்ணன் எனும் கட்டுறு மனப்பாங்கு. அதன்பிறகு ஒரு 65 வயதுக்குப் பிறகு எல்லோரையும் சந்தேகப்படும் தன் தர்க்க அறிவை மட்டும் சந்தேகப்படாத சகுனி புத்தி. அப்படியே பாருங்கள். நம்முடைய வாழ்க்கையில் நடந்து கொண்டே இருக்கிறது.

அதற்குப் பிறகு நான் யார் தெரியுமா? என்கிற மாளாத அகங்காரம் 60 வயதுக்குமேல் வருவது.
உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராத அகங்காரம்.
நான் போய் ஒரு ஞானசத்குருவிடம் செல்வதா? நான் போய் ஒரு குருவிடம் செல்வதா?

நான் போய் உட்காருவதா? என்ற மாளாத அகங்காரம் இந்த மாதிரிப் படிப்படியாக படிப்படியாக எல்லாவற்றையும் கடந்து, லட்சியம் ஞானம்தான், கிருஸ்ணன்தான். இறுதியான ஞானசத்குருநாதன்தான் என்று ஜீவாத்மாவுக்குப் புரிந்து, அது தேரில் உட்கார்ந்து இருந்தாலே போதும்.
ஞானத்தை அடைந்து விடலாம்.

இந்த மொத்த மஹாபாரதத்தையம் பார்த்தீர்களென்றால் அர்ஜு னன் செய்தது வேறு ஒன்றமே இல்லை.
தேரை ஒட்டுகிறவர் சொன்னதை ஒழுங்காகக் கேட்டது.

அவ்வளவுதான்.
அர்ஜு னின் வெற்றிக்கான இந்தக் குணத்தை உள்வாங்கினாலே உங்களின் வெற்றி நிர்ணியக்கப்பட்டுவிட்டது.

## ஞானத்திற்கான திட்டம்.

அதாவது திட்டம் செய்வது திட்டத்திற்குத் தேவையான திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான எல்லா நபர்களையும், பொருட்களையும் எடுத்து வருவது. இது எல்லாமே மொத்த வேைலையையுமே கிருஸ்ணன் செய்துவிட்டார்.
Stategy plan செய்வது திட்டமிடுவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு வருவது. இது எல்லாவற்றையுமே மிக அருமையாக கிருஷ்ணனே செய்து விடுகிறார்.
செய்ய வேண்டியது எல்லாம் கிருஷ்ணன் சொல்வதைக் கேட்டு அர்ஜு னன் செயல்பட வேண்டியது.

அப்போது ஜீவாத்மாவாகிய சீடன் செய்ய வேண்டியது எல்லாம், பரமாத்மாவான ஞானசத்குரு சொல்வதைக் கேட்டுச் செய்ய வேண்டியது அவ்வளவுதான்.

திட்டமிடுவதையம், திட்டம் நடத்துவதற்கான நபர்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு வருவதையம், கீருஷ்ண பரமாத்மாவான, ஞானசத்குருதானே நடத்தி விட்டார்.
செய்ய வேண்டியது எல்லாம், அந்தத் தேரில் உட்கார்ந்து கொண்டு, பரமாத்மா சொல்வதைச் செய்வது. சொல்வதைச் செய்கின்ற ஒரே காரணத்தாலேயே, கடைசி வரைக்கும் இருக்கின்ற ஒரே காராணத்தினாலேயே லட்சியத்தை அடைந்து விடுகின்றான் அர்ஜு னன்.

நாமும் அப்படித்தான். நம் வாழ்க்கையில் பார்த்தீர்களென்றால், எடுத்த உடனே அர்ஜு னனுக்கு, அந்தக் கீதையைக் கேட்பதற்கு முன்னால் வருகின்ற சந்தேகம் மாதிரி, வாழ்க்கையைப் பற்றிய பெரிய பெரிய சந்தேகங்கள் வரும். அப்போது நீங்கள் எடுத்துன் கொள்கின்ற நித்திய தியான தீட்சைதான், பகவத்கீதை, கீதை அளிக்கப்பட்டுவிடுகிறது.

கிருஷ்ணர் என்ன செய்தார? தீட்சை கொடுத்து விட்டார். அதன்பிறகு அவர் அந்த unclutching என்ற நுட்பத்தைச் செய்ய செய்ய என்ன ஆகும்? வளர்ப்புறு கட்டுறுமனப்பாங்கு மேல் வரும்.
பீஷ்மர், அவரை unclutch செய்ய வேண்டும். அவரை அழிக்க வேண்டும். அது என்ன வழி? சிகண்டியை முன்பு நிறுத்தினால், யாரைக்கண்டு அவர் நடுங்கிப் போவாரோ அவரை முன்னால் நிறுத்தி அவரை அழிப்பது.
அடுத்து ஆச்சாரியார்கள், ஆச்சாரியார்கள் கட்டுறு மனப்பாங்கு. துரோணாச்சாரியார் வருவார். அவரையும் அன்கிளட்ச் செய்ய வேண்டும். அவருடைய பலவீனம் என்னவென்று பார்த்து, எந்த இடத்தில் அது உபயோகமாகாது என்று தெரிந்தனென்றால், அவர்மேல் இருந்த மரியாதை எனும் பற்று போய் அன்கிளட்சிங் நடந்து விடும். அதற்கடுத்து கர்ணன். நம்முடைய தர்மம். அதையும் தாண்ட வேண்டும். அதைத்தான் கிருஷ்ணன் சொல்கிறார்.

'சர்வ தர்மான் ப்ரத்யக்கஷ மாமேகம் சரணம் பஜரஜ'
அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோகைஷகஷாமி மாகச்சசஹ:

சிலநேரம் நீங்கள் கடைப்பிடிக்கிற தர்மம்கூட குருவிம் சரணாகதி ஆவதற்குத் தடையாக மாறிவிடும். தர்மத்தை வைத்து அகங்காரத்தைப் பிடித்தீர்களானால்,



சரணாகதி ஆவதற்குத் தடையாக மாறிவிடும்.
சரணடைவதற்குத் தடையாக மாறிவிடும். அதுதான் கிருஷ்ணர் சொல்கிறார். எல்லாத் தரமங்களையும் என்னுடைய காலடியில் சமர்ப்பித்து விட்டு என்னையே சரணடைவாயாக. உன்னை நான் கடைத் தேற்றுகிறேன் என்கிறார்.

தர்மத்தைக் கீழே போடுகிற சரணாகதிதான். இறுதி நிலை சரணாகதி.
இமு சாதாரணமாக நடக்காது. பயங்கர புத்திசாலித்தனம் வேண்டும். அந்த சராணாகதிக்கு, அதுதான் அடுத்த நிலை. அதையும் தாண்டி ஸ்திரமாக இருந்தால்தான் அகங்காரமே நேரடியாக சண்டைக்கு வரும்.

துரியோதனனே நேரே வவான். அப்போது எந்த இடத்தில் அன்கிளட்சி வெய்ய வேண்டும் என்று சரியான நுட்பத்தைக் கொடுத்து, ஆனந்த கந்த தீட்சையைக் கொடுத்து, தட்டிக்காட்டுதல்.

எந்த இடத்தில் அடிக்க வேண்டுமென்று, தட்டிக் காட்டுதல்தான் கிருஷ்ண பரமாத்மாவுடைய வேலை. தவம் என்கிற பீமனுடைய பலத்தாலே ஆனந்த கந்த தீட்சை மூலமாக சரியாகத் தொடையில் அடித்து அன்கிளட்ச் செய்யும்போது நம்முடைய தவம் அகங்காரத்தை அழித்து சிவத்திலே மறைகிறது. சிவத்திலேயே கரைகிறது. சிவத்திலேயே நிறைகிறது. அப்பொழுது பொங்குகிற அந்த ஆனந்தம்தான் நித்தியானந்தம். ஜீவன் முத்தி என்று சொல்கிறோம்.

இது மொத்தத்திலும் நடந்தது என்னவென்றால் லட்சியம் சத்குருதான் என்று அர்ஜு னனுக்கு இருந்த தெளிவு.
ஆரம்பத்தில் தீட்சையில் பகவத் கீதையில் என்ன சொன்னாரோ அதைத்தான் அந்த 18 நாள் யுத்தத்திலேயும் கிருஷ்ணன் நடத்திக் காண்பித்தார்.
தீட்சையில் உங்களுக்கு என்ன சொல்லப்படுகிறதோ, நித்திய தியான தீட்சையல் அன்கிளட்ச் என்று அதைத்தான் அந்த ஞானப்பாதையில் முழுவதும் உங்களுடைய அந்த ஞான சாதனை என்கிற மிகப்பெரிய பாரத யுத்தத்தில் நடத்திக் காட்டுகிறோம்.

அருமையான கதை. 8கோடி பேர் பாண்டவர்கள் பக்கம். 10 கோடி பேர் கௌரவர் பக்கமும் சண்டை புரிகிறார்கள்.
10 அக்ரோணி கௌரவர்கள். 8 அக்ரோணி பாண்டவர்கள். அதாவது நல்ல எண்ணங்கள் எல்லாம் பாண்டவர் சேளை. கெட்ட எண்ணங்கள் எல்லாம் கௌரவர் சேனை.

ஆனால் இரண்டு எண்ணமுமே ஒன்றை ஒன்று அடித்துக் கொண்டு செத்தாக வேண்டும். அப்போதுதான் அன்கிளட்சிங் நடக்கும். இரண்டு எண்ணமுமே அங்கே இருக்கக் கூடாது. நல்லதும் இருக்கக் கூடாது. கெட்டதும் இருக்கக் கூடாது.
அதுதான் அங்கே சண்டை நடந்தது. அதுதான் அங்கே நடந்த சண்டை. இந்த எல்லா எண்ணங்களும் அழிந்து, இறுதியாக தான் மட்டுமேயாக நிறைந்திருக்கிற தனப் பரம்பொருள் சுத்த சிவமோனம்தான் கிருஷ்ணன் என்கின்ற சத்குரு ஞானகருநாதர்
ஞானசத்குருவினுடைய அவதாரத்திற்குக் காரணமே இந்த ஜீவன். தன்னுடைய சம்ஸார மாயையிலிருந்து விடுபட்டு, ஞானம் என்கிற பரநிலையை அடைவதற்குகாகத்தான் அந்த லட்சியம் மாறாமல் இருந்தோமானால் போதும். லட்சியத்தை நாம் உணருவோம்.

இங்கே ஈஸ்வரன் மிகவும் அழகாகச் சொல்கிறார். கபாலத்தின் நடுவே உன்மனதை நிலைபெறச் செய்து உங்கள் லட்சியம் என்ன என்பதை மட்டும் உணர்ந்து கொண்டே இருந்தீர்களானால். அந்த திடத் தன்மையினாலேயே எல்லா உழனெவைழைளெ ம் அழிந்து போய் அந்த லட்சியத்தை அடைவீர்கள். லட்சியம் உங்களுக்குள்ளே மலரும்.
அப்போது அந்த அகங்காரம் அழிந்து, துரியோதனன் அழிந்து, நித்யானந்த நிலை உங்களுக்குள் மலரும்.

## இலட்சிய தியானம்

இந்தத் தியானத்தை ஆழ்ந்து உள்வாங்கிக் கொள்ளுங்கள்.
கண்களை மூடி எந்தக் கட்டுறு மனப்பாங்கு வந்தாலும், எந்த எண்ணங்கள் வந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், மனத்தை நிலைபெற்றச் செய்யுங்கள்.
எந்த கட்டுறுமனப்பாங்கு வரவர மேலெழுந்தாலும், வளர்ப்புறு மனப்பாங்க மேலெழுந்தாலும், ஆச்சாரியார் conditioning எழுந்தாலும் கட்டுறு மனப்பாங்கு, எந்த கட்டுறு மனப்பாங்கு மேலே எழுந்தாலும். அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல், திடத்தன்மையினாலே லட்சியத்தை எண்ணி லட்சியத்தையே உணர்ந்து உணர்வை ஒன்றாக்கினீர்களானால், லட்சியம் அடையப்படுகின்றது.

நித்தியானந்த நிலை அடையப்படுகின்றது என்பதை உணர்ந்து கண்களை மூடி கபாலத்தின் மத்தியில் உணர்வை ஒன்றாக்கி, நித்தியானந்த நிலை மாத்திரமே, வேஙொள்ளும் வேண்டியதில்லை என்று திடத்தன்மையோடு அமர்ந்திருந்தால், அந்தத் திடத்தன்மையினாலேயே லட்சியத்தை அடைந்து விடுவீர்கள்.

இந்த ஞானக்கருத்துக்களாலும் இந்த தியானத்தாலும் அந்தத் திடத்தன்மை, நித்தியானந்த நிலையை அடைந்து, நித்தியானந்தத்தில் நிறைந்து, நித்தியானந்தத்தில் கரைந்து, நித்யானந்தமாகிட ஆசீர்வதிக்கின்றோம்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள்.**

***(தொடரும்...)***

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

**மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080**

# மலையகத்திற்கும் தமிழகத்திற்கும் ஒரேத் தமிழர்: சரவணன்


நக்கீரன்

கோலாலம்பூர், ஆக.28:

மலேசியத் திருநாட்டின் புதிய அமைச்சரவையில் ஒரே ஒரு தமிழருக்குத்தான் கேபினட் அமைச்சர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நம்பிக்கைக் கூட்டணி ஆட்சியில் நால்வருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதே என்று மலேசியவாழ் தமிழ் நெஞ்சங்கள் வருந்துகின்றன. உண்மையில் இந்த அளவிற்காவது வாய்ப்பு கிடைத்ததே என்று மலேசியத் தமிழர்கள் ஆறுதலும் தேறுதலும் பெற வேண்டும்.






எட்டு கோடி தமிழர்கள் வாழ்கின்ற இந்தியாவில் ஒரு தமிழருக்குக்கூட கேபினட் அமைச்சர் பொறுப்பை ஆர்எஸ்எஸ் ஆதிக்கம் செலுத்தும் பாஜக அரசு வழங்கவில்லை இன்று, நேற்றல்ல் கடந்த எட்டு ஆண்டுகளாக தமிழர்கள் தங்களின் தலைநிலத்திலேயே இப்படி அவமானத்திற்கும் சிறுமைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட நிலையில், "மலாய் முஸ்லிம் அதிகாரம்" என்ற கட்டமைப்பில் பாஸ் கட்சி வடிவமைத்துள்ள இன்றைய மலேசிய அரசாங்கத்தில் ஒரு தமிழருக்காவது வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று மலேசியத் தமிழர்கள் தங்களை தேற்றிக் கொள்ள வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை சிங்களரை அண்டிப் பிழைக்கும் டக்ளஸ் தேவானந்தா, வரதராஜ பெருமாள், சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கும் கருணா போன்றவர்களை சிங்கள ஆதிக்க அரசியல்வாதியர் கொண்டணைப்பதில் வியப்பில்லை.







சிங்கப்பூர் அமைச்சரவையில் மூன்று தமிழர்கள் இடம்பெற்றிருக்கின்றனர் என்றாலும் அவர்களில் துணைப் பிரதமராக இருக்கும் தர்மன் சண்முகரத்னம், ஈழத் தமிழர்வழிவந்தவர் வெளியுறவு அமைச்சராக இருக்கும் விவியன் பாலகிருஷ்ணன் தமிழ தந்தைக்கும் சீனத் தாய்க்கும் பிறந்தவர் உள்துறை அமைச்சராக இருக்கும் கே. சண்முகம் சட்ட வல்லுநர் ஆவார்.

மலேசிய அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் டத்தோஸ்ரீ மு. சரவணன், மலேசிய இந்தியர் காங்கிரஸ் இயக்கத்தின் மேநாள் தலைவர் துன் ச.சாவிவேலுவால் உருவாக்கப்பட்டவர். கட்சியின் தேசிய துணைத் தலைவராகவும் இருக்கும் இவர், மலேசிய இந்திய சமுதாயத்தைப் பிரதிநிதிக்கும் ஒரே அமைச்சராக இன்றைய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்.

தமிழகத் தமிழர்களைப் பொறுத்தவரை 1999 முதல் 2014 ஆம் ஆண்டுவரை 15 ஆண்டு காலம் பொற்காலமாகும். 1999 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு இந்தியாவை வழிநடத்திய அடல் பிஹாரி வாஜ்பாய், பாஜக பிரதமராக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு தனிப்பெரும்பான்மை இல்லாததால் 23 கட்சிகளை துணை சேர்த்துக் கொண்டு ஐந்து ஆண்டு தவணைக் காலத்தை சிந்தாமல் சிதறாமல் நிறைவேற்றி முடித்தார்.

அந்தக் காலத்தில் அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன் புதுடில்லிக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். 2000 மார்ச்-இல் பிரதமர் வாஜ்பாயை சந்தித்தபோது, "தான் சார்ந்த ஜனநாயகக் கட்சியை சமாளிப்பதே பெரும்பாடாக இருக்கிறபோது, நீங்கள் உங்கள் கட்சியையும் சேர்த்து 24 கட்சிகளை எப்படி சமாளித்து ஆட்சியை வழிநடத்துகிறீர்கள். இந்த வித்தையை எனக்கும் கொஞ்சம் சொல்லித் தாருங்களேன்" என்று நகைச்சுவையாக கேட்டபோது, அதற்கு வாயார சிந்திய சிரிப்பையே பதிலாகத் தந்தார் வாஜ்பாய்.






ஆந்த 23 கட்சிகளில் ஒன்றான திமுக-விற்கு நான்கு கேபினெட் அமைச்சர்கள், 4 துணை அமைச்சர்கள் என எட்டு பேரை புது டில்லி அமைச்சரவையில் இடம்பெற வைத்தார் தமிழ் மூதறிஞரும் அரசியல் சாணக்கியருமான கலைஞர் மு.கருணாநிதி. அடுத்த பத்து ஆண்டுகள் மன் மோகன் சிங் தலைமையிலான தேசிய முன்னணி கூட்டாட்சியிலும் அதே நான்கு கேபினெட் அமைச்சர்களாக தமிழர்களை இடம்பெற வைத்து, தமிழினம் நெஞ்சை நிமிர்த்தும்படி கலைஞர் செய்தார்.

2014 இல் நரேந்திர மோடி பிரதமர் ஆனபோது, பாஜக-விற்கு தனிப் பெரும்பான்மை கிடைத்தது. அந்தத் தேர்தலில் ஜெயலலிதா 37 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றும் அவருக்கு பயனற்றுப் போனது. பிரதமர் அல்லது துணைப் பிரதமர் கனவில் இருந்த ஜெயலலிதாவின் எண்ணத்தைத் தவிடு பொடியாக்கியவர் மோடி.

அப்போது பாஜக சார்பில் ஒருவர் மட்டும் தமிழகத்தில் வென்றார். கன்னியாகுமரி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொன்.இராதா-கிருஷ்ணன் கனரக தொழில் துறைக்கு இணை அமைச்சராக மட்டும் நியமிக்கப்பட்டார். கேபினட் அமைச்சராக அவர் தகுதி பெறவில்லை எனக் கருதினால், பாஜக கூட்டணியில் இணைந்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தர்மபுரி தொகுதியில் வென்ற அன்பு மணிக்காவது அந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கலாம். இத்தனைக்கும், மன் மோகன் சிங் அமைச்சரவையில் சுகாதாராத் துறை அமைச்சராக செயல்பட்டவர்தான் இந்த அன்புமணி.

8 கோடி தமிழர்களுக்கு இந்திய அமைச்சரவையில் உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமே என்ற எண்ணம், பிராமண மேலாதிக்கம் உள்ள பாஜக-விற்கோ ஆர்எஸ்எஸ் சுட்டிக்காட்டும் திசையில் பயணிக்கும் மோடிக்கோ ஏற்படவில்லை.

2004 இந்திய நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது, திமுக தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி தமிழகம்-புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் மொத்தமாக வென்ற நிலையில், கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி அடியோடு தோற்றது. ஒரு தொகுதியில்கூட காங்கிரஸ் வெல்லாத நிலையிலும் மலையாள மொழி பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கேரள காங்கிரஸ் தலைவர் ஏ.கே. அந்தோணியை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக்கி அவருக்கு பாதுகாப்பு அமைச்சகத்தை காங்கிரஸ் மேலிடம் ஒதுக்கியது.

அதுதான் ஜனநாயகம்.

இப்பொழுது, பாஜக அந்த ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி தொல்குடியினரான தமிழர்களை மதித்திருக்கிறதா என்றால், இல்லை என்று நறுக்கென சொல்வதே சரியான பதிலாக இருக்கும்.

2019 பொதுத் தேர்தலில் பாஜக தமிழ் நாட்டில் படுதோல்வி அடைந்தது என்னவோ உண்மைதான் ஆனாலும், மத்திய அமைச்சரவையில் தமிழ் பேசும் மக்களுக்கு உரிய மரியாதையும் பிரதிநிதித்துவமும் அளிக்க வேண்டுமே என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் தமிழருக்கான பிரதிநிதித்துவம் இல்லாமலேயே அமைச்சரவையை உருவாக்கினர். அவர்கள் நினைத்திருந்தால், பொன்.இராதாகிருஷ்ணன், கோவை சி.பி.இராதாகிருஷ்ணன் போன்ற யாராவது தமிழக பாஜக தலைவர் ஒருவரை ராஜ்யசபை உறுப்பினராக்கி, அதன்வழி ஒரு தமிழரையாவது அமைச்சராக்கி இருக்கலாம். அவர்களுக்கு மனமில்லை இந்தியாவில் வாழும் ஒரே செம்மொழியான தமிழையும் அம்மொழியைப் பேசுவோரையும் அப்பட்டமாக பாஜக இழிவு செய்து வருகிறது.

கடந்த 16-ஆவது நாடாளுமன்றத்திலாவது பொன்.இராதா கிருஷ்ணன் என இணை அமைச்சர் ஒருவர் இருந்தார். நிகழும் 17-ஆவது நாடாளுமன்றத்தில் அதுவும் இல்லாமல் போனது.

அடுத்தப் பொதுத் தேர்தல் 2024 ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெற இருக்கும் சூழ்நிலையில், தற்பொழுதுஉர்காஅ தமிழக பாஜக தலைவரும் சாதி-மத அரசியலில் பெயர் பெற்ற சீர் மரபினத் தலைவருமான எல்.முருகனை "ஒப்புக்கு சப்பாணி" என்னும் விதத்தில் தகவல் துறை இணை அமைச்சராக நியமித்து கண்கட்டி வித்தையைக் காட்ட முனைந்துள்ளது பாஜக தேசிய தலைமை மோடியும் கூடத்தான்.

நிர்மலா சீத்தாராமனும், சு.ஜெய்சங்கரும் இந்திய கேபினெட் அமைச்சர்களாக இருக்கின்றரே என்று கருதினால், அவர்கள் இருவரும் தமிழர்கள் இல்லை.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, இன்னும் சொல்லப்போனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழினத்தின்மீது பண்பாட்டு படை தொடுத்து தமிழினத்தை வேரொடும் வேரடி மண்ணோடும் சாய்த்த பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த இருவரும்.

தமிழ் பேசுகிற அனைவரும் தமிழர்கள் இல்லை உதாரணத்திற்கு, ஒரு தமிழர் சீன மொழியைக் கற்றுக் கொண்டால் அவரை சீனரென சீனர்கள் ஏற்றுக் கொள்வார்களா? ஒருகாலும் மாட்டார்கள்.

ஆக, போனது போகட்டும்; ஆனது ஆகட்டும்.

மலேசியாவைப் பொறுத்தமட்டில் சரவணன் மத்தியக் கூட்டரசில் அமைச்சராகி இருப்பது, மலேசிய அளவில் மட்டுமல்ல் உலக அளவிலும் தமிழர்க்குப் பெருமைதான்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

**Joy Square Towns**
Corebridge

**Copperhill South Barrie**
Deer Creek Fine Homes

**Alba Condos**
Edenshaw Developments Limited

**Arte Condos**
EMBLEM

**Vincent Condos**
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Guglietti B...

**Adagio Condos**
Menkes Developments Ltd.

**Kensington District Towns**
Lynbury Homes

**Minu Towns**
Stateview Homes

**Exchange District Condos 3**
Camrost Felcorp

**WestLine Condos**
CentreCourt Developments Inc.

**U.C. Tower 2**
Tribute Communities and Riocan Real Estate Investment Trust

**Verge Condos**
Riocan Real Estate Investment Trust

**Gemma Condos**
Pinnacle International



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award — 100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



# கேரளா மூலிகை மருத்துவம்

## வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

**பரம்பரை மூலிகை வைத்தியசாலை**
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும். எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

**647-294-3189**

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25

வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

மலேசிய மடல்

# சுதந்திர மலேசியா 65 ஆவது ஆண்டை எட்டுகிறது வாழ்க மலையகம்! வளர்க கூட்டு சமுதாயம்!!



நக்கீரன்

கோலாலம்பூர், ஆக.31:

ஏஎஸ்டி நேயர்கள் உள்ளிட்ட மலேசிய மக்கள் அனைவருக்கும் முதற்கண் 64 ஆவது தேசிய நாள் வாழ்த்து!

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகெங்கும் விடுதலை முழக்கம் ஓங்கி ஒலித்ததைப் போல மலாயாத் திருநாட்டிலும் விடுதலை உணர்ச்சி பீறிட்டு கிளம்பியது. நம் முன்னோர்களும் அந்நாளையத் தலைவர்களும் மலாயாவின் விடுதலைக்காக அரும்பாடு பட்டதன் விளைவாக, ஐக்கிய இராச்சியம் மலாயாவிற்கு விடுதலை அளிக்க முன்வந்தது.



பலகட்ட முன்னெடுப்பு, பேச்சுக்களின் பலனாக 1957 ஆகஸ்ட் 31 ஆம் நாளில் அந்தப் பொன்னான வேளையும் வந்தது. பிரிட்டீஷ் அரசி இரண்டாம் எலிசபெத்தின் மலாயாப் பிரதிநிதியான ஹென்றியிடம் இருந்து மலாயா விடுதலை சாசனத்தை பெற்றுக்கொண்ட தேசத் தந்தை துங்கு அப்துல் ரகுமான், மக்கள் முன்னிலையில் அதை வாசித்த பின் மெர்டேக்கா, "மெர்டேக்கா" என ஏழு முறை முழங்கினார்.

மலேசிய வரலாற்றில் சரித்திர மையமாக எந்நாளும் விளங்கும் சுதந்திர சதுக்கத்தில் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தேசத் தந்தையின் விடுதலை முழக்கத்தை ஏழு முறையும் விண்ணதிர எதிரொலித்தனர்.

தொடர்ந்து இரு நிமிடங்களுக்கு மின் விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டு மீண்டும் எரியத் தொடங்கியதும் யூனியன் கொடி இறக்கப்பட்டு, மலேசியக் கொடி ஏற்றப்பட்டது் இராணுவ இசையுடன் நாட்டுப் பண் பாடப்பட்டது. அடுத்த நொடியே 21 குண்டுகள் விண்ணில் சீறிப் பாய்ந்தன.

உண்மையில் மலாயா விடுதலைக்கான ஒப்பந்தம் 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8 ஆம் நாளிலேயே கையெழுத்தானது. துங்கு அப்துல் ரகுமான், சீன சமுதாயத் தலைவர் துன் தான் செங் லோக், இந்திய சமுதாய பெருந்தலைவர் துன் சம்பந்தன் ஆகியோர் மற்றும் பிரிட்டீஷ் அரச பிரதிநிதி ஆகியோரின் முன்னிலையில் இலண்டன் மாநகரில் கையெழுத்தானது.

அந்த நேரத்தில் கம்யூனிச அச்சுறுத்தலும் முடிவுக்கு வந்திருந்தது. இருந்தபோதும் ஒருசில நிருவாக நடைமுறையின் காரணமாக 18 மாதங்கள் கழித்தே மலாயாவிற்கான விடுதலை அதிகாரப்பூர்வ நடைமுறைக்கு வந்தது.

பொழுது புலர்ந்ததும் மலாயாவின் மாநில சுல்தான்கள், பன்னாட்டுத் தலைவர்கள், அயல்நாடுகளில் தூதரக அதிகாரிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சி கோலாலம்புரில் கோலாகலமாக நடைபெற்றது. மலாயாவைவிட 10 ஆண்டுகளுக்கு முன் இந்தியா அடைந்த விடுதலை மலாயா மக்களுக்கும் தலைவர்களுக்கும் உந்துதலையும் ஊக்கத்தையும் அளித்தன.

அதற்கு ஏற்ற வகையில் இந்தியாவின் முதல் பிரதமரும் நவீன இந்தியாவின் சிற்பியுமான ஜவஹர்லால் நேருவும் மலாயா நாட்டுடன் நட்புறவு கொண்டிருந்தார்.

மலேசிய வரலாற்றில் மூத்த, முதல் அரசியல் கட்சி மலேசிய இந்தியர் காங்கிரஸ்தான். மலாயா விடுதலை அடைவதற்கு 11 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஆகஸ்ட் திங்களில் உதயமானதுதான் மஇகா.

மஇகா-வின் முதல் தலைவர் ஜான் திவிக்கு அதிகாரப்பூர்வக் கடிதத்தை புது டில்லியில் இருந்து வழங்கியவரும் இதே நேருதான்.

அந்த நேருவும் மெர்டேக்கா விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தாய்லாந்து, ஜப்பான் நாடுகளின் மன்னர் தம்பதியர், பிரிட்டிஷ் ராணியாரின் பிரதிநிதி இளவரசர் வில்லியம் ஆகியோருடன் தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், வியட்னாம், இலங்கை, மியன்மார், கம்போடிய நாடுகளின் பிரதமர்கள், அமெரிக்க அதிபரின் பிரதிநிதியாக அந்த ஐக்கிய குடியரசின் உள்துறை அமைச்சர் உள்ளிட்ட பெருமக்கள் இந்த எழுச்சிமிகு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். போக்குவரத்து வசதி சீராக இல்லாத அந்த காலக்கட்டத்திலும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அணிதிரண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த சரித்திர நிகழ்ச்சியின் அடையாளமாக உருவானதுதுன் டத்தாரான் மெர்டேக்கா என்னும் விடுதலை சதுக்கம்.

இன்றைய இளந்தலைமுறையினர் இத்தகைய வரலாற்று நிகழ்வுகளை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்படியெல்லாம் அரும்பாடுபட்டு உருவான சுதந்திர மலேசியாவை தொடர்ந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாக தேசிய முன்னணிதான் ஆட்சி செய்து வந்தது. உலக வரலாற்றில் எந்த நாட்டிலும் நடைபெறாத அதிசயம் இது. தேசிய முன்னணி ஆட்சியில் நாடு முன்னேற்றப் பாதையில் பயணித்தது என்பதில் மாறுபட்ட கருத்தில்லை.



ஆனாலும், இது ஜனநாயக நடைமுறைக்கு ஏற்புடையதில்லை. தேர்தலுக்குத் தேர்தல் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் மாற்று அரசியலும் ஆட்சியும் அமைய வேண்டும். அப்பொழுத்தான், மக்கள் மாற்றத்தை உணர்வார்கள். தவிர, ஜனநாயக - தேர்தல் அரசியலிலும் மக்கள் ஈடுபாடு கொள்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இளைய சமுதாயத்தினருக்கு அரசியல் விழிப்புணர்வும் ஆர்வமும் ஏற்படும்.

மலேசிய அரசியலில் நீண்ட பாரம்பரிம் மிக்க தேசிய முன்னணிக்கு இத்தகைய மறுமலர்ச்சி புரிதல் எல்லாம் அடியோடு இல்லை. என்ன செய்தாவது, தில்லுமுல்லு புரிந்தாவது, தன்னை எதிர்க்கக்கூடிய வலுவான தலைவர்களை சிறையில் தள்ளியாவது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஒற்றை சிந்தனையில் இயங்குவதுதான் தேசிய முன்னணி.

வெகு நீண்ட காலத்திற்குப் பின் கடந்த பொதுத் தேர்தலின் மூலம் மக்கள் மாற்றத்தை விரும்பி, மாற்று அரசாங்கத்தை உருவாக்கினர்.

ஆனால், காலமெல்லாம் அதிகாரக் கட்டிலில் அமர்ந்து பழகிவிட்ட இந்த முன்னணியினர், மக்கள் தீர்ப்பை மதிக்காமல், துரோகியருடன் கள்ள உறவாடி, குறுக்குவழியைக் கையாண்டு, கொல்லைப்புறமாக நுழைந்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளனர்.

இது தேர்தல் நடைமுறையையும் மக்கள் தீர்ப்பையும் அப்பட்டமாக அவமதிக்கும் செயல்.

எது எவ்வாறாயினும் வருகின்ற பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் முன்பைவிட உறுதியான நிலையில் மாற்று அரசியலையும் மாற்று அரசாங்கத்தையும் உருவாக்குவார்கள் என்பதில் ஜனநாயகத்தில் பற்று வைத்துள்ள அனைவரும் நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.



வாழ்க மலேசியா, வளர்க மலேசிய கூட்டு சமுதாயம்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**


## சிந்தனைக் களம்
## (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 875 7488 3996 **Passcode:** 494913)

**11 செப்டம்பர் 2021 (சனிக்கிழமை) 9.00pm-10.30pm (கனடா-ரொறன்ரோ)**

**(இலங்கை, இந்தியா - 12 செப்டம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை 6.30am-8:00am)**
**(சிட்னி - 12 செப்டம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை 11.00-12:30pm)**

**உரைத்தொடர் - 10**

உரைப் பொருள்
**பரதக்கலை - மரபுகளும் மாற்றங்களும்**

உரையாளர்
**நாட்டிய கலாநிதி திருமதி கார்த்திகா கணேசர்**



**Director**
**Karthiga School of Dancing, Australia.**

# இவ்வார ராசிபலன்

**03-09-2021 வெள்ளி தொடக்கம் 09-09-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** சூட்சுமத்தோடு செயல்பட்டு சுபிட்ஷங்கள் பெறக்கூடிய நல்ல வாரம். மதி நுட்பம் தேவை. டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் பலன் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். அற்புதமான நாளாக அமையும். நன்மைகள் நாடிவரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: முருகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**ரிஷபம்:** வசதி வாய்ப்புக்களும், வாழ்க்கைத் தரமும் உயரக்கூடிய நல்ல வாரம். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்று உபாதை வந்துசேரும். குடும்பத்தில் கருத்து வேறு-பாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**மிதுனம்:** பற்றாக்குறைகள் நீங்கி எட்டாக்கனி கிடைக்கக் கூடிய ஏற்றமான வாரம். பொறாமைகள் விலகும்நாள். பிரார்த்தனைகள் அதிகரிக்கும். வியாபாரம் சிறக்கும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். தாய் நலனில் கவனம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன செலவு ஏற்படும். உலோகத் தொழில் லாபம் தரும். கடன் பிரச்சனைத் தீரும். ஆடம்பர எண்ணம் உருவாகும். அன்னதானம் ஆரோக்கியம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவியார், அதிர்ஷ்ட எண்: 6,1,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**கடகம்:** அச்சங்கள் விலகி அம்சங்கள் பெருகக்கூடிய நல்ல வாரம். பொருளாதாரம் உயரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச் செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ராஜயோக ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**சிம்மம்:** பிறந்த குலத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய நல்ல வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அழகுநாச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**கன்னி:** உண்மையான நன்மைகளை சந்திக்கக்கூடிய உறுதியான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதி-கமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மணக்குள கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y.V




**துலாம்:** ஆத்ம திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் க்'டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**விருச்சிகம்:** முத்துக்கு முத்தான பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய அற்புத வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவே-றும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மேட்டுப்பாளையம் பத்ரகாளியம்மன்
அதிர்ஷ்ட எண்: 4,2,1,0, அதிர்ஷ்ட நிறம், சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377






**தனுசு:** அருமையைச் சிநேகித்தால் ஆதாயம் கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொ-டிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: மும்மாரி முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** உறவுப் பெண்களால் உதவி கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். சாதனை படைக்கும் நாள். நிர்வாகம் செலவுகள் கூடும். வாய்ப்புகள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் வில-கும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத் தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியைத் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S-R




**கும்பம்:** அதிகாரப் பதவியும் அடி மனதில் திருப்தியும் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். பெருமிதம் நிறைந்த நாள். புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுப காரியம் கைகூடும். சந்தோஷம் பெருகும். தனலட்சுமி வழிபாடு பணவரவு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** விருப்பப்பட்ட விஷயங்கள் பொருத்தமாகக் கிடைக்கக்கூடிய திருத்தமான வாரம். பாராட்டுக்கள் கூடும். அர-சியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவ-ினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: வழிவிடும் வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U

-----------------------------------------

### வீணாவின் கவிக்கணை

காட்டுத்தீயின் வீரியம்
அறிவோம்,
மனித நாவின் வீரியம்
அறியோம்,
ஆழிப்பேரலை வேகமும்
அறிவோம்,
நயவஞ்சகர் செயலின் வேகம்
அறியோம்,
எரிமலையின் வெப்பமும்
அறிவோம்,
அடுத்தவர் நலன் கண்டு
எரிகின்ற உள்ளத்தை
அறியோம்,
அனைத்தும் அறிய நாம்
இறைவனுமல்ல,
அறிந்து போனால் நமக்கு
நிம்மதியுமல்ல.



# அன்பின் தொனி - 623

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

பரிசுத்தமும் நீதியும் - Holiness & Righteousness

"பரிசுத்தம் - நீதி" இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. இவ் வார்த்தைகள் இரண்டு அம்சங்களைக்கொண்ட ஒரே நிலைப்பாட்டை உடையதாய் வேதத்தில் காணப்படுகிறது. "பரிசுத்தம்" ஒருவருடைய குணாதிசயத்தோடு (character) சம்பந்தப்பட்டது, "நீதி" ஒருவருடைய நடத்தையோடு (conduct) சம்பந்தப்பட்டது. எப்படி ஒரு மரத்தின் வேரும், கனியும் நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறதோ அப்படியே இச் சொற்கள் இரண்டும் அமைந்திருக்கின்றன. வேர் இல்லாமல் கனி இருக்கமுடியாததுபோல பரிசுத்தம் இல்லாமல் நீதியாய் செயற்பட முடியாது. பரிசுத்தம்தான் எம்மை நீதியாய் நடப்பிற்கிறது.

"பரிசுத்தம்" ஒருவர் இருக்கும் நிலையை விபரிக்கிறது, "நீதி" அவருடைய நடத்தையை விபரிக்கிறது. ஆகையால் நாம் பரிசுத்தமாய் இருக்கவும் நீதியாய் நடக்கவும் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், எனவே அதற்கு அமைய ஜீவிக்க வேண்டுமாயின் எமது வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழ முன்வருவேண்டும்.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **ரோமர் - 6 : 22-23**

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம். - **2 கொரிந்தர் 7: 1**

இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். **- எபேசியர் 4: 21-24**

யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. **- எபிரேயர் 12: 14**

ஒவ்வொரு மனிதனும் பரிசுத்தமாய் வாழவேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. ஆனால் சத்துருவான பிசாசா னவன் ஒவ்வொரு மனிதனையும் தன் வசப்படுத்தி, உலக ஆசைகளைக்காட்டி அவனை கண்களின் இச்சைக்கும், மாமிசத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும், ஆளாக்கி அவனை மோசம்போக்கி, பாவத்தில் விழுத்தி அவனை பரிசுத்த வாழ்க்கை வாழ விடாதபடிக்கு தடை செய்கிறான். இந்த நிலையிலிருந்து தப்பித்து வாழவேண்டுமாயின் உலகில் ஒரே வழிதான் உண்டு. அதாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒருவன் தன் சொந்த இரட்சக ராக ஏற்றுக்கொண்டு, தேவ நீதிப்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு ஜீவிக்கும்போது சத்துருவான பிசாசின் சோதனைகட்கு ஆளாகாதபடி பரிசுத்த ஜீவியம் ஜீவித்து தேவனைப் பிரியப் படுத்தலாம்.

பரிசுத்தமும் ஆவியும் - Holiness and the Spirit

தேவன் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நாமும் இருக்க தேவன் எம்மை பரிசுத்தத்திற்கென்று அழைக்கிறார். "பரிசுத்த ஆவி" என்று கூறும்போது, ஆவியானவர் பரிசுத்தர் என்பது தெளிவாகிறது. ஆவியானவர் எமக்குள் வாசம் செய்கிறார் அல்லது ஆவியானவரால் நிரப்பப்பட்டுள்ளோம் என்று சொல்லும்போது, அவருடைய பரிசுத்தம் எமக்குள் இருக் கிறதா என்பதற்கு விடை காணவேண்டியதாய் இருக்கிறது.

பரிசுத்தம் என்றால் என்னத்தைக் கருதகிறோம்? பரிசுத்த வாழ்க்கை என்பது தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாக வாழ்ந்து, தேவ ராஜ்யத்திற்கு அடுத்தவைகளின் நோக்கத்தோடு ஜீவிப்பதாகும். இப்படியான ஒரு ஜீவியத்தை நாமாக அமைத்துக்கொள்ள நாம் தனித்து செயற்பட முடியாது. ஆவியானவர் மட்டுமே எம்மை இயேசுவின் பரிசுத்த நிலைக்கு எம்மைக் கொண்டுவர ஒத்தாசை அழிக்கமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழும்போது எமக்குள் வந்து வாசம் செய்யும் ஆவியானவர் எம்மைப் பரிசுத்தத்திற்குள் வழிநடத்துகிறார். நாம் ஒன்றிற்கும் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்தவர்களாய், உடைந்த உள்ளத்தோடு பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு எம்மை ஒப்புக்கொடுக் கும்போது, அவர்தாமே வேதாகமத்தின் வார்த்தைகளுக்கூடாக தேவனைப் பிரியப்படுத்தி வாழ்கிற வாழ்க்கையை எமக்குத் தெரியப்படுத்தி அதன்படி ஜீவிக்கிற வாஞ்சையையும் விருப்பத்தையும் எமக்குள் ஏற்படுத்துவார்.

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள்யாவும் என்னுடையவைகள், அதினாலேஅவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். **- யோவான் 16: 13-15**


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9V 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly
## Brampton

### ஞாயிறு ஆராதனை

**கிறிஸ்து இயேசுவிற்குள் அன்பான சகோதர சகோதரிகளே!**
**எமது ஞாயிறு ஆராதனை ஒவ்வொரு வாரமும் காலை 9:30 மணிக்கு**
**மீண்டும் நடைபெற ஆரம்பித்து இருப்பதை இத்தால் அறியத் தருகிறோம்.**

என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி
உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும்,
உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும்,
கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி,
அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்,
பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி,
உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப்
போஷிப்பேன், கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.
*ஏசாயா 58: 13-14*

**அன்பான தேவ மக்களே!!**
**சத்திய வேத வசனத்தின்படி பரிசுத்த ஓய்வுநாளை அனுசரித்து ஒன்றுகூடி ஆராதிக்க**
**உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.**

**பாஸ்டர் அல்பிரட் செருபிம் -- (647) 271-7645**
**15, Kenview Blvd., Unit 3 (Upstairs)**
**Brampton, ON. L6T 5G7**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



**இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்**
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**









# உதயன்






உதயம் 1326 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 3, 2021



## ‘உதயன்’ பத்திரிகையின் வெள்ளி விழா சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக வழங்கப்பெற்று வருகின்றன

கனடா உதயன்" பத்திரிகையின் நூற்று நான்கு பக்கங்கள் கொண்ட வெள்ளி விழா சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் வழங்கப்பெற்று வருகின்றன. புல வாசகர்கள் உதயன் பிரதான அலுவலகத்திற்கும் அழைத்து பிரதிகளைப் பெற்றுவருகின்றனர். இந்தவகையில் **Markham-Stouffville** தேர்தல் தொகுதியின் லிபரல் கட்சி வேட்பாளர் மருத்துவர் -டாக்டர் **Helena Jaczek** அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பிரதம ஆசிரியரால் அவருக்கு பிரதியொன்று வழங்கப்பெற்றது.

## ரொறொன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்ட ஆன்மீகச் சஞ்சிகை ‘தெய்வீகம்’

”தெய்வீகம்” என்னும் சர்வதேச ஆன்மீக காலாண்டு சஞ்சிகை கடந்த திங்கட்கிழமையன்று ரொறொன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயத்தில் மிகசிறப்பாக வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

*(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)*





## ரசிகர்கள் ஆவலோடு காத்திருந்த ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா 2021

ரசிகர்கள் மிகுந்த ஆவலோடு காத்திருந்த ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா இவ்வருடம் செப்டம்பர் மாதம் (**September** 10 - 12, 2021) நடைபெறவுள்ளது.

செப்டம்பர் 10ம் தேதி மாலை 7 மணிக்கு திரைப்பட விழா ஆரம்பித்து தொடர்ந்து 11ம் , 12ம் ஆகிய திகதிகளில் முழுமையான திரையிடல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன


விழாவில் பங்கேற்ற 250 க்கும் மேற்பட்ட படங்களில், 55 சிறந்த படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதன. இதில் 40 வரையான படங்கள் வரும் செப் 11, 12 ஆகிய தினங்கள் கனடாவில் ரொரன்ரொ நகரில் உள்ள **Woodside Square** சினிமாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

*(உள்ளே விபரமான செய்தி 21ம் பக்கத்தில்)*

## கனடாவில் ‘இகுருவி’ 10,000 காலடிகளின் நூறாவது நாள் வெற்றி விழா கொண்டாடப்பெறுகிறது

கடந்த வருடம் நடைபெற்ற **Ekuruvi Steps** போன்று இந்த வருகடந்த ஜூன் 01 ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் 08 வரை நூறு நாட்க்கள், நாள் ஒன்றுக்கு 10,000 காலடிகள் என்று இலக்கு கண்காணிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து உங்கள் உடல் உள அரோக்கியதை மேம்பெடுத்துவது மட்டுமல்லாது சமூகத்தையும் புத்துணர்ச்சியுடன் அழைத்துச்சென்ற **ekuruvi Steps** 2021 இன் நூறாவது நாள் வெற்றிவிழா வரும் புதன் கிழமை 08 ம் திகதி நடைபெறவுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 14ம் பக்கத்தில்)*

## தாக்குதல்களில் கொல்லப்பட்ட படை வீரர்களின் கதைகளைக் கவனத்துடன் கேட்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனிடம் சினத்துடன் தெரிவித்த உறவினர்கள்



ஆப்கானிஸ்தானின் காபூல் விமான நிலையத்தில் கடந்த வாரம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட அமெரிக்க கடற்படை வீரர் ஒருவரின் தந்தை, கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்பட்ட நிகழ்வில் தனது கருத்துக்களை முன்வைத்தார். அப்போது இவ்வாறான சண்டைகளில் அல்லது தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் கதைகளைக் கவனத்துடன் கேட்குமாறு ஜனாதிபதி ஜோ பைடனிடம் மிகவும் கடுமையாகத் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன

*(உள்ளே விபரமான செய்தி 10ம். பக்கத்தில்)*

## கனடியத் தமிழர் பேரவையின் இவ்வாண்டுக்கான தமிழர் நிதிசேர் நடை, “கோர்ட் டவுனி மற்றும் சேனி வென்ஜாக்” நிதியத்தை ஆதரித்து நடைபெறவுள்ளது

கனடியத் தமிழர் பேரவை பதின்மூன்றாவது வருடாந்த கனடியத் தமிழர் நிதிசேர் நடையை மேற்குறித்த நிதியத்துக்காக நிகழ்த்துவதைப் பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த நடைபயணம் செப்ரெம்பர் 12, 2021 அன்று தொம்சன் பூங்காவில் நடைபெறும். இந்த நிதிசேர் நடையில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொள்வார்கள். மேலும் கனடியத் தமிழர் பேரவை, கனடா முழுவதற்குமான தொலைதூர பங்கேற்பை ஊக்குவிக்கிறது.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*






## நோவா ஸ்கோசியா மாகாணத்தில் புதிதாய் ஆட்சி அமைத்த கொன்சர்வேர்ட்டிவ் முதலமைச்சர் டிம் ஹூஸ்டன் சுகாதார அமைப்பை சீர்திருத்துவதில் தீவிரம் காட்டுகின்றார்

அண்மையில் நோவா ஸ்கோசியா மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் முதலமைச்சர் டிம் ஹூஸ்டன் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது மாகாணத்தின் சுகாதார அமைப்பை சீர்திருத்துவதற்கான தனது தேர்தல் வாக்குறுதியை செயல்படுத்தும் வகையில் நோவா ஸ்கோசியா சுகாதார ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியை பதவி நீக்கம் செய்தார் மற்றும் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவையும் கலைத்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)*

